IV.—VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959—60.

DEMAND XLIII—CAPITAL OUTLAY ON SCHEMES OF GOVERNMENT TRADING.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, on the recommendation of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,59,20,000 under Demand XLIII—Capital Outlay on Schemes of Government Trading."

MR. SPEAKER : I understand that all Opposition Parties have agreed to support the cut motion of the hon. Member Sri S. M. Annamalai.

SRI S. M. ANNAMALAI : Sir, I move—

"That the allotment of Rs. 5,59,20,000 under Demand XLIII—Capital Outlay on Schemes of Government Trading—be reduced by Rs. 100".

MR. SPEAKER : The Demand and the cut motion are before the House for discussion. Now, how long will the Hon. Minister require for reply?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I shall now take half an hour and at the end less than half an hour.

MR. SPEAKER : I am going to apply the guillotine at one o'clock. Therefore, the Hon. Minister will please finish by one. We have now got three hours for the discussion. I shall allow 15 minutes to the mover of the cut motion and 15 minutes to the Leader of the Party who speaks last. Therefore, hon. Members must realize that it will not be possible for me to call more than 10 or 12 Members.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த டிமாண்டின் கீழ் சில இனங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன என்பதை கனம் அங்கத்தினர்கள் உணர்வார்கள். முன்பு சிவில் சப்ளை இலாகா என்று இருந்தது. அப்போது அரிசி பற்றுக்குறை இருந்த காரணமாக மக்களுக்கு அவற்றை விநியோகிக்கக் கூடிய பொறுப்பை அந்த அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருந்தது. ஹோல்சேலர் மூலமாக வாங்கி ரேஷன் ஷாப்புகள் மூலமாக விநியோகித்துக் கொண்டிருந்தது. அதற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்கள், கோடவுன்கள், வாகனங்கள் எல்லாம் இருந்தன. அப்போது ஆந்திராவும், கேரளமும், மைசூர் ராஜ்ய ஒரு பகுதியும் நம் ராஜ்யத்தோடு சேர்ந்து இருந்தது. 1954-ம் வருஷம் ஜூலை மீ 10உ கண்ட்ரோலை ரத்து செய்தோம். அப்படிச் செய்தபோது எல்லாவற்றையும் ஒயிண்டப் பண்ணி எந்த எந்த ராஜ்யத்திற்கு எவ்வளவு கொடுக்க வேண்டும் என்பது கணக்கிடப்படவேண்டியதாக இருந்தது. ராஜ்யங்கள் பிரிந்தவுடன் அந்தக் கணக்கை சரி செய்ய உடனே முடியவில்லை. இப்போது தான் மேற்கொண்டு கணக்குப் போட்டு அந்த அந்த ராஜ்யங்களுக்குச் சேர வேண்டியதை அலாட் செய்யவேண்டியிருக்கிறது. அந்த விவரத்தில் இதில் புள்ளி விவரம் இருக்கும். அது ஒன்று.

28th March 1959] [Sri M. Bhaktavatsalam]

இரண்டாவது, இப்போது அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் திட்டம்—நடவடிக்கை—2 லட்சம் டன் மில்காரர்களிடம் இருந்து அரிசி வாங்குவது என்பது எல்லோருக்கும் தெரியும். இந்தத் திட்டத்தைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்திற்கு இதிலே பிஞன்ஷியல் கமிட்மெண்டு ஒன்றும் இல்லையென்று சொல்லலாம். இதை ஜில்லா கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் வாங்குவது—வாங்கி விநியோகிப்பது என்பது இந்தத் திட்டம். இதற்கு ஸ்டேட் பாங்கில் இருந்து பத்துக் கோடி ரூபாய் வரையில் கடன் வேண்டியிருக்கிறது. அப்படிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்கள். ஆனல் இந்தக் கடனுக்கு அரசாங்கம் ஒரு காரண்டி கொடுக்க வேண்டி இருக்கிறது. அதோடு கூட்டுறவு சங்கங்களில் வைத்து பின்னல் விற்பது என்றல் விலை குறைந்தவிட்டால் அல்லது வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் நஷ்டம் ஏற்பட்டால் அந்த நஷ்டத்திற்கும் காரண்டி கொடுப்பது என்று அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது. இந்த நிபந்தனையின் பேரில் கூட்டுறவு சங்கங்கள் இரண்டு லட்சம் டன் வாங்குவது என்ற பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறது. நமக்கும் அதில் பொறுப்பு இருப்பதனல் மேல் பார்வை செய்ய சில அதிகாரிகள், சில உத்தியோகஸ்தர்கள் சிவில் சப்ளை இலாகா மூலம் நியமிக்கப்பட்டிருக்கிறர்கள். தானியங்களை வைத்துக்கொள்ள கோடவுன்கள் இல்லை. முன்பு சிவில் சப்ளை வேலை செய்தபோது 24 கோடவுன்கள் இருந்தது. பின்பு அவசியம் இல்லையென்று 1957-ம் வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதி அன்று—அந்தக் கட்டிடங்கள் மராமத்து இலாகா வசம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த மானியத்தின் கீழ் மற்றெரு இனம் மில்க் பாக்டரி. பால் உற்பத்தி செய்கிற ஸ்தாபனம் தேனம்பேட்டையில் இருக்கிறது. மற்றென்று இப்போது செயல்பட்டு வரும் மாதவரம் மில்க் காலனி, மில்க் பாக்டரி. அங்கே ஒரு டைரி, ஒரு காலனி—நாலாயிரம் மாடுகள் வைப்பது என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த வருஷ இறுதிக்குள்ளாக 500 மாடுகளைச் சேர்ப்பதற்கு வேலைகள் நடந்து கொண்டு வருகின்றன. அங்கே ஒரு காலனி வைப்பதோடு பால் சப்ளை செய்வதும் ஒரு திட்டம். அந்தத் திட்டத்திற்கு நீயூசிலந்து உதவி கிடைக்கிறது. இந்தத் திட்டத்தின் கீழ் நாற்பது லட்சத்து ஒன்பதனயிரத்து ஐநூறு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. மத்திய சர்க்காரின் கடன் உதவியும் கிடைக்கும். மத்திய சர்க்கார் நியூசிலந்தின் உதவி வாங்கிக்கொண்டு கடனக நமக்குக் கொடுக்கிறர்கள். இந்த மில்க் காலனி திட்டத்தின் கீழ் முப்பத்தேழாயிரத்து ஐநூறு படி பால் உற்பத்தி ஆகும் என்று மதிப்பிடப்படுகிறது. இப்போது சென்னை நகரத்தின் தேவை ஐம்பதாயிரம் படி பால். அதை இங்கு உற்பத்தி செய்கிற முப்பத்தேழாயிரத்து ஐநூறு படி பாலோடு சுற்றுப்புறங்களில் பால் உற்பத்தியைப் பெருக்கி தேவையை பூர்த்தி செய்துவிட முடியும் என்று நம்பப்படுகிறது. அதோடு மாதவரத்தில் மில்க் பாக்டரி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த பாக்டரியில் இப்போது டோண்டு மில்க் செய்யப்படுகிறது. இதைப்பற்றி பரிசீலனை செய்வதற்காக டாக்டர் லக்ஷ்மணசுவாமி முதலியாரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்பட்ட கமிட்டி பரிசிலனை செய்து இந்தச் சிபார்சைச் செய்தார்கள். எருமைப் பாலோடு மில்க் பவுடரைச் சேர்த்து இந்த டோண்டு மில்க் செய்யப்படுகிறது. நயமாகப் பால் வேண்டியவர்களுக்கு இது கிடைக்கிறது. ஹாஸ்பிடல்களுக்குக் கிடைக்கிறது. இந்தத் திட்டத்தில் ஐந்து லட்சத்து பத்தொன்பதாயிரத்து எழுநூறு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது—மூலதனமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இப்போதைய நிலையில் இருபதாயிரம் பவுண்டு டோண்டு மில்க் விற்கப்படுகிறது. இதை இலவசமாக—குறைந்த விலைக்குக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் இத் திட்டத்தைக் கொண்டு வந்திருந்தாலும் இந்த வருஷத்திற்கு இருபதாயிரத்து முந்நூறு ரூபாய் லாபம் கிடைக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்பு இது நஷ்டத்தில்தான் வேலை செய்து கொண்டிருந்தது.

மற்றெரு இனம் இந்த மானியத்தின் கீழ் அமோனியம் சல்பேட் விநியோகம் செய்வது. அதையும் மத்திய அரசாங்கம் உற்பத்தி செய்கிறது. வேறு உற்பத்தியையும் சேர்த்து அவர்கள் விநியோகத்திற்குக் கொடுக்கிறர்கள். இது ஏராளமாக இருந்தால் இதில் அரசாங்கம் தலையிட

[Sri M. Bhaktavatsalam] [28th March 1959

வேண்டிய அவசியம் கிடையாது. இதுவும் பற்றாக்குறை. அதுவும் பற்றாக்குறையைப் போக்க அந்நிய அரசாங்கத்திடம் அதிக விலை கொடுத்தாவது வாங்கி இங்கே குறைந்த விலைக்குக் கொடுக்கிறார்கள். ஆகவே இந்த விநியோகம் சீராக நடைபெறுவதற்கு அரசாங்கம் இதில் ஈடுபட வேண்டியிருக்கிறது. அமோனியம் சல்பேட், நைட்ரேட் உப்பு—இந்த உரங்களை வரவழைத்து அதை விநியோகம் செய்வதற்காக எண்பத்து நான்கு லட்சத்து நாற்பதாயிரத்து இருநூறு ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலும் நஷ்டம் இல்லாமல் விநியோகிக்க வேண்டும். இதற்கும் மூலதனம் வேண்டும். இதுவும் கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் விநியோகிக்கப்படவேண்டியிருக்கிறது. ஹோல்சேலர் ஜில்லாக்களில் இருக்கிறார்கள். இவர்கள் செலவுக்காக ஒரு டன்னுக்கு 5 ரூபாய் கொடுக்கப்படுகிறது. தேசீய விஸ்தரிப்புத் திட்ட வட்டாரப் பகுதியில்—இவர்கள் மூலமாகவும், கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலமாகவும், மற்ற பிராந்தியங்களில் சாதாரண வியாபாரிகள் மூலமாகவும் விநியோகிக்கப்படுகிறது. அவர்களுக்கு அமோனியம் சல்பேட்டுக்குப் டன்னுக்கு 20 ரூபாய் கமிஷனும், மற்ற உரங்களுக்குப் பத்து ரூபாய் கமிஷனும் கொடுக்கப்படுகிறது.

9-30 a.m. இந்த வியாபாரத்தில் இதற்கு முன்பு நஷ்டம் ஏற்பட்டு வந்திருக்கிறது. ஆனால் இப்போதைய நிலையில் வரவு செலவை பார்த்தால் நான்கு லட்சத்து முப்பத்தேழாயிரம் ரூபாய் லாபம் வரும் என்றுதான் தெரிகிறது. இதற்குக் காரணம் என்னவென்றால், இதற்கு முன்பு நஷ்டம் ஏற்பட்டிருந்தபோதிலும் புயல் காற்றினால் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களுக்கு தானியங்களை இலவசமாகக் கொடுத்ததில் செலவு அதிகமானது. அதனால்தான் அதிக நஷ்டம் ஏற்பட்டது. இப்போது அவைகளெல்லாம் செலவாகவே கணக்கிடப்பட்டு முந்தைய லாப நஷ்டக்கணக்கு மாற்றப்பட்டிருக்கிறது. அதில் இப்போது லாபம் தெரிகிறது. இவைகளை கூடியவரையில் லாபநஷ்டமில்லாத முறையில் விநியோகிக்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம்.

மேலும் விவசாயத்திற்கு வேண்டிய இரும்பு சாமான்கள் தொழில் இலாகாவின் மூலம் ஓரளவு ஒதுக்கப்பட்டு வினியோகிக்கப்படுகிறது. அதற்கென சில டீலர்கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். இதிலும் லாபநஷ்டமில்லாத முறையில் விநியோகிக்க வேண்டுமென்பது தான் அரசாங்கத்தின் நோக்கம்.

இன்னொரு முக்கியமான விஷயம், நான் முன்பே சொன்னது போல அரசாங்கம் இன்னும் 2 லட்சம் டன் தானியம் வாங்க உத்தேசிப்பது ஆகும். இப்போதைய அறுவடையைக் குறித்து ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்கில்லை. ஏனென்றால் உணவு தானியங்களின் விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. சில கோளாறுகளும் கூட ஏற்படுகின்றன. உணவு தானியங்கள் நடமாட்டத்தில் உள்ள மார்கெட்டில் ஸர்ப்ளஸ் 10 லட்சம் டன்னாக இருக்கும்போது அதில் 2 லட்சம் டன் தானியத்தை வாங்கி விநியோகிப்பது என்றால், அது கூட்டுறவு ஸொஸைடிகள் மூலம்தான் வாங்கப்படுகிறது என்று சொன்னேன். ஆனால் இதில் அல்டிமேட்டாக அரசாங்கத்தின் நோக்கம், ஸ்டேட் ட்ரேடிங் அமைக்க வேண்டும் என்பது ஆகும். உணவு தானியங்களைப் பொறுத்தவரையில், அவைகளை வாங்கும் பொறுப்பையும் விற்கும் பொறுப்பையும் அரசாங்கமே ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இதில் சில பேருக்கு, குறிப்பாக வர்தகர்களுக்கு, வருத்தம் ஏற்படுகிறது. அரசாங்கம் இதில் ஏன் தலையிட வேண்டும் என்று அவர்கள் நினைக்கின்றனர். இந்த 2 லட்சம் டன் தானியங்களை வாங்க வேண்டுமென்று உத்தேசித்ததை, நாம் வியாபாரம் செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன், செய்யவில்லை. விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது. அவை குறையும் என்று எதிர்பார்த்தோம். கனம் அங்கத்தினர்கள் இம்மன்றத்தில் அதைப் பற்றி கடந்த ஓராண்டு காலமாகவே கவலை தெரிவித்தனர். நான், " குறுவை சாகுபடி ஆகட்டும், அதற்குப் பிறகு பார்க்கலாம் " என்று சொன்னேன். அதற்கப்புறம் " சம்பா சாகுபடி ஆகட்டும், பார்கலாம் " என்று சொன்னேன். எவ்வளவு காலம் பொறுத்திருந்து பார்த்தபோதிலும் விலைவாசி குறையவில்லை. உற்பத்தி குறையவில்லை. இந்த ராஜ்யத்தின் தேவைக்கும் அதிக

28th March 1959] [Sri M. Bhaktavatsalam]

மாக உற்பத்தியாகி இருக்கிறது. இந்த ராஜ்யத்தின் தேவையைப் பூர்த்தி செய்வதுடன் கேரளாவிற்கும் அனுப்பக்கூடிய அளவிற்கு உற்பத்தி பெருகி இருக்கிறது. ஆனால் விலைவாசி மட்டும் குறையவில்லை. இதற்கான காரணத்தை இந்த சபையில் நான் ஏற்கெனவே விளக்கியிருக்கிறேன். சில சமயங்களில் வர்த்தகர்கள், கேவலம் ஸ்பெகுலேஷனில் ஈடுபடுகிறார்கள். உணவு தானியத்தைப் பொறுத்தவரையில் இது " நார்மல் சானல் " என்று அவர்கள் சொல்லுகிறார்கள். " நார்மல் சானல் " என்பது வாஸ்தவம்தான். அவைகளை எவ்வளவு குறைந்த விலைக்கு வாங்க முடியுமோ அவ்வளவு குறைந்த விலைக்கு வாங்கவும், எவ்வளவு அதிகமான விலைக்கு விற்கமுடியுமோ அவ்வளவு அதிகமான விலைக்கு விற்கவும் விரும்புகின்றனர். அதுதான் அவர்கள் போக்காக இருக்கிறது. அவர்களிடமிருந்து இதற்கு மாறாக வேறெதையும் நாம் எதிர்ப்பார்ப்பதற்கில்லை. வியாபாரிகளின் சேவையை நாம் குறை சொல்லவில்லை. அவர்களுடைய சேவை மக்களுக்கு அவசியம். இருந்தாலும், உணவுப் பிரச்னையைக் கவனிக்கும்போது அவர்களுடைய இந்தப் போக்கை நாம் உணராமல் இருக்க முடியாது. அவர்களுடைய இந்தப் போக்கினால் கோளாறுகள் வருகின்றன. உணவு தானியங்களைப் பொறுத்த வரையில் ஸ்டேட் ட்ரேடிங்கின் நோக்கத்தை விளக்க விரும்புகிறேன். விவசாயிகளுடைய தானியங்களுக்கு எவ்வளவு அதிகமான விலை கிடைக்கச் செய்யலாமோ அவ்வளவு அதிகமான விலை கிடைக்கச் செய்யவேண்டும். அதே சமயத்தில் பொது மக்களுக்கு அவைகளை எவ்வளவு குறைவான விலைக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமோ அவ்வளவு குறைவான விலைக்குக் கிடைக்கவும் செய்யவேண்டும். இந்த இரண்டு நோக்கங்களுக்காகவும் பாடுபடும் முயற்சியை நாம் வியாபாரிகளிடம் எதிர்பார்ப்பதற்கில்லை. வியாபாரிகள் லாபத்தையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். நியாயமான லாபத்தை எதிர்பார்த்தால் குற்றம் சொல்வதற்கில்லை. இப்போது பத்திரிகைகளிலும் இதைப் பற்றிப் புகார்கள் வருகின்றன. எனக்கும் புகார்கள் வருகின்றன. நேற்றுக்கூட கேரள வியாபாரிகளிடம் பேசிக் கொண்டிருந்தேன். அரசாங்கம் இப்போது எடுத்திருக்கும் நடவடிக்கையின் விளைவாக உணவு தானிய வியாபாரம் அப்படியே ஸ்தம்பித்துப் போய்விடுகிறது என்று அவர்கள் சொல்கிறார்கள். இப்போது கேரள ராஜ்யத்தில் இவைகளுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். தஞ்சாவூரிலிருந்து கேரளாவிற்குக் கொண்டுவரப்பட்டு அங்கே விற்கப்படும் அரிசிக்கு வண்டிச் சத்தத்தையும் சேர்த்து விலை நிர்ணயித்திருக்கிறார்கள். தஞ்சாவூரிலும், கோவையிலும் ஒரே விலைக்குத்தான் அரிசி விற்கப்படுகிறது. கோயம்புத்தூரிலிருக்கும் வியாபாரிகள் அரிசியை கேரள வியாபாரிகளுக்கு விற்கும்போது அவர்களுக்கு 1 ரூபாய் 1½ ரூபாய் அதிக லாபம் கிடைக்கிறது. எனவே அவர்கள் எல்லா அரிசியையும் கேரள வியாபாரிகளுக்கே விற்க விரும்புகின்றனர். இந்த நிலையில், கோவையில் அரிசிப் பற்றாக்குறை இருப்பதாக என்னிடம் பலர் சொல்கிறார்கள். அதற்குக் காரணம் நான் சற்று முன்பு குறிப்பிட்டதுதான். அங்கேயுள்ள அரிசி அப்படியே கேரளாவிற்குப் போகிறது. கேரளாவிற்கு ஓரளவு போகட்டும். வியாபாரிகள் அதிக லாபம் சம்பாதிக்க விரும்பினால் நமது ராஜ்யம் பாதிக்கப்படுகிறது. இந்த நிலையில் நாம் இப்போது ப்ரொக்யூர்மெண்ட் செய்வதில் இன்னும் அதிகமாக 25 சத விகிதம் ப்ரொக்யூர் செய்ய வேண்டும். தமிழ் நாட்டிலிருந்து தானியத்தை கேரள வியாபாரிகள் அடித்துக் கொண்டு போகின்றனர் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் அடித்துக் கொண்டுபோகவில்லை. கோவையிலுள்ள வியாபாரிகள்தான் அதிக லாபமடைய வேண்டுமென்ற நோக்கத்துடன் எல்லா அரிசியையும் அவர்களுக்கு விற்கின்றனர். இந்த நிலையில், மேலும் 25 சத விகிதம் உணவு தானியம் கொள்முதல் செய்து அதை தொழிலாளர் கூட்டுறவு ஸ்தாபனங்கள், ஹாஸ்டல்கள் முதலிய ஸ்தாபனங்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று உத்தேசித்திருக்கிறோம். ப்ளான்டர்ஸ் அஸோஸியேஷனிலிருந்து தந்தி வந்தது பற்றி அன்றொரு நாள் நான் சொன்னேன். அந்த ஸ்தாபனத்திற்கு உணவு தானியங்கள் ஸ்ப்ளை பண்ண பல வியாபாரிகள் இருக்கின்றனர். அவர்கள் தொழிலாளர்களையும் ப்ளான்டர்ஸ் அஸோஸியேஷனையும் காட்டி தங்களுக்குச் சலுகை வாங்கிக்கொள்ள வேண்டுமென்று

நினைக்கின்றனர். எனக்கு ஒரு வியாபாரியைப் பற்றி நன்றாகத் தெரியும். வியாபாரிகள் தானியங்களை பல இடங்களில் பதுக்கி வைத்திருக்கின்றனர். எங்களுக்குச் சலுகை கொடுக்காவிட்டால் தொழிலாளர்கள் பட்டினி கிடக்க வேண்டி வரும் என்று அவர்கள் சொல்கின்றனர். எனவே சர்க்கார் ஒரு இணைப்புத் திட்டத்தை வகுத்திருக்கிறது. உணவு தானியங்களை மேலும் 25 சத விகிதம் கொள் முதல் செய்து இதை இணைக்கத் திட்டமிட்டிருக் கிறோம். மதுரை, திருச்சி, கோவை ஆகிய எல்லா இடங்களிலும்—எந்த இடமாக இருந்தாலும்—கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாகவும் சென்னை யில் டி.யு.சி.எஸ். மூலமாகவும் இதைச் செய்யத் திட்டமிட்டிருக்கிறோம். ப்ளாண்டர்ஸ் அஸோஸியேஷனுக்கோ மற்றவர்களுக்கோ பாதகமில்லாத வகையில்தான் இதை நிறைவேற்றப் பார்க்கிறோம். இத்தகைய நட வடிக்கைகளை மேற்கொள்ளாமல் இப்போதுள்ள நிலைமையை அப்படியே நீடிக்கவிட்டால் தொல்லைகள் வரும்.

ப்ரொக்யூர்மெண்டில் எங்களுக்கு ஒரு அனுபவம் ஏற்பட்டது. தென் மண்டலத்தில் பல ராஜ்யங்கள் இருக்கின்றன. சென்னை ராஜ்யம் தனி உணவு மண்டலமாக இருக்கட்டும் என்று சொன்னோம். மத்திய அரசாங் கத்தார் அதற்கு இசையவில்லை. இப்போது இருக்கும் நிலைமையில் இந்த மண்டலத்தில் எல்லா ராஜ்யங்களிலும் விலைக்கட்டுப்பாடு வந்திருக்கிறது. ஆனால் ஆந்திராவில் அது பிரயோகிக்கப்படுவதாகத் தெரியவில்லை. நெல் லூரிலிருந்து நமது ராஜ்யத்திற்கு வரும் அரிசி கண்ட்ரோல் ப்ரைஸ்படி வருவதில்லை ; அங்குள்ள வியாபாரிகள் நம் ராஜ்யத்திற்கு அதை அதிக விலைக்குக் கொடுக்கத்தான் முன் வருகிறார்கள். "நாங்கள் தஞ்சாவூர் அரிசியைக் கொடுக்கிறோம், எங்களுக்கு ஆந்திராவிலிருந்து நெல்லூர் அரிசியை வாங்கிக் கொடுங்கள்" என்று மத்திய அரசாங்கத்தாரிடம் சொன்னோம். ஆனால் மத்திய அரசாங்கத்தார் இந்தப் பிரச்னையை உணரு வதாகத் தெரியவில்லை. "நீங்கள் பொறுத்திருங்கள்" என்று அவர்கள் சொல்கின்றனர். கேரள வியாபாரிகள் தஞ்சாவூரிலிருந்து அரிசி வாங்கு கின்றனர். நாம் நிர்ணயித்திருக்கும் விலைப்படி அவர்கள் அதை வாங்கு வதில்லை. அவர்கள் அதைவிட அதிகமான விலை கொடுத்து அதை வாங்குகிறார்கள். நம்மிடமிருந்து அரிசி வேண்டுமென்று கேரள சர்க்கார் கோரினால் அதைக் கொடுக்க நாங்கள் மறுக்கவில்லை. அதை ஓரளவு கொடுக்க நாங்கள் தயாராயிருக்கிறோம். "வியாபாரிகள் தலையிடாமல் இருந்தால் $1\frac{1}{2}$ லட்சம் டன் வரையில் நாங்களே கொடுக்கிறோம்" என்று கேரள முதல் அமைச்சரிடம் நாங்கள் சொல்லியிருக்கிறோம்.

ஆனால் வியாபாரிகளுக்கு லாபம் வருகிறது என்பதால் இங்கிருந்து அரிசி வெளியே வேகமாகப் போகிறது. தஞ்சாவூரில் இருக்கிற வியாபாரி களுக்குத்தான் லாபம் வருகிறது உங்களுக்கு ஒன்றுமில்லை என்று சொல் கிறார்கள். இப்படிப்பட்ட கோளாறுகள் எல்லாம் ஏற்படுகிறது. வியாபாரி களைப்பற்றி நான் அபாண்டமாக கூறமாட்டேன். அவர்களின் பேரில் புகார் சொல்ல எனக்கு மனமில்லை. இருந்தாலும், தங்களுக்கு லாபம் வருகிறது, ஆகவே அரிசி எங்கு வேண்டுமானாலும் போகட்டும் என்று நினைத்து காரியம் செய்வது சரியல்ல. தஞ்சாவூரில் கூட்டுறவு ஸ்தாபனங் கள் நடத்துகிறவர்கள் என்னிடம் வந்து சொல்கிறார்கள், வியாபாரிகள் வாங்கி விற்கும் மூட்டையைப் பார்த்தால் சிறு சிறு கற்களும், மண்ணும் ஓரளவு சேர்க்கப்படுகிறது என்று. விவசாயிகள் கொடுப்பதில் அல்ல. விவசாயிகளிடமிருந்து வாங்கி அதில் ஓரளவு கல்லும், மண்ணும் சேர்க்கப் படுகிறது. இப்படியெல்லாம் நடக்கிறது. எல்லாயிடங்களிலும் இப்படி நடக்கிறது என்று நான் சொல்லவில்லை. இப்பொழுது விலை ஏறிக் கொண்டே போகிறது. அதை ஓரளவு கட்டுப்பாடு செய்யவேண்டுமென்ற முறையில்தான் செய்கிறோம். விவசாயிகளுக்கும் ஆத்திரம் வருகிறது. அதிகப் படி விலை அவர்களுக்கு கிடைத்தால் அவர்களுக்குக் நல்லதுதான். குறிப்பிட்ட தாண்யத்திற்கு குறைவாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று கூறும் போது அப்போதைக்கப்போது அதில் கவனம் செலுத்தி வேண்டிய நட வடிக்கைகள் எடுத்துக் கொள்கிறோம். வியாபாரிகளை நம்பியிருந்தால், இப்பொழுது அழுகும் பொருள்களின் நிலைமை எப்படியிருக்கிறது என்

28th March 1959] [Sri M. Bhaktavatsalam]

பதை நாம் பார்க்கிறோம். மதுரையிலிருந்து பழங்கள் உற்பத்தி செய்கிறவர்கள் என்னிடம் வந்தார்கள். பழங்கள் கெட்டுப் போகிறதே, அதை வாங்கமாட்டேன் என்கிறார்களே என்று சொன்னார்கள். நான் சொன்னேன், அப்படி நீங்கள் என்னிடம் சொல்வதில் பயனில்லை. கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமையுங்கள், நீங்களே விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யுங்கள், அதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் அளிக்கும் என்று நான் அவர்களிடம் சொன்னேன். அப்படியே செய்கிறோம். இன்னும் இரண்டு நாட்களில் நாங்கள் சென்னைக்கு வருகிறோம் என்று சொன்னார்கள். உற்பத்தி செய்கிறவர்கள், விவசாயிகள். உணவு தான்யத்தைப் பொறுத்த மட்டில், இதை ஸ்டேட் ட்ரேடிங்கை, அரசாங்கமே நேரிடையாக எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியம் இன்று ஏற்பட்டுவிட்டது என்று உணர்ந்து தான் இவ்வாறு செய்கிறோம். இதில் விவசாயிகளைப் பொறுத்தமட்டில், எங்களால் விற்க முடியவில்லையே என்று சொல்கிறார்கள். அப்படி விற்க முடியாவிட்டால் நாங்களே நேராக வாங்கிக்கொள்கிறோம் என்று சொல்கிறோம். அதே போல் வியாபாரிகளுக்குக் கிடைக்கவில்லை என்று சொன்னால் நாங்கள் " ரெக்விஸிஷன் " செய்து கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம். விவசாயிகளுக்கு தொல்லை கொடுக்க வேண்டுமென்பதல்ல எங்கள் நோக்கம். முன்பு செய்த லெவி ஏற்பாடுபோல் செய்யவேண்டுமென்பதல்ல. அவர்கள், அவர்களிடமுள்ள மிச்சத்தை விற்கவேண்டும். இல்லாவிட்டால் " ரிக்விஸிஷன் " செய்கிறோம். அதை யாரும் ஒரு தொல்லையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஸ்டேட் ட்ரேடிங்கைப்பற்றி, வருகிற ஏப்ரலில் நாஷனல் டெவலெப்மெண்ட் கௌன்ஸில் கூடுகிறது, அங்கு இது பற்றி விவாதிக்கப்படும். இது, ஒரு ராஜ்யம் மட்டும் எடுத்துக் கொள்ளக்கூடியதல்ல. எல்லா ராஜ்யங்களும் யோசித்து அப்பிராயங்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதை மத்திய அரசாங்கம் நாஷனல் டெவலப்மெண்ட் கௌன்ஸிலில், ப்ளானிங் கமிஷன் முன் வைத்து முடிவு செய்ய வேண்டியது அவசியம். இருந்தாலும், இதைப் பற்றிய நமது அடிப்படையான நோக்கம் என்னவென்று விளக்க கருதுகிறேன். முக்கியமாக, இந்த ஸ்டேட் டிரேடிங்கின் நோக்கம் விலை அதிகமாகப் போவதைத் தவிர்க்க வேண்டும். இரண்டாவதாக, உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு எவ்வளவு அதிகமாக விலை கிடைக்க வேண்டுமோ அந்த விலை கிடைக்கச் செய்ய வேண்டும். மூன்றாவதாக, மார்கட்டில் சர்ப்ளஸ் எவ்வளவு இருக்கிறதோ, அவரவர்களிடம் மிச்சம் இருப்பதை விற்பது என்பதில் அரசாங்கத்திற்கு ஒரு கண்காணிப்பு இருக்கவேண்டும். அப்படி இல்லாவிட்டால் நமது ராஜ்யத்தை விட்டு வெளியே அளவு கடந்து அனுப்பிவிட்டால் அந்த ராஜ்யத்தில் உள்ளவர்கள் மட்டும் சாப்பிடுகிறார்கள் என்றால் பரவாயில்லை, ஆனால் அப்படி கண்கானிப்பு இல்லாவிட்டால் அவை என்னவாகும் என்று என்னால் சொல்ல முடியாது. அதுபற்றி உறுதி கூற முடியாது. ஆகவே அதன்மேல் ஒரு கண்காணிப்பு இருக்க வேண்டுமென்பது மூன்றாவது நோக்கம். இது, நாம் யோசிப்பதாகும். இதைப் ப்ளானிங் கமிஷனோடு கலந்து, நாஷனல் டெவலப்மெண்ட் கௌன்ஸிலில் கலந்து இதன் முடிவு உருவாக்கப்படும். ஆனால் எங்கள் நோக்கத்தை, இந்த மன்றத்தின் முன் தெரிவிப்பது என்று கருதித்தான் நான் இதைத் தெரிவிக்க விரும்புகிறேன். பின்னால் இதன் " அல்டிமேட் பாட்டேர்ன் " எப்படி இருக்க வேண்டுமென்பது பற்றி முடிவு செய்யப்படும். ஸ்டேட் ட்ரேடிங் என்பதில் ஒவ்வொரு ராஜ்யமும் தனி ஸோனாக இருக்க வேண்டும். நமது அனுபவத்தை வைத்து சொல்கிறோம், அப்படி இல்லாவிட்டால் இது சரியாக நடக்காது என்று. ஸ்டேட் ட்ரேடிங் என்று வந்தால் ஒவ்வொரு ஸ்டேட்டும் ஒரு தனி ஸோனாகத் தான் இருக்க வேண்டும். ஒவ்வொரு ராஜ்யத்திற்கும் உணவு தான்ய வியாபாரத்தில் மொனாப்பளியிருக்கவேண்டும். இந்த ராஜ்யத்திலிருந்து இன்னொரு ராஜ்யத்திற்கு நடமாற்றம் அல்லது வேறு நாட்டிலிருந்து இறக்குமதி செய்வது இதையெல்லாம் யூனியன் அரசாங்கம் செய்யட்டும். இந்த ஸ்டேட் ட்ரேடிங்கை எப்படி நடத்த நாங்கள் உத்தேசிக்கிறோம் என்று சொன்னால் " ஸ்டேட் புட்க்ரைன் கார்ப்பரேஷன் " என்று ஒரு " **Autonomous** " ; ஸ்தாபனத்தை வைத்து அவர்கள் இதை எடுத்துக் கொள்ள வேண்டும். அரசாங்கத்தின் ஏஜெண்டாக அவர்கள் அதை

எடுத்துக்கொள்ள வேண்டும். அரசாங்கம் அவர்களுக்கு அப்போதைக்கப் போது வேண்டிய உதவிகள், " **Guidance** ", " **Instructions** " இவைகளைக் கொடுக்கும். வாங்குவதும், விநியோகம் செய்வதும். எப்படி யென்றால் டிஸ்ட்ரிக்ட் கோவாப்ரேட்டிவ் மார்கட்டிங் சொஸைட்டி மூலம் வாங்கி விநியோகம் செய்வது. கிராமங்களில் இப்படி செய்வது, அல்லது வில்லேஜ் கோவாப்பரேட்டிவ் சொஸைட்டி வைத்து அவர்களே இதை வாங்கி விநியோகம் செய்வது என்றிருக்கவேண்டும். இதை லாபம், நஷ்டம் இல்லாமல் செய்வது. இப்பொழுது ரீட்டேல் வியாபாரிகள் விநி யோகித்தால் கண்ட்ரோல் இல்லை. ஆனால் அதற்கும் கட்டாயம் கண்ட் ரோல் வேண்டுமென்றுதான் நாங்கள் சொல்கிறோம். இல்லாவிட்டால் அது சரியாக நடக்காது. ஆகவே அதற்கும் கண்ட்ரோல் அவசியம் வேண்டும். கூட்டுறவு சங்கங்கள் அல்லது தனி வியாபாரிகள் நியாயமான லாபத்திற்கு விற்கவேண்டும். இதுதான் இப்போதைய திட்டம். இதைப் பற்றி இன்னும் சற்று விளக்கும் நோக்கத்தோடு ஆங்கிலத்தில் இரண் டொரு வார்த்தைகள் சொல்லி விட்டு முடித்துக்கொள்கிறேன்.

' The purpose behind the idea of State-trading in foodgrains by Government is three-fold : firstly, to put a stop to the persistent upward trend in the prices the consumer has to pay; secondly consistent with the first object to enable the producer to get for his produce the maximum price possible; thirdly to enable the Government to maintain control over the marketable surplus to meet any emergency caused by the failure of the rain or otherwise. The means by which these aims are to be achieved are two-fold; firstly, by the Government taking over the entire wholesale trade in foodgrains, and secondly by a rapid development of co-operative marketing of foodgrains on the basis of village co-operatives.

The foodgrains trade, like any other trade, is now conducted with profit as the motive, and every trader, whether wholesale or retail, wants to buy in the cheapest market and sell in the dearest. The result is that the producer and the consumer go to the wall, and there is a constant instability in the price level, which itself is made a further source of profit to the trade. This organization has to be replaced by another which does not want to make a speculative profit, but is satisfied with functioning either on a no-profit no loss basis, or on the basis of a minimum scale of profits commensurate with the services rendered. In the ultimate pattern, the State will operate the wholesale trade and the co-operatives will operate the collection of the foodgrains and function as service institutions earning minimum profits. The retail trade may be taken up by the consumers co-operatives or by small retailers who even now generaly do not get any share of the speculative profits.'

Sri S. M. ANNAMALAI : சட்டமன்ற தலைவர் அவர்களே, நான் கொடுத்திருக்கும் இந்த வெட்டுப் பிரேரணையைப் பற்றி ஒரு சில வார்த் தைகள் சொல்ல முன் வருகிறேன். இந்த உணவு தான்ய வியாபா ரத்தைக் குறித்து சர்க்காருடைய கொள்கை சரிவரயில்லை என்பதுதான் எங்கள் குற்றச்சாட்டு. சென்ற ஆண்டிலேயே நான் பலமுறை இந்த சட்டமன்றத்தின் முன்னால் விலைவாசிகள் மேலும் மேலும் உயர்ந்து கொண்டு போகிறது, அந்த விலைவாசிகளைத் தடுக்கவேண்டும், பாமர மக்கள் இதனால் பாதிக்கப்படுகிறார்கள், ஆகவே உடனடியாக சர்க்கார் இதற்கு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று பலமுறை நான் இந்த சட்ட மன்றத்தின் முன்னாலேயே கூறியிருக்கிறேன். அப்பொழுது இதே

28th March 1959] [Sri S. M. Annamalai]

அமைச்சர் அவர்கள், அப்படி ஒன்றும் விலை ஏறவில்லை, விலை அதிகமாக ஏறவில்லை, நாங்கள் பார்த்துக் கொண்டுதான் வருகிறோம், அதற்கு ஒன்றும் விலைக் கண்ட்ரோல் தேவையில்லை என்று அமைச்சர் அவர்கள் இதே சட்ட மன்றத்தின் முன்னால் பலமுறை சொல்லியிருக்கிறார்கள்.

(Deputy Speaker in the Chair.)

ஆனால் அதற்குப் பின்னால் நிலைமையை உணர்ந்து ஏதோ மக்களுடைய குறைபாடுகள் அதிகமாக இருக்கின்றன, விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது என்று நினைத்து இப்பொழுது சர்க்கார் விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். விலை நிர்ணயத்தைச் செய்து சர்க்காரே கொள்முதல் செய்வது என்ற அடிப்படையில் சர்க்காருடைய கொள்கை வகுக்கப்பட்டிருக்கிறது. என்னுடைய குற்றச்சாட்டு என்னவென்றால், சர்க்கார் எப்பொழுதோ விலையை நிர்ணயம் செய்திருக்க வேண்டும், கொள்முதல் செய்திருக்க வேண்டும் என்பதுதான். காலம் கடந்து விலை நிர்ணயம் செய்ததன் காரணமாக ஏறத்தாழ 2 இலட்சம் டன் அரிசி கொள்முதல் செய்யவேண்டுமென்று திட்டம் போட்டிருந்தாலும்கூட, சர்க்கார் விலை நிர்ணயம் செய்த பிறகு இதுவரையில் 27,000 டன் அரிசிதான் வாங்க முடிந்தது என்று நாம் அறிகிறோம். ஆனால் எந்தச் சமயத்தில் அறுவடையாகிறதோ, அறுவடையாவதற்கு முன்னாலேயே விலை நிர்ணயம் செய்து அப்பொழுதே கொள்முதல் செய்திருந்தால், 2 லட்சம் டன் அரிசி வாங்கவேண்டுமென்று போட்ட திட்டம் நல்ல முறையில் உண்மையிலேயே வெற்றி பெற்றிருக்கும். அதை விட்டுவிட்டு, காலம் கடந்து இப்பொழுது விலை நிர்ணயம் செய்து, இப்பொழுது கொள்முதல் செய்கிறோம் என்று கொள்முதல் செய்தால், உண்மையிலேயே பலன் இல்லை. அதே சமயத்தில் ஆந்திர சர்க்கார் வாங்கவில்லை, கேரள சர்க்கார் கேட்கவில்லை, ஸோனல் கவுன்சில் ஏற்பட்டு பிரயோசனம் இல்லை, எனவே நாம் தனியாகப் பிரியப் போகிறோம் என்று அமைச்சர் அவர்கள் இப்பொழுது சட்ட மன்றத்திற்கு முன் சொல்லுகிறார்கள். இதை முன்கூட்டியே சென்ற ஆண்டிலேயே, உணர்ந்து பாமர மக்கள் இதனால், வெகுவாகப்பாதிக்கப்படுவார்கள்என்கிறநிலையை உணர்ந்து, சென்ற ஆண்டிலேயே விலையை நிர்ணயம் செய்திருந்தால், இந்த அவலக் கேடான நிலை ஏற்பட்டிருக்காது. இந்த நிலையில் இந்த மாநிலத்தைப் பொறுத்த வரையில் பாமர மக்கள் கடைகளுக்குச் சென்று அரிசி கேட்டால் அரிசி சரியான முறையில் கிடைக்கவில்லை. அதுபோல சென்னையில்கூட அரிசி ஸ்டாக் இல்லை, அரிசி அதிகமாக இருப்பு இல்லை, தஞ்சாவூரிலிருந்து கொள்முதல் செய்யப்போகிறோம் என்று சொல்லக்கூடிய அவல நிலை ஏற்பட்டிருக்கிறது. பெஸாருக்குச் சென்று கேட்டாலும்கூட அரிசி கிடைக்கவில்லை. மக்கள் பரிதவிக்கிறார்கள். இந்த நிலையில் "இப்பொழுது ஏப்ரல் 2-ம் தேதி தேசீயக் கவுன்சில் கூடப்போகிறது, அதிலே விவாதிக்கப்போகிறோம். அதிலும் கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்து விநியோகிப்பதா அல்லது தனி கார்பரேஷன் ஏற்படுத்துவதா என்ற இரண்டு அடிப்படைத் தத்துவத்தை தேசீயக் கவுன்சிலில் வைத்து விவாதிக்கப்போகிறோம்" என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போல நான்கூட பத்திரிகையில் பார்த்தேன். இதற்கு முன்னால் அவர்களே சொன்னார்கள் "மத்திய சர்க்கார் கொள்முதல் செய்த உணவை எங்களுக்குத் தாருங்கள் என்றால், அவர்கள் தயங்குகிறார்கள்" என்று. மத்திய சர்க்கார் ஏன் தயங்கமாட்டார்கள்? மத்திய சர்க்கார் தமிழ் நாட்டினுடைய அவல நிலைமையை ஏன் உணர்வார்கள்? அந்த விலை நிர்ணயம் செய்வதுகூட மத்திய சர்க்கார் கையில்தான் இருக்கிறது. இப்பொழுது ஆந்திர மாநிலத்தை எடுத்துப் பார்த்தால், மத்திய சர்க்காருடைய உதவி உணவு அமைச்சர் தாமஸ் அவர்கள் அந்த இடத்தில் சென்று வியாபாரிகளை சந்தித்துப் பேசியபொழுது, வியாபாரிகள் தங்களுக்கு அதிகமாக விலை கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள். அப்பொழுது அவர் விலையை உயர்த்தமாட்டோம் என்று சொல்லியும் கூட, ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரிகள் தங்களிடம் இருக்கும் உணவு தானியத்தை கொடுக்காமல் அப்படியே நிறுத்தி வைத்துக்கொண்டிருப்பதை நாம் பார்க்கிறோம். இதனுடைய அடிப்படை என்ன? சோனல் கவுன்சில் ஏற்பட்டும்கூட பிரயோசனம் கிடையாது, அதனால் நம்

முடைய மாநிலத்திற்குப் பயனும் கிடையாது. அதே சமயத்தில் நம்முடைய மாநிலத்திலிருந்து கேரள மாநிலத்திற்கு உணவு தானியங்கள் போகாமல் இருக்கிறதா என்றால், போய்க்கொண்டுதான் இருக்கிறது. அவர்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலையைவிட அதிகமாக விலை கொடுத்து வாங்குகிறார்கள் என்று அமைச்சர் அவர்களே சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டக் கலெக்டர் அவர்கள் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அறிக்கை மூலம் கேரள சர்க்கார் இங்கே வந்து உணவு தானியத்தைக் கொள்முதல் செய்கிறார்கள், கொள்முதல் செய்வது யார் என்று புரியவில்லை, அதே சமயத்தில் தானியத்தை விற்பது யார் என்றும் தெரியவில்லை'' என்று தெரிவித்திருக்கிறார்கள். திருநெல்வேலி மாவட்டர் கலெக்டர் இம்மாதிரி அறிக்கை விடுத்திருப்பதை நான் பத்திரிகையில் பார்த்தேன். இப்படிப்பட்ட ஒரு அவல நிலை ஏற்படுவதற்கு இந்தச் சர்க்கார்தான் உண்மையான காரணம் என்று குற்றம் சாட்டுகிறேன். காரணம், சென்ற ஆண்டிலேயே இந்த விலை நிர்ணயம் செய்து, சென்ற ஆண்டிலேயே கொள்முதல் செய்திருந்தால் இப்படிப்பட்ட அவல நிலைமை உண்டாகியிருக்காது. அதுபோல அதிகாரிகளை வைத்துக் கொள்முதல் செய்தால், கல்லும், மண்ணும், கருக்காயும்தான் உண்மையிலேயே கிடைக்கும். வேண்டுமானால் அவர்களுக்கு அலுவலகத்தில் நல்ல அனுபவம் இருக்கலாம். ஆனால் வியாபாரிகளிடம் சென்றோ அல்லது விவசாயிகளிடம் சென்றோ கொள்முதல் செய்வது என்றால் அலுவலகத்தில் வேலை செய்யக்கூடிய உத்தியோகஸ்தர்களுக்கு அனுபவம் போதாது. நம்முடைய நாட்டிலுள்ள வியாபாரிகளை எடுத்துக்கொண்டால், அமைச்சர் அவர்கள் வியாபாரிகளுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டுமென்பது நோக்கமில்லை என்று சொன்னார்கள். இங்கு இருக்கக்கூடிய வியாபாரிகள் பெருச்சாளிகள். அவர்கள் பெரிய கள்ள மார்க்கெட்காரர்கள். அவர்களால் தான் இப்படிப்பட்ட விளைவு ஏற்பட்டது. அவர்களுக்கு "நாம் நல்ல முறையில் வியாபாரம் செய்து அதே சமயத்தில் பாமர மக்களுக்கும், நாட்டுக்கும் உதவி செய்ய வேண்டும்" என்ற நல்லெண்ணம் இருக்குமேயானால், நிலைமை இந்த அளவுக்கு வந்திருக்காது. சர்க்கார் வாங்குகின்ற உணவு தானியத்தில் கல்லையும், மண்ணையும் கலந்து கொடுக்கிறார்கள். ரேஷன் காலத்தில்கூட 64 படி மூட்டையை எடுத்துக்கொண்டால், அதில் 10 படி கல்லும், மண்ணும், கருக்காயும் இருக்கும். அந்த அளவுக்கு அவர்கள் சரக்குகளில் கல்லையும், மண்ணையும் சேர்த்துவிடுகிறார்கள். வியாபாரிகளுக்கு சர்க்காரிடமோ, மக்களிடமோ நல்ல நம்பிக்கை கிடையாது. அவர்களுடைய குறிக்கோள் கொள்ளை லாபம் அடிப்பதுதான். கொள்ளை லாபம் அடிப்பது ஒன்றைத் தவிர இன்று ஒருவிதமான குறிக்கோளும் நம்முடைய மாநிலத்திலுள்ள வியாபாரிகளுக்குக் கிடையாது. ஏதோ 1943-ம் ஆண்டில் நமது இந்திய நாட்டு முதல் அமைச்சர் அவர்கள் கள்ள மார்க்கெட்காரர்களை தூக்கிலிடுவோம் என்று சொன்னார்கள். அந்தத் தத்துவத்தை ஒட்டி, வியாபாரிகளின் மீது சர்க்கார் கடுமையான நடவடிக்கை எடுத்துக் கொண்டிருந்தால், இப்படி வியாபாரிகள் சர்க்காரையே ஏமாற்றக்கூடிய அளவுக்கு உண்மையாகவே நிலைமை ஏற்பட்டிருக்காது. அதைவிட்டு வியாபாரிகளிடம் இன்னும் அதிகமாகச் சலுகைகள் காண்பித்துக்கொண்டு வருவதினால், 2 லட்சம் டன் அரிசி வாங்கவேண்டுமென்று சொல்லியிருந்தும்கூட' 27,000 டன் அரிசி தான் இதுவரையில் வாங்க முடிந்திருக்கிறது. அதுவும் காலம் கடந்துதான் வாங்க முடிந்தது. இதற்கு முக்கியமான காரணம் சர்க்கார்தான் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இந்த உணவு தானியத்தை வாங்கிக் கூட்டுறவு சங்கங்களின் மூலம் நாங்கள் விநியோகிக்கப் போகிறோம் என்று சொல்லுகிறார்கள். எப்பொழுது நீங்கள் இதை விநியோகிக்கப் போகிறீர்கள்? மக்களுக்கு மேலும் அவதியில்லாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை உடனடியாக எடுக்கவேண்டும். எந்த வியாபாரி கள்ளமார்கெட் செய்தாலும் சரி, தயவு தாட்சண்யம் காட்டக்கூடாது. இப்பொழுதுகூட பத்திரிகையில் பார்த்தேன். காய்கறி வியாபாரிகள் விற்பனை வரியிலிருந்து விலக்கு அளிக்க வேண்டுமென்பதற்காக கடையடைப்புச் செய்திருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகள் நியாயமானதாக இருக்கலாம். ஆனால் கடையடைப்பு செய்து

28th March 1959] [Sri S. M. Annamalai]

விட்டு அதே சமயத்தில் கொள்ளை லாபம் அடிப்பதற்கு விற்றுக்கொண் டிருக்கிறார்கள். அதை நாம் எந்த வகையிலும் அனுமதிக்க முடியாது. அதுபோல வியாபாரிகள் கொள்ளை லாபம் அடிக்கிறார்கள் என்றால், எந்தக் காரணத்தை ஒட்டியும் நாம் அதை அனுமதிக்கக்கூடாது. அது போலத்தான் பெரிய மிராசுதார்கள் இருக்கிறார்கள். மத்தியதர மிராசு தார்களை விட்டு விட்டால், பெரிய மிராசுதார்கள் 1,000 மூட்டைகள், 500 மூட்டைகள் இப்படிப் பதுக்கி வைத்திருக்கிறார்கள். அப்படி அவர்கள் பதுக்கி வைத்திருக்கும் மூட்டைகளை சர்க்கார் வற்புறுத்தி உடனடியாக கொள் முதல் செய்ய வேண்டும். தயவு தாட்சண்யம் இல்லாமல் வியாபாரிகளிட மிருந்தும், பெரிய மிராசுதாரர்களிடமிருந்தும் கொள்முதல் செய்தால்தான், நல்ல முறையில் உணவு தானியத்தை வாங்கி மக்களுக்கு விநியோகிக்க முடியும்.

பால் பண்ணையின் மூலமாகச் சர்க்காருக்கு சென்ற ஆண்டில் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சர்க்கார் கொடுத்திருக்கக்கூடிய வரவு செலவுத் திட்டத்தைப் பார்த்தால், சென்ற ஆண்டில் ஏறத்தாழ ரூ. 87,161 நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் கூட.

"Although the production for the year 1959-60 is targeted at 7,000 lb. per day, a small loss of Rs. 13,600 is estimated due to the reasons stated above" என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இந்த ஆண்டு 13,600 ரூபாய் நஷ்டமேற்படும் என்று சொல்லப்பட்டிருக் கிறது. சென்ற ஆண்டு 87,160 ரூபாய் நஷ்டமேற்பட்டிருப்பதாகவும் சொல் லப்பட்டிருக்கிறது. இந்தவிதமான நஷ்டமேற்பட வேண்டியதன் அவசிய மென்ன ? அரசாங்கத்திலிருந்து இதற்குச் சொல்லப்படும் காரணம் என்ன வென்றால் இங்கு அதிகமான அளவில் எருமைப்பால் கிடைக்கவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் இங்கு ஒரு சமயம் கேள்விக்குப் பதில் அளிக்கும்போது ஒவ்வொரு நாளும் 7,514 படி எருமைப்பால் கிடைக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் இந்தப் புள்ளி விவரத்தில் 7,000 படி உற்பத்தியாகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. வரவு செலவுத்திட்ட புள்ளி விவரத்தில் இவ்விதமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் வேறு விதமாக இருக்கிறது. இதில் எது உண்மை என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். 10.00 a.m.

அடுத்தபடியாக அமோனியம் சல்பேட் உரம் விவசாயிகளுக்குக் கொடுக் கும் விஷயத்திலும், விவசாயிகளுக்குச் சரியாக கிடைப்பதில்லை என்கிற நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. இதைப்பற்றி வெளியே மட்டு மல்ல, இங்கு சட்டமன்றத்திலேயும் பல அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். இதற்கு முக்கிய காரணம் இதை விநியோகிப்பதற்குத் தனிப்பட்ட வியாபாரி களிடம் விட்டுக்கொடுத்திருப்பதுதான். தனிப்பட்ட வியாபாரிகளிடம் இந்த ரசாயன உர விநியோகத்தை விட்டுக் கொடுத்திருப்பதால் அவர்கள் பெரும்பாலும் அவைகளை வெளியில் கள்ளச் சாராயம் காய்ச்சுவதற்கும், அரிசியை வெள்ளையாக்குவதற்கும் உபயோகப்படுத்துவதற்காக கொடுத்து வருகிறார்கள். ஆகவே இவ்விதம் இந்த ரசாயன உர விநியோகத்தை தனிப்பட்ட வியாபாரிகளிடம் கொடுத்திருப்பதை மாற்றி கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விநியோகம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

SRI J. MATHA GOWDER : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்துச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். நம்முடைய ராஜ்யத்தில் உணவுப்பொருள்களுக்கு சென்ற ஆண்டு இருந்த விலையை விட இந்த ஆண்டு தான்யங்களின் விலை ஏறு முகமாக இருக் கிறது என்பதைப் பார்த்து சர்க்காரே இதைக் கொள்முதல் செய்து விநி யோகம் செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என்ற நோக்கத்துடன் சர்க்கார் தான்யங்களை கொள்முதல் செய்தது. சர்க்கார் தான்யங்களைக் கொள்முதல் செய்வதற்கு முன்பு சென்ற ஆண்டு சாதாரணமாக ஒரு படி அரிசியின்

விலை 1 ரூபாய் 4 அணா இருக்கவில்லை. இதைவிட மிகவும் குறைவாகவே இருந்தது. இந்த ஆண்டு விலை அதிகமாக உயர்ந்துவிட்டதின் காரணமாக சர்க்கார் விலையை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கருதி, சர்க்காரே கொள்முதல் செய்து கொள்வது என்ற முடிவுக்கு வந்த பின்னால் இப்போது சாதாரணமாக எல்லாக் கடைகளிலும் இருப்பு அதிகமாக இல்லாவிட்டாலும்கூட, ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி தாராளமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையைப் பார்க்கின்றபொழுது விலை இப்போது இறங்கி கொண்டிருக்கிறது என்பது நன்றாகத் தெரிகிறது. இந்த நிலையில் சர்க்கார் திட்டமிட்டபடி ஏன் இரண்டு லட்சம் டன் தான்யங்கள் கொள்முதல் செய்து கொள்ள முடியவில்லை என்கின்ற பிரச்னை இப்போது முக்கியமல்ல. வியாபாரிகள் அதிகமான லாபம் அடிக்கவேண்டும் என்ற எண்ணத்தினாலோ அல்லது விவசாயிகளுக்குக் குறைந்த விலையில்தான் விற்கவேண்டிய நிர்பந்தம் ஏற்படச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தினாலோ சர்க்கார் இந்தக் கொள்கையை கொண்டு வரவில்லை. பொதுவாக இதனால் விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்பதுதான் அடிப்படையான பிரச்னையாகும். அந்த முறையில்தான் கொள்முதல் செய்து விநியோகிப்பது என்ற முடிவுக்கு அரசாங்கம் வந்தது. அதெல்லாம் ஏதோ எதிர்க்கட்சி அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்டார்கள், நாங்கள் சென்ற ஆண்டிலேயே இந்த நிலைமையைப்பற்றிச் சொன்னோம், அப்போது அரசாங்கம் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை, இப்போது காலம் கடத்தி இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறார்கள், நாங்கள் சொன்னபோது தக்க நடவடிக்கை எடுத்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்று தெரிவித்தார்கள். ஆனால் சென்ற ஆண்டு இந்த அபிப்பிராயத்தைச் சொல்லக் கூடிய நேரத்தில் தான்யங்களின் விலை குறிப்பாக ஒரு படி அரிசியின் விலை 12 அணா என்கிற நிலைமை இருந்தது. அந்த நிலைமையில் தான்யங்களின் விலையை நிர்ணயம் செய்யவேண்டுமென்று அரசாங்கம் கருதவில்லை. பிறகுதான் விலை ஏறுமுகமாக இருந்தது. இவ்விதம் ஏறுமுகமாக இருந்ததின் காரணமாக அரிசியின் விலை 1 ரூபாய் 4 அணா என்கின்ற நிலையில் அரிசியின் விலை இருந்தது. இம்மாதிரி ஏறிக்கொண்டிருப்பதைப் பார்த்துத்தான் அரசாங்கம் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. அரசாங்கம் கொள்முதல் செய்து விநியோகிப்பது என்கின்ற நிலை ஏற்பட்ட பிறகு அரிசியின் விலை 1 ரூபாய் 4 அணா என்றிருந்தது குறைந்து விட்டது. ஆகவே தான்யங்களின் விலை குறைய வேண்டும் என்கின்ற அடிப்படையில் தான் சர்க்கார் கொள்முதல் செய்ய வேண்டும் என்கின்ற திட்டத்தை கொண்டு வந்தார்களே தவிர எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லும்போதெல்லாம் கட்டுப்பாடு கொண்டு வருவதும் கொள்முதல் செய்வதும் என்பது முடியாத காரியம். சாதாரணமாக விலை ஏறுமுகமாக இருக்கிறதா என்பதைத்தான் பார்க்கவேண்டுமே தவிர, பலர் சொல்லுகிறார்கள் என்பதற்காகக் கட்டுப்பாட்டை கொண்டு வர முடியாது. அதோடு இவ்விதம் கட்டுப்பாடு கொண்டு வருவதால் விவசாயிகள் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதையும் நாம் சற்று யோசித்துப் பார்க்க வேண்டும். விவசாயிகள் பாதிக்காத முறையில், தான்யங்கள் வாங்கக்கூடியவர்கள் பாதிக்காத முறையில்தான் இதைப் பரிசீலனை செய்து இது போன்ற திட்டங்களைக் கொண்டு வர முடியுமே தவிர எதிர்க் கட்சிக்காரர்கள் சொல்லுகிறார்கள் என்கின்ற காரணத்திற்காக சர்க்கார் அதையெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது என்பதைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, கேரளாவுக்கு அதிகமாகத் தான்யங்கள் போய்க்கொண்டிருக்கிறது என்பதைப்பற்றி சொல்லும்போது, இப்போது கேரளாவுக்கு அரிசிதான் போய்க்கொண்டிருக்கிறது. நெல் ஒரு படி கூட போவது கிடையாது. அரிசி போகிறது என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அரிசி போகும்போது எவ்வளவு அரிசி போகிறது என்கின்ற கணக்கை நாம் அறிந்து கொள்ள முடிகிறது. இவ்விதம் கணக்கெடுத்துக்கொள்ளக் கூடிய நிலை இருந்து கொண்டிருப்பதால் நமக்கு அரிசிப் பற்றாக்குறை ஏற்படுமானால், அதை நிறுத்துவதற்கும் என்ன செய்யலாம் என்பதைப் பற்றிச் சர்க்காருக்கு ஆலோசிக்க முடியும். அதல்லாமல் நெல்லை தடுக்கா

28th March 1959] [Sri J. Matha Gowder]

விட்டால் எத்தனை டன் போயிருக்கிறது, அல்லது இந்த ராஜ்யத்திலிருந்து எவ்வளவு நெல் வெளியே போய்க்கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிந்து கொள்ளவே இயலாமல் போய்விடும். அதோடு உற்பத்தியாகிற இடத்திலிருந்தே கேரள வியாபாரிகள் அத்தனை நெல்லையும் கொண்டு போவதற்கு வழியேற்பட்டு விடும். அதன் காரணமாக சிலவேளை நமது நாட்டுக்குப் பற்றுக்குறை நிலைமை ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஆகவே இந்த நிலைமையைப் பார்க்கும்போது நெல் போகக்கூடாது என்று தடை விதித்திருப்பது மிகவும் பொருத்தமாகவே இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமைச்சர் அவர்கள் டோனட் மில்க் பாக்டரி ஒன்று நீலகிரி ஜில்லாவில் ஆரம்பிக்கப் போவதாக முன்னால் தெரிவித்தார்கள். ஆனால் இப்போது அதைப்பற்றி ஒன்றும் குறிப்பிடவில்லை. இப்போது அதனுடைய நோக்கம் என்னவாயிற்று என்று தெரியவில்லை. நீலகிரி ஜில்லாவை எடுத்துக்கொண்டால் வேறு எந்தத் தொழிற்சாலைகளும் ஆரம்பிப்பதற்கு வசதியில்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் இந்த "டோனட் மில்க் பாக்டரி" யாவது அங்கு ஏற்படும் என்று அங்குள்ள மக்கள் எல்லோரும் சந்தோஷப்பட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இப்போது அமைச்சர் அவர்களுடைய அறிக்கையில் அதைப்பற்றி குறிப்பிடவில்லை. ஆகவே அரசாங்கத்தின் கருத்து என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தங்கள் பதிலில் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு இந்த "டோனட் மில்க் பாக்டரி" ஆரம்பிப்பதற்கு நல்ல வாய்ப்பும், வசதியும் இருக்கிறது. இதற்காக நியூஜிலாந்து சர்க்கார் உதவி கிடைக்கும் என்று தெரிகிறது. ஆகவே நியூஜிலாந்து சர்க்கார் உதவியுடன் இதை ஆரம்பிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு வெல்லக்டோண் என்ற இடத்தில் இதற்கு நல்ல வசதியிருக்கிறது, ஆகவே அங்கேயே ஒரு மில்க் பாக்டரி ஏற்படுத்தினால் சர்க்காருக்கும் நல்ல வருமானம் இருக்கும், அதோடு அங்குள்ள மக்களுக்கு இருந்து கொண்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தையும் போக்கடிக்க முடியும் என்பதையும் அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, அமோனியம் சல்பேட் விநியோகம் சம்பந்தமாக சர்க்காருக்கு சுமார் 4 லட்சம் ரூபாய் லாபம் கிடைத்திருக்கிறது என்பதைப் பார்த்துச் சந்தோஷப்படுகிறோம். ஆனால் சர்க்காருக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன். லாபம் கிடைக்க வேண்டும் என்ற ஒரு நோக்கத்துடன் மட்டும் இந்த விநியோகத்தைச் செய்யக்கூடாது. இதில் லாபத்தை கருத வேண்டிய அவசியமில்லை. இந்த உரம் தக்க காலத்தில் நேரிட மக்களுக்குப் போய் சேருகிறதா என்பதை நாம் முக்கியமாகப் பார்க்கவேண்டும். ஆகவே இதை சர்க்கார் வெறும் ட்ரேடாக மாத்திரம் வைத்துக்கொள்ளக் கூடாது. குறித்த நேரத்தில் விவசாயிகளுக்குப் பயன்படுகிற நேரத்தில் உரம் போய்ச் சேருவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்.

அடுத்தபடியாக, விவசாயக் கருவிகள் சம்பந்தமாக, "அக்ரிகல்சரல் இம்ளிமெண்ட்ஸ்" விவசாயிகளுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லாத நிலையில் கிடைப்பதற்கு வழி செய்து கொடுக்க வேண்டும். இதற்காக நம்முடைய மாநிலத்தில் ஒரு பாக்டரி ஏற்படுத்தி அதன் மூலம் விவசாயிகளுக்குப் போதுமான விவசாயக் கருவிகள் கிடைப்பதற்கு வழி செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு இன்றுள்ள சூழ்நிலையில் இரும்பு சாமான்கள் கிடைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகள் ஏதாவது தங்களுக்கு வேண்டிய இரும்பு சாமான்களை மிகவும் அதிகமான விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கிறது. இந்த நிலை மாற வேண்டும். குறைந்த அளவில் விவசாயிகள் வாங்கும்படியான நிலையில் இந்த விவசாயக் கருவிகளை எல்லாம் உற்பத்தி செய்ய வேண்டும். அதற்காக அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுத்தால்தான் இந்த நாட்டிலுள்ள ஏழை, பாட்டாளி மக்கள் நல்ல முறையில் விவசாயம் செய்ய முடியும். ஆகவே

அரசாங்கம் ஒரு பாக்டரியை ஏற்படுத்த முடியுமா என்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும் என்று அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்கிறேன். இந்த அளவிலே இந்த மாநிலத்தில் ஏற்படுத்த முடியுமா என்று பார்த்து, அம்மாதிரி ஏற்படுத்த முடியுமானால், ஏற்படுத்திய பிறகு அத்தனை பொருள்களையும் கிராமக் கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும், கூட்டுறவு ஸ்டோர்கள் மூலமாகவும் வினியோகம் செய்ய சர்க்கார் முயற்சி எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, இந்தப் பருத்தி நூலைப் பொறுத்தவரையில் நம் மாநிலத்தில் 100-ம் நம்பர் வரையில்தான் நூல் உற்பத்தியாகிறது என்று தெரியவருகிறது. 120-ம் நம்பர், 140-ம் நம்பர் நூல்களெல்லாம் நம்முடைய நாட்டிலே, இந்தியாவிலே—தயாராகவில்லை என்று தெரிய வருகிறது. அவைகளை அயல் நாடுகளிலிருந்து, நியூஸிலந்து, எகிப்து போன்ற நாடுகளிலிருந்து வாங்குகிறோம் என்று சொல்லப்படுகிறது. இங்கு சீதோஷ்ண நிலை சரியில்லை, அதனால் அந்த மாதிரியான நூல்கள் வருவதில்லை என்று சொல்லுகிறார்கள். நான் இதைப் பற்றி கோயம்புத்தூரிலுள்ள மில் அதிபர்களிடம் கேட்கும்போது, குளிர் பிரதேசத்தில் இந்த பாக்டரியை ஏற்படுத்தி, பருத்தியை இங்கிருந்து அங்கே கொண்டு போய் நூல் எடுத்தால் 140, 150-ம் நம்பர் வரையில் எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்று அவர்கள் சொன்னார்கள். அதைப் பார்க்கும்போது என்னுடைய அபிப்பிராயம் என்னவென்றால், இதற்கு நிபுணர்களைப் போட்டு நீலகிரி போன்ற குளிர் பிரதேசத்தில் இங்கு இருக்கக்கூடிய பருத்தியை அங்கே கொண்டு சென்று நூல் நூற்றால் 150-ம் நம்பர் வரையில் வருகிறதா, இல்லையா என்று ஆராய்ச்சி செய்து பார்த்தால், அதில் வெற்றி ஏற்படுமானால் வெளி நாடுகளிலிருந்து நூலகளை வர வழைக்காமல் இருந்து விடலாம். அதோடு நமது அன்னியச் செலாவணியும் மிச்சமாகும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதிலே எனக்கு அனுபவமில்லாமல் இருந்தாலும், இதைப் பற்றி கோயம்புத்தூரிலுள்ள மில்லதிபர்களைக் கேட்கும்போது இந்த யோசனையைச் சொன்னார்கள். இதைப் பற்றி நிபுணர்களைப் போட்டு நன்றாக ஆராய்ந்து நீலகிரியில் ஒரு பாக்டரி ஆரம்பிக்க முடியுமா என்று பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

Sri A. VEDARATHNAM : கனம் உப சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரிக்கும் முகத்தான் சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இப்போது இந்த உணவுக் கட்டுப்பாடு அமுலுக்கு வந்த பின் நம்முடைய மாநிலத்தின் நிலைமையை ஓரளவுக்குப் புரிந்து கொள்வதற்குச் சரியான வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. கனம் அமைச்சர் அவர்களும் அதையே தான் குறிப்பிட்டார்கள். அதைக் கூர்ந்து கண்காணித்து வருகிறோம் என்றும், நிலைமையில் மாறுதல் ஏற்படுமேயானால் தகுந்த பரிகாரம் எடுத்துக்கொள்ளப்படும் என்றும் இப்போது கூறினார்கள். இன்றைக்கு அவர்கள் இந்த நிலைமையைச் சரியாகப் பரிசீலனை செய்து அவர்களே இதில் ஒரு முடிவுக்கு வந்திருப்பது நாம் எல்லோரும் வரவேற்கத் தகுந்த விஷயம் என்று நான் கூற விரும்புகிறேன். இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தியதன் முக்கிய நோக்கம் உற்பத்தி செய்கிறவர்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும், அதே சமயத்தில் வாங்கி உண்பவர்களுக்கும் நியாயமான விலைக்கு அந்த தானியங்கள் கிடைக்க வேண்டும் என்பதுதான். இதை உத்தேசித்துத்தான் இந்த தென் மண்டலம் என்ற ஏற்பாட்டை ஏற்படுத்தி உபரியாக இருக்கிற மாநிலத்திலிருந்து பற்றாக்குறையாக இருக்கிற மாநிலத்திற்கு வாங்கிக்கொள்ளப் போதிய வசதிகள் அதில் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் மத்திய சர்க்கார் எதிர்பார்த்தபடி இந்த விஷயம் நடைபெறவில்லை. நம்முடைய ஒரு மாநிலம் வேண்டுமானால் அந்தக் கட்டுப்பாட்டை அமுலுக்குக் கொண்டுவர முயற்சியெடுத்துக் கொண்டிருக்கிறதேயல்லாது மற்ற மாநிலங்கள் இதில் கொஞ்சமாவது அக்கறை எடுத்துக்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆந்திர மாகாணம் தங்களிடத்தில் இருக்கிற உபரி தான்யத்தை மத்திய அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலைக்கு விற்கத் தயாராக இல்லை. விற்கும்படி ஆந்

திர அரசாங்கம் அவர்களைத் தூண்டவும் இல்லை. எப்படியாவது அதிக விலை கிடைத்தால்தான் விறபது என்ற நோக்கத்தோடு பல்லைக் கடித்துக் கொண்டிருக்கிறார்கள். அதே மாதிரி பற்றாக்குறைப் பிரதேசமாகிய கேரளமோ தங்களுக்கு எப்படியாவது தானியம் கிடைத்தால் போதும் என்று அவர்களும் நிர்ணயித்த விலைக்கு வாங்காமல் அதிக விலைக்கு வாங்க முன் வந்திருக்கிறார்கள். நம் மாகாணம்தான் இதற்கிடையில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடுகிறது என்று குறிப்பிட விரும்புகிறேன். நாம் என்ன கட்டுப்பாடு வைத்திருந்தபோதிலும் அதிக விலைக்கு வாங்க கேரளம் இங்கே முன் வருகிறது. அதனால் இங்கே வாங்குகிறவர்களுக்குத் தானியங்கள் கிடைக்கவில்லை. இந்த நிலைமையில் தென் மண்டல இணைப்பை வைத்துக்கொண்டிருப்பது அவசியந்தானா என்று ஆராய வேண்டிய முக்கியமான கட்டம் இப்போது வந்திருக்கிறது. சமீபத்திலே நமது அமைச்சர் அவர்கள் டில்லியில் இது சம்பந்தமாக ஒரு மாநாட்டுக்குச் செல்ல இருக்கிற காரணத்தினால், சபையின் அபிப்பிராயத்தை அவர்களுக்கு நன்றாக அறிவுறுத்தி, தென் மண்டலம்—காளையையும் கிடாரியையும் பிணைத்தது மாதிரி என்று சொல்வார்கள்—அந்த மாதிரி ஒப்பிடுகிற நிலையில் இருக்கிறது என்று அவர்களிடம் வற்புறுத்தி, இப்படிப்பட்ட இணைப்பைத் துண்டித்துக்கொள்ள முன் வரவேண்டுமென்று, இந்த அவையின் சார்பாக அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். கட்டுப்பாடு என்று சொன்னால் எல்லா இடங்களிலும் அமுலுக்கு வரவேண்டும். அப்படியில்லையென்றால் இல்லாமல் இருப்பது நலம். நம்முடைய மாகாணத்தில் நம் தேவைக்குப் போதுமான அளவு தான்யங்கள் இருக்கின்றன. அவைகளை நம் தேவைக்குப் பயன்படுத்திக்கொண்டோமானால், மற்றவர்களை நாம் எதிர்பார்க்க வேண்டிய அவசியமில்லை. வேறு மாகாணம் வந்து இங்கே வாங்குகின்றதன் மூலமாக நம்முடைய மாகாணத்தில் புதிதாகப் பற்றாக்குறை புகுத்தப்படுகிறது. இந்த நிலையிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்வதற்கு தென் மண்டல பிணைப்பிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்வார்களேயாகில் நான் பெரிய நல்ல காரியத்தைச் செய்ததாக அறியக்கூடும்.

அதே சமயத்தில், வியாபார விஷயத்தையும் அரசாங்கம் எடுத்துக் கொள்ள முன் வருவது வரவேற்கத் தகுந்தது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். வியாபாரிகள் நம்முடைய விடுதலைப் போராட்ட காலத்தில் எவ்வளவோ பேருதவி புரிந்திருக்கிறார்கள். அவர்களில் நல்லவர்கள் இல்லை என்று சொல்ல முடியாது. அத்தனை பேர்களும் பெருச்சாளிகள் என்று நான் சொல்லத் தயாரில்லை. அவர்கள் அத்தனை பேர்களும் கொள்ளைக் காரர்கள், கள்ள மார்க்கெட்காரர்கள் என்று சொல்லத் தயாராயில்லை. அவர்களில் எத்தனையோ நல்லவர்களும் இருக்கிறார்கள் என்று கூற விரும்புகிறேன். ஒரு மந்தையில் ஒரு சில ஆடுகள் கருப்பாக இருந்தால் மந்தை முழுவதும் கருப்பு ஆடுகள் என்று சொல்ல முடியாது. நல்லவர்கள் பெயரையும் கெடுத்து விடும் காரணத்தினால் இந்த மாதிரி இடையில் இருக்கிற நல்லவர்கள் அல்லாதவர்களுக்குப் பாடம் கற்பிக்க அவர்களிடத்திலிருந்து இந்தத் தானியங்களை வாங்கி மக்கள் பெறுகிற அளவிற்கு முக்கியமான இடங்களில் எல்லாம் இந்த மார்க்கெட்டை அரசாங்கம் எடுத்து நடத்துவது தவறு என்று நான் சொல்ல மாட்டேன். அவர்கள் இந்த முயற்சியை எடுத்துக் கொண்டிருப்பது வரவேற்கத் தகுந்தது என்று நான் கூற விரும்புகிறேன். ஆனால், அதே சமயத்தில் இன்னொரு எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். இது மெள்ள மெள்ள நழுவி பழைய கண்ட்ரோலுக்கு வந்து விடக் கூடாது, ரேஷன் நிலைக்குக் கொண்டு விட்டு விடக் கூடாது, என்று அமைச்சர் அவர்களுக்கு நான் பணிவோடு எடுத்துக் காட்ட விரும்புகிறேன். அதில் பழைய பெருச்சாளிகள்—கண்ட்ரோலில் சம்பாதித்த பெருச்சாளிகள், வலையில் இந்த மக்களை மாட்டி விட்டு திண்டாடக் கூடிய நிலைக்குக் கொண்டு வந்து விடாமல், அரசாங்கம் நடத்துகிறது என்ற அளவோடு நடத்த வேண்டுமென்று, ரேஷன் காலத்தை நினைக்கக்கூட அச்சமாக இருக்கிற காரணத்தினால் அந்த நிலைக்குக் கொண்டு வந்து விடாமல் இருக்கவேண்டும் என்று—நான் அமைச்சர் அவர்களைப் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன்.

நியூஸிலாந்து அரசாங்க உதவியோடு சென்னையில் பால் பண்ணையொன்று ஆரம்பிக்கின்றது மிகவும் வரவேற்கத் தகுந்த விஷயம். அது பாராட்டத் தகுந்த விஷயம் என்பதில் ஐயமில்லை. ஆனால், இதில் ஒரு விஷயம் நான் கூற விரும்புவது என்னவென்றால், பால் பண்ணையில் பால்களைத் தருவித்து, டோன்டு மில்க் தயார் செய்து அதை விநியோகம் செய்யப் போவதாக அதிகாரிகள் சொல்கிறார்கள். நம்முடைய நாட்டுக்கு டோன்டு மில்க் ஒரு புதிய விஷயமாக இருக்கலாம். அந்த டோன்டு மில்க் எப்படித் தயார் செய்யப்படுகிறது என்ற விஷயத்தை முன் ஒரு சமயம் கனம் அமைச்சர் கேள்விகளுக்குப் பதில் சொல்லும்போது, கூறி இருக்கிறார்கள். பால் பவுடரோடு தண்ணீரை ஒரு அளவுக்குக் கலந்து. .. .

The Hon. Sri M. BHAKTAVATSALAM: 'டோன்டு மில்க்' என்று நான் சொல்வது இப்பொழுது நடைபெறுகிற மில்க் பாக்டரியில் தயாரிக்கப்படுகிறது. ஆனால், மில்க் காலனி என்பது வேறு. அதில் அசல் பால் கிடைக்கும்.

Sri A. VEDARATHNAM: அதைத்தான் நான் அவர்களிடம் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்கள் ஆரம்பிக்கிற அந்தக் காலனியிலாவது கலப்படமில்லாத அசல் பாலாக இருக்கவேண்டும். டோன்டு மில்க் என்ற பெயரில் கொடுப்பதை—பால் பவுடரில் தண்ணீரைக் கலப்படம் செய்ததை—சர்க்காரிடம் விலை கொடுத்து வாங்கவேண்டியதில்லை. அவரவர்கள் வீட்டிலேயே பைப்பிலே போதுமான தண்ணீர் இருக்கிற போது, டோன்டு மில்க் என்ற பெயரில், கொழுப்புச் சத்தை நீக்கிவிட்டு கொடுப்பதை, ஏன் வாங்கவேண்டும் ? இப்படிப்பட்ட பாலை ஏழைகளுக்கு விற்கிறதில் பயன் இல்லை என்று சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள், "அங்கு அசல் பாலே விற்கப்படும்" என்று வாக்குறுதி கொடுத்ததினாலே அதை நான் வரவேற்கிறேன். அதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். அம்மாதிரி சுத்தமான பால் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டியதுதான் இதனுடைய முக்கியமான நோக்கமாக இருக்கவேண்டும் என்கிற விஷயத்தை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

நெல் வியாபாரத்திலே கூடக் கலப்படம் இருக்கிறது. கலப்படம் விஷயத்திலே தீட்சண்ணியமான மூளைகள் எல்லாம் தவறான முறையிலே வியாபாரம் செய்கின்றவர்களுக்குச் சென்று கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். அரசாங்கம் இதில் ஒரு பரீட்சை வைத்தால்கூட நலமாக இருக்கும் என்பது என்னுடைய நோக்கம். எந்த எந்த தானியத்திலே இன்ன இன்ன பொருள்களைக் கலந்தால் கண்டுபிடிக்க முடியாமல் இருக்கும் என்று பல நிபுணர்கள் இப்பொழுது புதிதாகத் தோன்றியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம், சரியான கலப்படத்தைக் கண்டுபிடிப்பதற்காக, ஒரு பரிசு கொடுக்கப்படும் என்று அறிவித்து, அந்த மாதிரி நிபுணர்களையெல்லாம் கண்டுபிடித்து அவர்களுக்கு நல்ல பரிசு கொடுத்தால் நல்லது. அந்தக் காலத்தில் கங்கையில் ஸ்நானம் பண்ணப் போகிறவர்களைத் தண்ணீருக்குள்ளே பல மணிநேரம் மூச்சை அடக்கிக்கொண்டிருக்கிறவர்கள் கங்கைக்குள் பிடித்து இழுத்துக்கொண்டுபோய் தங்கநகைகளை கழற்றிக்கொண்டு போவதாகக் கதை சொல்வார்கள். காசி அரசர் அம்மாதிரி ஒரு பரிசு வைத்தாராம். ரொம்ப நேரம் தண்ணீரில் மூச்சை அடக்கிக் கொண்டிருப்பவர்களுக்குப் பரிசு கொடுக்கப்போவதாக அறிவித்து அந்த ஆட்கள் அத்தனை பேர்களுக்கும் மறுபடியும் இந்தக் குற்றம் நடக்க முடியாதபடி, அவர்களுக்கு மரண தண்டனைப் பரிசு கொடுத்ததாகக் கூறப்படுகிறது. அம்மாதிரி கலப்படத் தயாரிப்பாளர்களுக்கு ஒரு பரிசு கொடுப்பதாகச் சொல்லி, அந்த நிபுணர்களையெல்லாம் கண்டுபிடித்து, அவர்களை எப்படியாவது இந்தச் சமூகத்திலிருந்து அப்புறப்படுத்தி, எங்காவது ஒரு தனி காலனியிலே அவர்களை வைக்க அரசாங்கம் முன்வருமானால் அது மிகவும் விரும்பத்தக்கது என்ற விஷயத்தை அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்கிறேன்.

28th March 1959] [Sri A. Vedarathnam]

உர விநியோகம் சம்பந்தமாக அவர்கள் இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கும் முயற்சியை நான் வரவேற்கிறேன். அதில் ஜில்லாதோறும் இருக்கும் ஜில்லாக் கூட்டுறவு சங்கங்களுக்கு ஐந்து சத விகிதம் லாபம் அனுமதித்திருப்பதாக அவர்கள் கூறினார்கள். அதே சமயத்தில், அதைச் சில்லரையாக விநியோகம் செய்யப்போகின்ற அந்த காலங்களில் 25 சத விகிதம் லாபம் அனுமதிக்கப்போவதாகச் சொல்கிறார்கள். ஐந்து மடங்கு அதிகமாக லாபம் அனுமதிப்பது என்பது அவசியம்தானா என்ற விஷயத்தை அவர்கள் கொஞ்சம் ஆலோசனை செய்து பார்க்கவேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கிறேன். ஜில்லா சங்கங்களுக்கு ஐந்து சதவிகிதம் அனுமதிக்கக்கூடிய காலத்தில் அதைக் காட்டிலும் இரு மடங்கு, பத்து சத விகிதம் சில்லரை விநியோகஸ்தர்களுக்கு அனுமதிக்கட்டும், $12\frac{1}{2}$ சத விகிதம் வேண்டுமானால் அனுமதிக்கட்டும். ரூபாய்க்கு இரண்டணாவுக்கு அதிகமாக லாபம் அவர்கள் பெறக்கூடிய அவசியம் இருக்கிறதா என்பதை அவர்கள் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, 25 சத விகிதம் அவர்களுக்கு லாபம் அனுமதித்து இருப்பது மிகவும் அதிகம் என்ற விஷயத்தை அவர்களுக்குக் குறிப்பிட்டுக் காட்டி, நேரம் அதிகமாகிவிட்ட காரணத்தால் இத்துடன் இந்த மான்யக் கோரிக்கையை நான் முழுமனதோடு ஆதரித்து, வெட்டுப் பிரேரணையை எதிர்க்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : 25 சத விகிதம் அல்ல. டன் ஒன்றுக்கு இருபது ரூபாய் அல்லது பத்து ரூபாய்.

* SRI V. SUBBIAH : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தின்மீதுள்ள வெட்டுப் பிரேரணையை ஆதரித்து ஒருசில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். இன்றைய கொள்முதல் முறையிலே, குறிப்பாக நமது ராஜ்யத்தில் எல்லாப் பகுதிகளிலும் விலை நிர்ணயம் ஒரேவிதமாக இருப்பதனால், உண்மையிலேயே விவசாய உற்பத்தி செய்யக் கூடிய உற்பத்தியாளர்களுக்கு அது போதுமானதாக இல்லை. அவர்களுடைய உற்பத்திச் செலவுகளை நிர்ணயித்து அரசாங்கம் இதை நிர்ணயிக்கவில்லை என்றுதான் நான் கூறமுடியும். விவசாய உற்பத்தியாளர்களுக்குக் குறிப்பாக அமோனியம் சல்பேட் வகைகள் இந்த நடப்பு வருஷத்திலே எப்படி கிடைத்தன என்பதையெல்லாம் ஓரளவு நாம் சிந்தையிலே வைத்துக்கொள்ளவேண்டும். ரூ. 58 முதல் ரூ. 68 வரையில் விலை கொடுத்து வாங்கித்தான் விவசாயிகள் இன்றைய தினம் நெல் உற்பத்தி செய்கிறார்கள் என்பதை கனம் அமைச்சர் அவர்கள் மனதில் வைத்துக் கொள்ளவேண்டும். உற்பத்திச் செலவு எவ்வளவு என்று நிதானமாகப் பார்த்து விலை நிர்ணயித்தார்களா என்று தெரியவில்லை.

ஒன்று மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். குறிப்பாக நமது ராஜ்யத்திலே இன்றைய தினம் நெல் விளையக்கூடிய பிரதேசங்களில் மட்டும் இந்த விலை இருந்தால் வரவேற்றிருக்கலாம். அதே நேரத்தில் பற்றாக் குறையாக இருக்கும் பல ஜில்லாக்கள் நம்மிடையே இருக்கின்றன. பஞ்சப் பிரதேசமாகப் பிரகடனம் படுத்திய ஏரியாக்களிலே இன்றைய தினம் அதே நிலைமை இருப்பது அவ்வளவு பொருத்தமாக இல்லை. அதற்கு ஒரு மாற்றுமுறை இருக்கவேண்டும். ஏகமாக எல்லாப் பிரதேசங்களிலும் இருப்பதைவிட விளைச்சலில் பற்றாக்குறை இருக்கும் இடங்களிலே மாறுபட்ட முறையிலே கொள்முதல் விலைவாசி கிடைக்கக்கூடிய அளவிலே நிர்ணயிக்க வேண்டும் என்பது என் ஆசை.

மற்றும் அரசாங்கம், கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிடும்போது, கூட்டுறவு முறையில்தான் நாங்கள் செய்யப்போகிறோம் என்று சொல்வதை முழுக்க முழுக்க வரவேற்றாலும்கூட இன்றைய கூட்டுறவுச் சட்டம், இன்றைய கூட்டுறவு முறையானது எப்படி நடைமுறையில் இருக்கிறது என்பதையெல்லாம் நாம் பார்க்கின்றோம். பல இடங்களிலே கூட்டுறவு முறையானது நல்ல முறையில் செயல்படாமல் இருந்ததை முன்னால் நடந்த பல காரியங்களில் நாம் பார்த்திருக்கிறோம். அவைகளில் கூட்டுறவு

முறையை மாற்றியமைத்து நல்ல ஆடிட்டர்களை வைத்து, மேற்பார்வையாளர்களையும் வைத்து, நடத்தினுல்தான் அது நல்ல முறையிலே நடக்க முடியும்.

குறிப்பாக, பஞ்சப் பிரதேசங்களுக்கு, வறண்ட பிரதேசங்களுக்கு, ஆந்திர நாட்டிலேயிருந்து நெல் வருவதற்கு வசதி செய்யவேண்டும். தாராளமாக அங்கே தனிப்பட்டவர்களோ அல்லது அரசாங்கமோ வாங்கி பஞ்சப் பிரதேசங்களுக்குக் குறைந்த விலையில் சப்ளை செய்யவேண்டுமென்ற நிலையை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால்தான் நல்ல முறையிலே அவர்களுக்கு அரசாங்கம் செய்ததாக முடியும். அரசாங்கமே எல்லாவற்றையும் கொள்முதல் செய்து, வியாபார முறையில் ஆரம்பிப்பது என்பது அவ்வளவு நல்லதா என்று மதிப்பிற்குரிய நண்பர் திரு. வேதரத்தினம் அவர்கள் குறிப்பிடும்போது சொன்னுர்கள். அது நல்லதாக இருக்கமுடியாது என்று சொன்னுர்கள். யுத்த காலத்தில் நடந்ததை நாம் பார்த்தோம். அரசாங்கம் கொள்முதல் செய்வது என்றுல், அதற்காகக் கிடங்குகள் கட்டி, தயாராக வைத்திருக்க முடியவில்லை. லட்சக்கணக்கான மூட்டைகள் அன்று மட்டமாக மக்கி மடிந்து மோசமாகப் போய்விட்டது என்று பத்திரிகையில் பார்த்தோம். அரசாங்க அறிக்கையில்கூட பார்த்திருக்கிறும். அம்மாதிரி அதற்குத் தயாராக இருந்து அம்முறையிலே அதற்கான முன் ஏற்பாடுகளையெல்லாம் செய்தால் நல்ல அர்த்தம் உண்டு. செயலிலே நல்ல முறையிலே செயில்படுகிறதா என்று பார்த்தால் அந்த அளவில் இல்லாமல், அரசாங்கமே "எல்லாவற்றையும் நாங்கள் செய்கிறும்" என்று சொன்னுல்—அரசாங்கத்தினுடைய சட்டங்களுக்கு, அரசாங்க விதிகளுக்கு ஒன்றும் குறைவில்லை, செயல் முறையிலே நடைமுறையிலே என்ன நேருகிறது என்று பார்க்கும்போது அது வேறு விதமாக இருக்கிறது. அமோனியம் சல்பேட் மூட்டை ஒன்று விலை ரூ. 35 என்று அரசாங்கம் நிர்ணயித்திருக்க, ரூ. 62 க்கு ஒரு விவசாயி வாங்க வேண்டிய நிலையில்தான் வைக்கப்படுகிறுன். விவசாயத்திற்கு வேண்டிய இரும்புச் சாமான்கள் வாங்கவேண்டுமானுல், எவ்வளவு விலை கொடுத்து வாங்கவேண்டியிருக்கிறது என்பது அமைச்சர் அவர்களுக்கே தெரிந்திருக்கலாம். அவ்வளவும் கட்டுப்பட்ட விலையில், அரசாங்கம் நிர்ணயித்திருக்கும் விலையில், எங்காவது வாங்க முடிகிறதா என்பதை அமைச்சர் அவர்கள் நன்றுக யோசிக்கவேண்டும். இதையெல்லாம் செய்தால்தான் நன்றுக இருக்கமுடியும்.

இன்று நமது ராஜ்யத்திலேயே தஞ்சை ஜில்லாவை விட்டால் வேறு இடத்தில் நெல் இல்லை என்ற நிலையிலும், குறிப்பாக அவ்வளவு நெல்லும் கேரளாவுக்குப் போய் விடுகிறது. கேரள அரசாங்கம் இன்றைக்கு விலை கூடுதலாக நிர்ணயித்திருப்பதால், இங்கேயிருக்கும் அவ்வளவு அரிசியும் போய் விடுகிறது. குறிப்பாக, எங்கள் பகுதி, திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களிலிலேயிருந்து, பக்கமாக இருக்கின்ற காரணத்தால், இரவு பகலாக லாரிகளிலே கொண்டு போய்விடுகிறுர்கள். அந்த நிலை அங்கே இருக்கிறது. இதைக் கண்டிப்பாக கட்டுப்படுத்தாவிட்டால் ஒருவிதமான மோசமான நிலை ஏற்பட்டுவிடும். பஞ்சப் பிரதேசங்களாக இருப்பவை மிகப் படுமோசமான நிலைமைக்கு வந்துவிடும். ஆகவே, அந்த நிலைமை மாறவேண்டுமானுல் தாராளமாக பஞ்சப் பிரதேசங்களுக்கு வெளியிலேயிருந்து ஆந்திரப் பிரதேசங்களிலிருந்து வரவழைத்துக் கொடுப்பதற்கு அரசாங்கம் வசதி செய்துகொடுக்கவேண்டும். அரசாங்கம் செய்தாலும் சரி, அல்லது தனிப்பட்ட வியாபாரிகள் மூலமாகவானுலும் சரி, அங்கே கொடுக்க கூடிய விலை நிர்ணயம் மட்டும் சரியாக இருக்கவேண்டும். வியாபாரிகள் கொண்டுவந்து இங்கே விற்பார்களானுல் அவர்கள் அரசாங்கம் குறிப்பிட்ட விலைக்கு விற்கிறுர்களா என்று பார்த்துக்கொள்வதற்கு மட்டும் அரசாங்கம் தயாராக இருக்கவேண்டுமே தவிர மற்றது ஒன்றையும் கவனிக்கக் கூடாது.
10-30 a.m. அப்படி இருந்தால்தான் அந்தப் பிரதேசங்களினுள்ள மக்களுக்கும் நியாயமான முறையில் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கும், உண்மையாகவே விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்கும் பொறுத்தமுள்ள விலையாக அமைய முடியும்.

28th March 1959] [Sri V. Subbiah]

உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மானியத்தில் பலதரப்பட்ட இனங்கள் இருந்தாலும்கூட கூட்டுறவு முறையின் மூலமாக எல்லாவற்றையும் வியாபாரம் செய்யலாம் என்பதைப்பற்றி கனம் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார். கிராமாந்திரங்களில் கூட்டுறவு சங்கங்களையும் பல நோக்கு சங்கங்களையும் அமைத்து அதற்கு வேண்டிய நல்ல திட்டங்களையும் தயாரித்திருக்கிறார்கள். அதைக் கண்டு பாராட்டாமல் இருக்க முடியாது. அதை நடைமுறைக்குக் கொண்டு வரும்போது பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. அதனால் அப்படிப்பட்ட சிக்கல்கள் வராமல் இருக்க தக்க சட்டங்களை இயற்றவேண்டும். கிராமங்களில் இருக்கக் கூடிய சில கூட்டுறவு சங்கங்கள் சில தனிப்பட்டவர்கள் கையில் இருப்பதாகத் தோன்றுகிறது. ஒரு வியாபாரி கையில் அந்த வியாபாரத்தைக் கொடுத்தால் அவர்கள் ப்ளாக் மார்க்கெட் செய்துவிடுவார்களோ என்ற பயம் அரசாங்கத்திற்கு இருப்பது போன்று இப்படிப்பட்ட சில கூட்டுறவு சங்கங்களிலும் அப்படிப்பட்ட பயம் இருந்து வருகிறது. ஏனென்றால் அவைகள் சில தனிப்பட்டவர்களுடைய கையில் இருப்பதால். நல்ல முறையில் மெம்பர்கள் அதன் பலனை அனுபவிக்கக் கூடிய நிலையில் அவைகளை அமைக்கவேண்டும். அதனால் இப்பொழுது இருக்கக் கூடிய மெம்பர்களைவிட இன்னும் அதிகப்படியான மெம்பர்களைச் சேர்த்து வியாபாரம் செய்யக் கூடிய அளவில் கிராமங்களில் கூட்டுறவு சங்கங்கள் இருக்கவேண்டும். நல்ல முறையில் கொள்முதல் செய்து அவற்றை நல்ல முறையில் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்குக் கட்டுபடியாகக் கூடிய முறையில் விநியோகம் செய்யக் கூடிய அளவில் அந்த கூட்டுறவு சங்கங்கள் வேலை செய்ய வேண்டும். பல கூட்டுறவு ஸ்தாபனங்கள் யுத்த காலத்தில் நல்ல முறையில் வளர்ந்து வந்தன. ஆனால் இப்பொழுது அப்படி வளருவதாக இல்லை. அப்பொழுது உணவு பொருள்களுக்கு கட்டுப்பாடு இருந்த காரணத்தால் அவைகள் நல்ல முறையில் வளர்ச்சி அடைந்தன. இப்பொழுது கட்டுப்பாடு இல்லாத காரணத்தால் சில கூட்டுறவு ஸ்தாபனங்கள் நல்ல முறையில் நடைபெற வில்லை. இப்பொழுது வியாபாரிகள் கையில் வியாபாரம் இருப்பதால் அது நல்ல முறையில் நடைபெறுகிறது. அதற்குத் காரணம் வியாபாரிகள் அதில் திறமை வாய்ந்தவர்களாக இருக்கிறார்கள். எப்படி கொள் முதல் செய்ய வேண்டுமோ அப்படிக் கொள்முதல் செய்து எப்படி எப்படி விற்க வேண்டுமோ அந்த முறையில் விற்று வருகிறார்கள். அவர்களுக்கு இருக்கக் கூடிய வசதிகள் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு இப்பொழுது இல்லை. அதனால் தான் சில கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. அதனால் பஞ்சப் பிரதேசங்களில் கூட்டுறவு சங்கங்களை அதிகப்படியாக அமைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அத்துடன் உற்பத்தி பண்ணக்கூடிய பிரதேசங்களில் விவசாயிகளுக்கு நியாய விலையில் கிடைப்பதற்கு தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வாங்கிச் சாப்பிடக் கூடியவர்களுக்கு குறைந்த விலையில் கிடைக்கக் கூடிய அளவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும் அத்துடன் நல்ல அரிசியாகப் பார்த்து கொள் முதல் செய்து, அதையும் ஜாக்கிரதையாக கொள்முதல் பண்ண வேண்டும் என்று கனம் மந்திரி அவர்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு அப்படிப்பட்ட ஏற்பாடுகளை செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் என் உரையை இத்துடன் முடித்துக்கொள்ளுகிறேன்.

* **SRI M. R. KANDASWAMI MUDALIYAR**: கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இப்பொழுது கொண்டு வந்திருக்கக் கூடிய பலதரப்பட்ட, உணவு, உரம், பால், அதைப்போன்று ஸ்டேட் ட்ரேடிங் மான்யக் கோரிக்கையை வரவேற்று சிற்சில விஷயங்களைக் கூற விரும்புகிறேன். இப்பொழுது உணவு தானியத்தின் விலையைக் கட்டுப்படுத்தி அதன் மூலம் விலையை நிர்ணயம் செய்து அதன் மூலம் விநியோகம் செய்ய முன் வந்திருக்கிறார்கள். அப்படி கட்டுப்பாடு செய்யப்பட்ட முறையில் பொது மக்களுக்கு சப்ளை செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் அதை நிர்வாகம் செய்யக் கூடிய மானியம் தேவை என்ற காரணத்தால் இதைக் கொண்டு வந்திருக்கிறார்கள். இதை நான் மனப்பூர்வமாக வர

[Sri M. R. Kandaswami Mudaliyar] [28th March 1959

வேற்கிறேன். இதைப்பற்றி ஏற்கனவே சர்க்கார் சொல்லிக்கொண்டு வந்ததை இப்பொழுது அமுல் நடத்த முன் வந்திருக்கிறார்கள். இப்பொழுது ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி அதற்கு போதாது என்ற முறையில் இந்த மானியத்தைக்கொண்டு வந்திருக்கிறார்கள். அதிகப்படியான நிதி அதற்கு வேண்டும் என்ற அடிப்படையில் இதைக்கொண்டு வந்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட கட்டுப்பாட்டினால் நாட்டிலுள்ள ஒரு சிலருக்கு நன்மை ஏற்பட்டாலும் ஒரு சிலருக்கு அவ்வளவு நன்மை ஏற்படாது என்பதையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும். அதனால் சிலர் பாதிக்கக் கூடிய நிலைமையும் ஏற்படும். உணவு உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு உணவு விலையைக் கட்டுப்படுத்தினால் அவர்களுக்கு மிகவும் கஷ்டம் ஏற்படும். அதற்குக் காரணம் அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய உரத்தின் விலை அவர்களுக்கு விவசாயத்திற்குத் தேவையான விவசாயக் கருவிகளின் விலை உயர்ந்திருக்கிறது. அவைகளை அதிகப்படியான விலை கொடுத்து வாங்க வேண்டியதாக இருக்கிறது. அவர்கள் விவசாயம் செய்து உற்பத்தி செய்யக் கூடிய உணவு தானியங்களை விலையைக் கட்டுபாடு செய்து விட்டு அவர்கள் விவசாயத்திற்கு வாங்கக்கூடிய உரம் கருவிகள் போன்றவைகளைக் கட்டுப்பாடு செய்யாமல் இருப்பதால் அவர்கள் அதை வாங்கக் கூடிய காலத்தில் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அத்துடன் அவர்களுக்கு காலா காலத்தில் கடன் வசதி கிடைப்பது இல்லை. அப்படி வெளியிடங்களில் கடன் வாங்கிக்கொண்டாலும் கடன் அதிகப்படியாக வட்டி கொடுத்து கடன் வாங்க வேண்டியதாக இருக்கிறது. ஸொஸைட்டிகள் மூலம் கடன் வாங்குவதாக இருந்தால் அவை காலாகாலத்தில் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே கூடுமான வரையில் அரசாங்கம் இவர்களுடைய கஷ்டத்தையும் உணர்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். விவசாயிகளுக்கு இப்பொழுது போதிய அளவு சாமான்கள் கிடைப்பதாக இல்லை. உரம் கிடைக்கவில்லை, எனக்கு முன்பு பேசிய பல நண்பர்களும் இதைப்பற்றியே தான் சொன்னார்கள். ஆகவே விவசாயிகளுக்கு உரம் முதலியவைகளை காலாகாலத்தில் வினியோகிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்களுக்குக் கட்டுபடியாககூடிய அளவுக்கு விலையை நிர்ணயம் செய்யவேண்டும். இதற்கு முன்பு திராவிட முன்னேற்றக் கழக அங்கத்தினர் கூட ஒரு கேள்வி கேட்டார். அவர் அப்படிக் கேட்டது எங்களுக்கு ஆச்சரியமாகவே தான் இருந்தது. அவர்களிடம் இப்படிப்பட்ட மாறுதல் ஏற்பட்டதைக் கண்டு ஆச்சரியமாகத்தான் இருந்தது. உள்ளபடியே இப்பொழுது விலையை கட்டுப்படுத்தியிருக்கிறோம். ஆனால் விவசாயிகள் என்ன சொல்லுகிறார்கள் என்றால் "நாங்கள் கட்டுப்பாடு செய்யப்பட்ட விலையில் கொடுக்கத் தயாராக இருக்கிறோம், ஆனால் வியாபாரிகள் வந்து வாங்க மாட்டேன் என்று சொல்லுகிறார்கள்" என்று சொல்லுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு கேள்வி கூட கேள்வி நேரத்தில் கேட்கப்பட்டது. ஓரளவு விவசாயிகள் கொடுக்க தயாராக இருந்தாலும் வியாபாரிகள் வாங்க மறுக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். இதற்குக் காரணம் இன்னும் அதிகப்படியான லாபம் வேண்டும் என்ற காரணத்தால் அவர்கள் வாங்காமல் இருக்கிறார்கள் என்று இதிலிருந்து தெரிய வருகிறது. அதனால் சட்ட திட்டங்களைப் போட்டு விலையை நிர்ணயம் செய்கிறார்கள். வியாபாரிகள் தங்களுடைய லாபத்தையே மனதில் கொள்ளக்கூடாது. பொது மக்கள் விஷயத்தில் அவர்கள் கொஞ்சம் தாராளமாகத் தான் இருக்கவேண்டும். பொது மக்களுடைய நலனை உத்தேசித்து வியாபாரிகள் ஓரளவு அவர்களுடைய வருவாயைக் குறைத்துக்கொள்ள முன் வரவேண்டும். தங்களுடைய லாபத்தை மாத்திரம் மனதில் கொள்ளக் கூடாது. அதனால் பல கஷ்ட நஷ்டங்கள் வந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் பொது மக்களுடைய நலனைக் கருத முன் வரவேண்டும். தேச நலனை மனதில் கொள்ள வேண்டும். தேச நலனில் அவர்களும் கொஞ்சம் பங்கு கொள்ளவேண்டும். இப்படி நடப்பதற்கு முன் அரசாங்கத்துடன் பொது மக்களுடனும் ஒத்துழைக்க முன் வரவேண்டும். இப்படிப்பட்ட அபிப்பிராயத்தைச் சொல்லும்போது அவர்கள் வருத்தப்பட்டு பிரயோசனம் இல்லை. இதற்கு முன்னதாக கண்ட்ரோல் இருந்த காலத்தில் அவர்கள் எல்லோரும் எப்படி

நடந்து கொண்டார்கள் என்பது எல்லோருக்கும் நன்ருகத் தெரியும். சில வியாபாரிகள் நல்ல முறையில் நடந்து கொண்டார்கள். சில வியாபாரிகள் தவருன முறையில் நடந்து கொண்டது நமக்கு எல்லோருக்கும் நன்ருகத் தெரியும். நிலைமையை சமாளிக்க வேண்டும் என்று அரசாங்கம் இந்தக் கட்டுப் பாட்டை கொண்டு வந்திருக்கிருர்கள். இதற்கு எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும். அந்த முறையில் தான் அரசாங்கம் வியாபாரத்தை எடுத்து நடத்த வேண்டும் என்று முன் வந்திருக்கிறது. நிலைமையை சமாளிக்க வேண்டி இப்படிப்பட்ட ஒரு முடிவுக்கு வரவேண்டியதாக இருக்கிறது. அந்த நோக்கத்துடன் இப்பொழுதுகட்டுப்பாடுகொண்டு வந்திருப்பதால் அதைக்கண்டு நான் அரசாங்கத்தைப் பாராட்டுகிறேன். கொள்முதல் செய்வதில் அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். கொள்ளை லாபம் அடிக்கக் கூடியவர்களுக்கு இடம் கொடுக்கக்கூடாது. சொசைட்டிகளின் மூலமாக வியாபாரம் செய்த போதும் சில தவறுகள் நடைபெறுகின்றன. சில சொஸைட்டிகள் நல்ல முறையில் நடந்துகொண்டிருக்கின்றன, சில சொசைட்டிகள் தவருன முறையில் நடந்துகொண்டிருக்கின்றன. சில சொசைட்டிகள் சில தனிப்பட்டவர்களுடைய கையில் அமைந்திருப்பதால் அவர்கள் லாபம் சம்பாதிக்கக் கூடிய அளவில் இருக்கிருர்கள். அவற்றையெல்லாம் நல்ல முறையில் கண்காணிக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. கொள்ளை லாபம் அடிக்காத வகையில் அரசாங்கம் கண்காணிக்க வேண்டும். அவற்றில் அரசாங்கம் தீவிரமாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கனம் அண்ணுமலை சொன்ஞர், இப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று முன்பே சொன்னேன், அப்பொழுது எடுத்துக்கொள்ளாமல் இப்பொழுது எடுத்துக்கொண்டிருக்கிருர்கள் என்று சொன்ஞர். அரசாங்கம் ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நினைத்தால் அதை உடனே கொண்டு வந்துவிட முடியாது. காலத்தை அனுசரித்து எப்படி போகிறது நிலைமை என்று பார்த்துதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். விலையை கட்டுப்படுத்தக்கூடிய அளவுக்கு நிலைமை எற்படுகிறதா இல்லையா என்பதைப் பார்த்துதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதாக இருக்கிறது. அவ்வப்போது ஏற்படக் கூடிய நிலையை கவனித்துதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள முடியும். பொது மக்களுடைய நன்மையைக் கருதி அவர்களுக்கு ஏதாவது வழி காண முடியுமா என்பதை பார்த்துத் தான் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். தவறு செய்து கொண்டிருப்பவர்களைக் கண்டுபிடித்து தண்டனை கொடுத்துக்கொண்டு தான் வருகிருர்கள். தவறுகள் செய்கிறவர்கள் அத்தனை பேர்களையும் தண்டிப்பது என்பது முடியாது என்பதை முதலில் உணரவேண்டும். சட்டங்களை மீறுகிற அவ்வளவு பேர்களையும் தூக்கிலிட முடியாது என்பதையும் அங்கத்தினர் உணர வேண்டும். குற்றம் செய்கிறவர்களை கண்டு பிடித்து தண்டனை கொடுத்துக்கொண்டு தான் வருகிருர்கள்.

இன்று நம்முடைய நாட்டுக்குத் தேவையான உணவு உற்பத்தியாகாமல் பற்ருக்குறை இருப்பதால் விலையைக் கட்டுப்படுத்திய நிலைமையிலும் விலை 10-40 p.m.
உயர்ந்துகொண்டிருக்கிறது. அதிகமாக உணவு உற்பத்தி செய்யவேண்டுமென்று சொன்ஞல் விவசாயிகளுக்குச் சில சலுகைகள் கொடுக்கப்பட வேண்டும். உரக் கொள்முதலை அரசாங்கம் எற்று கிராம சொசைடிகள் மூலம் விவசாயிகளுக்கு அதிக சிரமம் இல்லாதபடி, அதிகக் காலதாமதமாகாதபடி விவசாயிகளுக்கு வினியோகம் செய்ய வேண்டும். தேவைக்குத் தகுந்த அளவு காலாகாலத்தில் அவர்களுக்கு உரம் சப்ளை செய்தால் தான் விவசாயிகள் நல்லமுறையில் உணவு தானியங்களை உற்பத்தி செய்ய முடியும். இதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இதுதான் சிறந்த முறை என்று கூற விரும்புகிறேன்.

விவசாயிகளுக்கு வேண்டிய இரும்பு சாமான்கள் குறைந்த விலைக்குக் கிடைப்பதில்லை. ஒரு "கொழு" வாங்கவேண்டுமென்று சொன்ஞல் கூட அரசாங்கம் நிர்ணயித்திருக்கிற விலையை விட ஒரு மடங்கு அல்லது

ஒன்றரை மடங்கு அதிகமாகக் கொடுத்து வாங்கவேண்டிய நிலைமையில் விவசாயிகள் இருக்கின்றார்கள். சேலம் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கும் இடத்திற்குப் போய் சாமான்கள் வாங்கவேண்டுமென்று சொன்னால் செலவு மேலும் அதிகமாகிறது. இரும்பு உரம் போன்றவைகளை அந்தந்த கிராம சொசைடிகள் அந்தந்த கிராமப் பண்ணைகளுக்கு, அங்குள்ள விவசாயி களுக்கு எவ்வளவு தேவை என்பதையறிந்து அந்த அளவுக்கு விலையை நிர்ணயம் செய்து சப்ளை செய்ய அரசாங்கம் ஏற்பாடு செய்தால் நன்றாக இருக்கும் என்று அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்பொழுது நம்முடைய நாட்டிலுள்ள மக்கள் தேக ஆரோக்கியம் குன்றி இருக்கிறார்கள். அவர்கள் தேகத்திற்கு பலமுறை, பால் பண்ணைகள் வைத்து குறைந்த விலையில் பால் கிடைக்கச் செய்வதவசியம். நமக்கு நியூஜிலாந்தின் உதவி கிடைத்திருக்கிறது. இப்பொழுது பால் சப்ளை சொசைடிகள் ஏற்படுத்துவதற்கான திட்டம் இருப்பது கண்டு சந்தோஷப்படு கிறேன். அந்தப் பால் விநியோகமானது நல்ல முறையில், எல்லோருக்கும் கிடைக்கும் அளவில் ஏற்படுத்தவேண்டும். கிராம மக்களுக்குக் கூட பால் கிடைக்கும் அளவில் கிராமங்களில் பால் சப்ளை யூனியன்களை ஏற்படுத்தி அதை அபிவிருத்தி செய்து கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன்.

மாதா கவுடர் ஒன்று சொன்னார்கள். எனக்குக் கூடச் சந்தேகந்தான். இந்த நீண்ட இலை பருத்தி ஈஜிப்டில் இருந்துதான் வருகிறது. இங்கு உற்பத்தியாகவில்லை என்று சொல்லுகிறார்கள். இதன் மூலம் உற்பத்தி யாகும் நூலை வாங்குவதற்காக பல கோடிக்கணக்கான ரூபாய்களை வெளி நாட்டுக்குக் கொடுக்கவேண்டியிருக்கிறது. வெளி நாட்டுச் செலாவணிக் கஷ்டம் இருக்கும் சமயத்தில் இவ்வளவு தொகையைக் கொடுக்கவேண்டி யிருக்கிறது. குளிர்ச்சி பொருந்திய இடங்களில்தான் அந்த நூலை நூற்க முடியும் என்று சில அனுபவஸ்தர்கள் சொல்லுகிறார்கள். அரசாங்கம் இதைப் பற்றி நன்றாகத் கவனித்து அதற்கேற்ற சீதோஷ்ண ஸ்திதி யுள்ள இடத்தில் அந்த நூல் நூற்கும் தொழிற்சாலையை ஏற்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அதன் காரணமாக வெளிநாட்டுக்குச் செல்லக் கூடிய பணம் தடைபடுவதோடு, உள் நாட்டிலும் ஆயிரக்கணக்கானவர்களுக்கு வேலை கிடைக்கும் வாய்ப்பு ஏற்படும். இதைப் பற்றி பரிசீலனை செய்து ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்த யோசனை செய்யவேண்டுமென்று அரசாங் கத்தைக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

* **SRI R. SRINIVASA IYER** : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, எவ்வருஷமும் இந்த மானியத்தைப்பற்றி விவாதிக்கப்படக்கூடிய துறை களைத் தவிர, இவ்வருஷம் ஒரு முக்கியமான துறை ''ஸ்டேட் ட்ரேடிங் இன் புட் கிரேயின்ஸ்'' சேர்ந்திருக்கிறது. இதற்கு 4 மணி நேரம் விவா திக்க நேரம் கொடுத்திருந்தபோதிலும் ஏதோ மூன்று மணி நேரமாக குறைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் 10 நிமிஷந்தான் கொடுக்கப் பட்டிருக்கிறது. கூடுமான அளவு அதற்குள் என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

இந்த ராஜ்யத்தில் அரிசி ''புட் கிரெயின்ஸ்'' சம்பந்தப்பட்ட வரையில் ஏற்கனவே பற்றாக்குறையாக இருந்தது இப்பொழுது 25 சத விகிதம் உபரியாக, அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு இப்பொழுது பற்றாக்குறை இல்லாத நிலைமையில் இருந்து கொண்டிருக்கிறோம். ஆனால் நம்மு டைய பக்கத்திலுள்ள கேரள ராஜ்யத்தின் பற்றாக்குறையினால், சாசுவ தமான பற்றாக்குறையினால் அவர்கள் இங்கு விலை ஜாஸ்தியாகக் கொடுத்து வாங்கத் தயாராக இருந்த காரணத்தால் இங்கு விலை ஏறிக்கொண்டே வந்தது. அது மட்டுமல்லாமல் அரிசி வாங்கிச் சாப்பிடக்கூடியவர்கள் 20 சத விகிதத்தினர் தான். அவர்கள் தொழிலாளிகள். அவர் களிடம் வாங்கும் சக்தி அதிகமாக இருக்கிறது, அவர்கள் அரிசி விலை ஏறிக்கொண்டே போகிறது என்று கூச்சல் போட்டுக்கொண்டிருந்தார் கள். அதே சமயத்தில் விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவு எவ்வளவு

28th March 1959] [Sri R. Srinivasa Iyer]

ஆகிறது என்பதை எண்ணிப்பார்க்கவில்லை. விவசாயிகளுக்குத் தேவையான உற்பத்திப் பொருள்களும், மற்ற சாமன்களும் விலை உயர்வாக இருக்கின்றன. அவைகளின் விலையைக் கட்டுப்படுத்திவிட்டால் விவசாயிகள் இந்தச் செலவில் உற்பத்தி செய்ய முடியும் என்பதை மனதில் கொள்ள வேண்டும். 1956–57–ல் விற்ற விலை இன்றைக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. முக்கியமான விஷயத்தைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். "கேரளாவின் ஜனத்தொகை எவ்வளவு? உற்பத்தியாகும் உணவு தானியம் எவ்வளவு? பற்றுக்குறை எவ்வளவு?" என்பதைக் கணக்கிட்டு ஒவ்வொரு ராஜ்யத்திலிருந்தும் எவ்வளவு கொடுக்கவேண்டுமென்று தீர்மானமாக செண்ட்ரல் கவர்ன்மெண்டிலிருந்து ஒரு திட்டம் வகுத்து அதன்படி உணவு தானியத்தைக் கேரளாவுக்கு சப்ளை செய்ய வேண்டும். அந்தந்த விகிதப்படி ஆந்திரா, சென்னை, மைசூர் ஆகிய மூன்று ராஜ்யங்களுக்கு கேரளாவுக்கு சப்ளை செய்ய வேண்டுமென்று கட்டுப்பாடு விதித்தாலொழிய, கேரள ஸ்டேட் திருட்டுத்தனமாகவோ அல்லது தவறுதலாகவோ வியாபாரிகளிடமிருந்தும், மிராசுதார்களிடமிருந்து நேரில் உணவு தானியம் கொள்முதல் செய்வதைத் தடுக்க முடியாது. எந்தெந்த ரக நெல் என்னென்ன விலையென்று முதலில் சரியான நிர்ணயம் செய்யாமல் பின்னால் மாற்றப்பட்ட அந்த விலையையும் வியாபாரிகள் கொடுக்காமல் இருப்பதால் விவசாயிகள் நெல் விற்க மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கனம் கந்தசாமி முதலியார் அவர்கள் சொன்னது போல் நெல் விலை குறைவாக இருந்தபோதிலும் கூட விவசாயிகள் நெல்லை விற்றுத்தான் ஜீவனம் செய்ய வேண்டுமென்ற நிலையில் இருப்பதால் விவசாயிகள் அந்த நெல்லைக் குறைவாக விற்பதற்கும் தயாராக இருக்கிறார்கள். இப்பொழுது நிர்ணயிக்கப்பட்டிருக்கும் விலை குறைவு என்று வாதாடுகிறார்கள் அதுவும் நியாயமாகத்தான் இருக்கிறது. 1956–57–ல் இருந்ததை விட இப்பொழுது உற்பத்திச் செலவு அதிகமாக இருக்கிறது. இப்பொழுது விவசாயம் சம்பந்தப்பட்டவரை கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்து விவசாயத்தை ஜாஸ்தியாக்க நாம் உறுதி செய்து முயற்சி எடுத்துக் கொண்டிருக்கும் வகையில் ஒரு பெரிய குழப்பத்தையும் ஏற்படுத்திக் கொண்டு வருகிறோம். போதுமான லாபத்திற்கு விற்கமுடியாமல் நஷ்டத்திற்கு விற்க பலவிதமான காரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இதற்கு "சீலிங்" ஒன்று விலைநிர்ணயிக்காமல் குழப்பமான நிலை இருந்து வருகிறது. "சீலிங்கை" நான் ஆட்சேபிக்கவில்லை. உடனடியாகக் கொண்டு வரவேண்டுமென்று இரண்டு வருஷத்திற்கு முன்பே பேசியிருக்கிறேன். "கோவாப்பரேடிவ் பார்மிங்" என்று சொல்லுகிறார்கள் இதற்குப் பல அர்த்தங்கள், பல வியாக்கியானங்கள் சொல்லப்படுகின்றன. என்ன நடக்கிறது. நடக்கபோகிறது என்று தெரியாமலே "ப்ரெஸ்ஸிலும்" சரி, கூட்டங்களிலும் சரி, ஆட்சேபணைகள் கிளப்பிக் கொண்டிருக்கிறார்கள். அடுத்தப்படியாக எங்கே போனாலும் ஜாஸ்தியாகக் கூலி வேண்டுமென்ற ஓர் கிளர்ச்சி, அந்தத் தொழிலாளர்களுக்குள் ஒரு கட்டுப்பாடு இருக்கிறது. அவர்கள் கையில் ஸ்ட்ரைக் என்ற ஆயுதம் இருக்கிறது. அதைக் 10–50 p.m. கொண்டு பயமுறுத்தியவுடன் கூலி தானாக ஏறுகிறது. இப்படிப்பட்ட கிளர்ச்சியில் விவசாயி கூலி ஆட்களும் இறங்கிவிட்டார்கள். சரியான காலத்தில் வேலைக்கு வருவது இல்லை, நான்கு ஆள் நடவு நட்ட வயல்களுக்கு இப்போது எட்டாள் தேவைப்படுகிறது. நான்கணா கூலி வாங்கினது போக இப்போது பதினான்கு அணா டிமாண்டு பண்ணுகிறார்கள். இப்படி உற்பத்திச் செலவில் ஏற்பட்டிருக்கக்கூடிய அதிகச் செலவு, கிளர்ச்சி எல்லாமும் கூடச் சேர்ந்து விவசாயம் செய்வதா வேண்டாமா என்கிற குழப்பத்தை உண்டாக்கியிருக்கிறது. அவர்களுடைய ஜீவனத்திற்குத் தேவையான இதர பொருள்களின் விலையும் அதிகமாக ஏறிவிட்டது. இந்த நிலைமையில் தானியத்திற்கு மட்டும் நாம் குறைந்த விலையை நிர்ணயிக்க முன் வந்திருக்கிறோம், ஸ்டேட் டிரேடிங் என்றால் தானிய மட்டும் தானா? பருத்திக் கொட்டை, பிண்ணாக்கு, பாக்கி துணி முதலியவற்றுக்கு விவசாயிகள் இன்று ஜாஸ்தியாகச் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே இன்றைய தினம் அவர்கள் எல்லோரும் கிளர்ச்சி செய்ய ஆரம்பிக்கவில்லையென்றால் அவர்களுக்குள் ஒரு கட்டுப்பாடு, ஒற்றுமை இல்லாததுதான் காரணம். சர்க்காருக்கு இது தெரியாதது அல்ல.

அதோடு இப்போது அமைச்சர் அவர்கள் ஸ்டேட் டிரேடிங் என்பதைப் பற்றி விவரமாகக் கூறியதற்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் நியாயமான விலை என்றால் சாப்பிடுகிறவர்களுக்கு வாங்கிச் சாப்பிடும் சக்திக்கு ஏற்றாற்போல இருக்கவேண்டும். அதை அனுசரித்து உற்பத்தியாளர்களுக்கும் கட்டுப்படியாகக் கூடிய நிலையில் இருக்கவேண்டும் என்றார்கள். இந்த நிலையில் விலை நிர்ணயித்து விட்டோம். மில்காரர்களிடம் கொண்டுபோய் கொடுக்கவேண்டியிருக்கிறது. சிலருக்கு வண்டிச் சத்தம் ஜாஸ்தியாக இருக்கிறது. சிலருக்கு அந்தச் செலவு குறைகிறது, ஆகவே கிராமங்களில் குறைந்த விலை என்ன, அதிக விலை என்ன என்பதை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்ய திட்டம் செய்த பிறகுதான் கிராம மக்கள் நிம்மதியாக சாகுபடி செய்ய முன்வருவார்கள்.

அதோடு கிராமங்களில் உள்ள மிராசுதார்கள் பதுக்குகிறார்கள் என்று அநாவசியமாக அந்த இடத்தில் போய் விசாரிக்காமல் புகார் செய்யப்படுகிறது. அது உண்மையல்ல. இந்த வருஷம் மிராசுதார்கள் அவசரப்பட்டு ஆரம்ப காலத்தில் அதிக விலை கிடைப்பதாக எண்ணி விற்றுவிட்டார்கள். ஆகவே அவர்கள் ஏதோ பதுக்கி வைத்துக்கொண்டிருப்பது போல நினைப்பது, பேசுவது தவறு. கனம் பி. டி. ராமன் நாயர் அவர்களுடைய தீர்மானத்தை கேரளாவிலே ஒப்புகொண்டார்களா? எவ்வளவு அரிசி பற்றாக்குறை, எவ்வளவு தேவை என்பதைச் சொன்னார்களா? எத்தனை டன் அரிசி வாங்கி வைத்திருக்கிறார்கள் என்பது நமக்குத் தெரியாது. நெல் அனுப்புவதை இப்போது தடுத்துவிட்டோம். ஒருபடி நெல்கூடப் போகவில்லை என்று சொல்வது உண்மை. ஆனால் திருநெல்வேலியில் ஒரு மூட்டை அரிசிக்கு எத்தனை லாபம் சேர்த்து அவர்கள் அனுப்புகிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? திருநெல்வேலியிலிருந்து இன்றைய தினம் ஒரு மூட்டை நாற்பது ரூபாய் என்று போகிறது எனக் கேள்வி. தஞ்சை மாவட்டத்தில் இன்றைக்கு ஒரு மூட்டை என்ன விலைக்கு விற்கப்படுகிறது. இதற்கும் அதற்கும் ஏன் இத்தனை வித்தியாசம்? ஒரு நியாயமான விலை ஏற்படுத்தவேண்டுமென்றால் கண்டிப்பாக நமது ராஜ்யத்திலிருந்து எந்தப் பகுதிக்கும் அரிசி. நெல் போகாதவாறு தடுக்கவேண்டும் என்று சொல்ல விரும்புகிறேன். அந்த மாதிரி செய்தாலொழிய கண்டிரோல் நடைபெறாது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இப்படி இருக்கும்போது பதுக்குகிற மிராசுதார்களின் மீது பீனல் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா என்று விவசாயத்திலே சம்பந்தப்படாதவர்கள் கேட்கிறார்கள். இப்படி ஒன்றும் தெரியாதவர்கள் ஒவ்வொன்றைச் சொல்லி கூச்சலையும், பயத்தையும் உண்டாக்கினாலும் அரசாங்கம் அந்த மாதிரி முடிவுகளை எடுத்துக்கொள்ளக்கூடாது என்று சொல்ல விரும்புகிறேன்.

கனம் அமைச்சர் அவர்கள் சொன்னது பூராவையும் குறிப்பிட்டு கனம் வேதரத்தினம் வற்புறுத்திச் சொன்னவற்றை நானும் ஆதரிக்கிறேன். ஸோனல் கவுன்ஸிலை விட்டே நமது ராஜ்யம் வெளியேறி நம் ராஜ்யத்தில் விவசாய உற்பத்தியில் ஈடுபட்டும், நம் ராஜ்ய மக்களுக்கு நியாயமான விலை கிடைக்கும்படி செய்யவும் முன்வரவேண்டும். இவர்களுடைய நிலைமையைச் சீர்படுத்த என்ன என்ன காரியங்களைச் செய்யவேண்டும் என்று யோசிக்க வேண்டும். அமோனியம் சல்பேட் முதலிய உரங்கள் கூட்டுறவு சொஸைடி மூலமாக விநியோகிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இதிலும் பல ஊழல்கள் இருக்கின்றன. மூட்டையில் உள்ள அளவு குறைகிறது. முப்பத்தேழு படி மூட்டையை ஐம்பத்தேழு ரூபாய் என்று விற்கிறார்கள். அதைக் கேட்க முடியவில்லை. இதை மொத்த வியாபாரிகளுக்குக் கொடுக்கக் கூடாது. ஆகவே இங்கு ஊழல் வராமல் கிராம கூட்டுறவு இயக்கங்கள் மூலமாக விநியோகிக்கவேண்டும். அதுபோலத்தான் உரம் விநியோகம் பற்றியும் சாதாரண உப்பு முதலியவற்றைக் கலந்து விற்கக்கூடிய நிலைமை உண்டாகி விடுகிறது. பெரிய மார்க்கெட்டிங் ஸொஸைடியில் கூட இந்தமாதிரி கஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

28th March 1959]

Sri S. B. ADITYAN : தலைவர் அவர்களே, எனக்கு முன் பேசிய நண்பர் திரு வேதரத்தினம் அவர்கள் மிகச் சிறந்த கருத்து ஒன்றைச் சொன்னார்கள். தென்மண்டலம் என்ற பிடிப்பில் இருந்து சென்னை மாநிலம் விடுதலை அடையவேண்டும் என்று திட்டவட்டமாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்வதற்கும் நான் சொல்வதற்கும் என்ன வித்தியாசம்? அவர் இதைச் சென்னை மாநிலம் என்கிறார். நான் தமிழ் நாடு என்று சொல்லுகிறேன். அவர் நல்ல தேசியவாதி. அநுபவ மிகுதி உடையவர். நன்றாகப் பலகாலம் ஆழ்ந்து சிந்தித்து இந்த முடிவுக்கு வந்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். தென்மண்டலம் என்றால் என்ன? நமது ராஜ்யம், ஆந்திரம், மைசூர், கேரளம் ஆகிய நான்கு மாநிலங்களும் சேர்ந்தது. அதைத் திராவிட நாடு என்றும் சொல்லிக்கொள்ளலாம். இப்படிப்பட்டதொரு பிடிப்பிலிருந்து தமிழ்நாடு விடுதலை அடையவேண்டும் என்று நான் சொல்லவில்லை. திரு. வேதரத்தினம் அவர்களே குறிப்பிட்டார்கள். இன்னும் அவர் கொஞ்சகாலம் ஆழ்ந்து சிந்தித்துப்பார்ப்பார்களேயானால் இன்னும் ஓர் நல்ல முடிவுக்கு அவர்கள் வருவார்கள். தமிழ்நாடு தென்மண்டலம் பிடிப்பிலிருந்து விடுபடுவது மட்டும் அல்ல. டெல்லி அரசாங்கத்தில் பிடிப்பிலிருந்தே தமிழ்நாடு விடுதலை பெறவேண்டும் என்ற முடிவுக்கு நிச்சயமாக வருவார்கள். அரிசி விவகாரத்தில் இருந்து இது நன்றாகத் தெரிகிறது. அரிசி வாங்குகிறதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அரிசி விலை நாளுக்கு நாள் ஏறிக்கொண்டு போகிறது. அதற்குக் காரணம் என்ன? அரிசி விலை ஏறுவதற்குக் காரணம் விளைச்சல் போதவில்லை என்றால் சரி. ஆனால் நெல் முன்னை விட அதிகமாக விளைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். அப்படி இருந்தும் விலை ஏறுகிறது. எல்லோருக்கும் தெரியும். அமைச்சருக்கும் தெரியும். பொதுமக்களுக்கும் தெரியும். கேரளாவுக்கு ஆண்டுதோறும் இரண்டரை லட்சம் டன் இங்கிருந்து போய்க்கொண்டிருக்கிறது. இதற்குப் பெரிய பொருளாதார நிபுணர்கள் கலந்து பேசவேண்டியதில்லை. "லா ஆப் சப்ளை அண்டு டிமாண்டு" தெரிந்துகொண்டிருக்கவேண்டும் என்பதில்லை. ஒரு கடையில் சாமான் இருக்கிறதென்றால் பத்துப்பேர் வாங்கினால் ஒரு விலைதான். அதற்கே நூறு பேர் போட்டி போட்டுக்கொண்டு சென்றால் ஒரு விலைதான். இது பெரிய பொருளாதார நிபுணருக்குத்தான் புரியும் என்பது இல்லை. பெரிய வியாபாரிகளுக்குத்தான் தெரியும் என்பது இல்லை. சாதாரண மொச்சைக் கொட்டை விற்கிறவனுக்கும் கூடத் தெரியும்.

தமிழ் நாட்டில் உள்ள தானியத்தை கேரளத்தில் உள்ளவர்கள் ஒருவர்மேல் ஒருவர் விழுந்தடித்துக்கொண்டு கொள்முதல் செய்வதனால் தான் விலை ஏறுகிறது. இதற்கு வேறு ஒரு காரணம் கிடையாது. 11 a.m. அமைச்சர் அவர்கள் கூட ஓரிடத்தில் "என்னமோ ஆதித்தியன் சொல்கிறார். அரிசி அங்கே போவதாக. அரிசி சும்மாவா போகிறது? விலை கொடுத்து வாங்கிக்கொண்டு போகிறார்கள்" என்று சொல்லியிருக்கிறார். சும்மா கொடுத்தால் விலை ஏறாது. போட்டிபோட்டுக்கொண்டு வாங்குவதனால்தான் விலை ஏறுகிறது. ஆகவே அரிசி விலை குறைவதற்கு என்ன வழி இருக்கிறது. அரசாங்கம் அரிசி வாங்கப்போகிறோம் என்று சொல்வார்கள். "அரசாங்கம் இரண்டு லட்சம் டன் அரிசி வாங்கினால் விலை இரங்குமா அல்லது ஏறுமா? அதேபோல் கேரளத்திற்கு நமது தமிழ் நாட்டிலிருந்து அரிசி போனால் விலை ஏறுமா இறங்குமா? கட்டாயம் அரிசி விலை ஏறிக்கொண்டுதான் போகும். அப்படி இருக்கும்போது அரசாங்கம் இரண்டு லட்சம் டன் கொள்முதல் செய்வதால் விலை குறையாது. அப்படி அதிகமான அரிசி வாங்குவதால் விலை குறையும் என்று சொல்வது பொருளாதார விதிகளுக்கு முற்றிலும் முரண்பாடாகும். அடுத்தப்படியாக கனம் அமைச்சர் அவர்கள் தஞ்சாவூரிலிருந்து நெல் போகக்கூடாதென்று தடை விதித்து இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனால் கேரளத்திற்கு அரிசி போகக்கூடாதென்று தடை விதிக்கவில்லை. நெல் போகக்கூடாது என்று சொல்வது இன்னும் நல்லதாகப் போய் விட்டது. இப்பொழுது நெல்லுக்கு பதிலாக அரிசி வாங்கியதால்தான்

தஞ்சையிலிருந்து வாங்கிக்கொண்டுபோகிறார்கள். அப்படி தஞ்சாவூரிலிருந்து நெல் போகக்கூடாது என்பதற்குப் பெயர் தடை. இவ்வாறு தடை விதிப்பது கனம் மந்திரி அவர்கள் வியாபாரிகள் கேரளத்திற்கு வாங்கிக் கொண்டு போகலாம் என்று சொல்லக்கூடிய நிலைமையில்தான் இந்தத் தடை இருக்கிறது. நான் கேட்கிறேன் தஞ்சாவூரிலிருந்து கேரளத்திற்கு வாங்கிக்கொண்டு போவதற்கு ஏதாவது தடை விதித்து இருக்கிறீர்களா? சர்க்கார் அவ்வாறு தடை விதிக்கவில்லை. அதற்குப் பதிலாக கேரளத் திலிருந்து அரிசி வாங்குவதற்கு சௌகரியமாக அந்த உத்தரவு போடப் பட்டிருக்கிறது. அப்படி இருக்கும்போது சர்க்கார் வியாபாரிகள் மீது அவர்கள்தான் இப்படி செய்கிறார்கள் என்று குறை கூறுகிறார்கள். இதற்கு ஒரே வழி என்னவென்றால் ஒரு மணி அரிசியோ, நெல்லோ, நாட்டை விட்டுப் போகக்கூடாது என்று ஒரு தடை விதிக்கவேண்டும். அப்பொழுதுதான் தமிழ் நாட்டிலிருந்து அரிசியும் நெல்லும் போகாது. அரிசி விலையும் ஏறாது.

அடுத்தப்படியாக இந்த அரிசி வியாபாரம் செய்வதிலே லாபம் கிடைக் கும் என்று சொல்லப்படுகிறது. தமிழ் நாட்டிலே ஒரு மூட்டைக்கு அரிசி 18 ரூபாய் வாங்கி இந்திய ரீதியிலேயே ரூபாய் 24-க்கு கேரளத்திற்கு விற்றால் அதில் 3 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்று சொல்லப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் நோக்கம் லாபம் அல்லவே? சர்க்காருக்கு வேண்டிய அரிசியை நியாயமான விலையில் கொடுப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அதற்கு ஒரே ஒரு வழி நான் மேற்சொன்ன தடையை விதிப்பது தான். அதைவிட வேறு வழியில்லை. அமைச்சர் அவர்களே டெல்லிக்குப் போனார்களாம். அங்கு இந்திய சர்க்காரிடம் தென்னிந்தியா "சதர்ன் ப்ளோர் ஸோன்" தென்மண்டலத்தில் இருந்து தமிழ்நாடு விலகிக்கொள்ள வேண்டுமென்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள். ஆனால் மத்திய சர்க்கார் முடியாது என்று சொல்லிவிட்டது.

THE HON SRI M. BHAKTAVATSALAM : அப்படி நான் ஒன்றும் சொல்லவில்லை. இதுவரை நாங்கள் அவர்களைக் கேட்கவில்லை.

SRI S. B. ADITYAN : டெல்லி அரசாங்கத்திடம் இந்த சர்க்கார் கேட்டார்கள். அவர்கள் என்ன கேட்டார்கள் என்று எனக்குத் தெரியாது. அவர்கள் இதுவரை கேட்காமல் இருக்கலாம், இனிமேல் கேட்கலாம். டெல்லி அரசாங்கத்துடன் தமிழ் நாட்டைப் பொறுத்தவரை இங்கிருந்து அரிசியைக் கேரள ராஜ்யத்திற்கு போவதை எதிர்த்து நிற்கிறோம். என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் டெல்லியில் அவர்களு டைய செல்வாக்கை உபயோகப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்ளு கிறேன். இதனால் டெல்லியில் மட்டுமல்ல உலகத்திலேயே அவர்களுக்கு செல்வாக்கு உண்டாகவேண்டும் என்பதுதான் எனது விருப்பம். ஆகவே தமிழ் நாட்டிலிருந்து அரிசி வெளியே போகக்கூடாது என்று டெல்லி சர்க்கார் ஒரு தடை விதிக்கவேண்டும் இதற்காக கனம் அமைச்சர் அவர்கள் முயற்சி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்ளுகிறேன்.

SRI S. NAGARAJA MONIGAR : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மான்யத்தை ஆதரித்து, அதேசமயத்தில் நான் பேசும்போது ஓரிரு சந்தர்ப்பங்களிலே கனம் உதவி சபாநாயகர் அவர்களே தலைமை வகிக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சி.

DEPUTY SPEAKER : இந்த டிமாண்டுக்கும் அதற்கும் என்ன சம்பந்தம்.

SRI S. NAGARAJA MONIGAR : இப்பொழுது இந்த மாகாணத்திலே விலை பொருள்கள் கார்போரேஷன் ஒன்றை ஏற்படுத்தவேண்டும் என்று நான் கருதுகிறேன். நாட்டிலே நிச்சயமாக ஒரு குழப்பம் ஆரம்பமாகி

28th March 1959] [Sri S. Nagaraja Monigar]

இருக்கிறது. அதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. சுய ராஜ்யம் வாங்கிக்கொடுத்தது இப்பொழுது ஆளுகின்ற கட்சியினுல்தான். சுயராஜ்யம் வாங்கியவுடன் அதற்குமுன் சொன்ன வார்த்தைகளை காரியத்தில் அவைகளை நிறைவேற்றவேண்டுமென்ற நோக்கத்துடன் நமது சர்க்கார் பல சீர்திருத்தங்களை செய்வதற்கு முன் வந்திருக்கிருர்கள். நான் முன்பு ஒரு முறை பேசியபோது இன்னும் இரண்டு சீர்திருத்தங்கள் பாக்கி இருக்கின்றன. ஒன்று நிலசீர்திருத்தம். இரண்டாவது நகர வருமானத்தில் உச்சவரம்பு கட்டுதல். இந்த இரண்டு சீர்திருத்தங்களை நாம் அமைதியான முறையில் செய்யவேண்டும். அதே சமயத்தில் வியாபாரிகள் தங்களுக்கு லாபம்தான் கிடைக்கவேண்டும் நஷ்டம் வரக்கூடாது என்று கருதுகிருர்கள். அவர்களுடைய வருமானத்திற்கு உச்சவரம்பு கட்டாததினுல் லாபம் சம்பாதித்துக்கொள்கிருர்கள். நாம் எத்தனையோ பேர் விஷயத்தில் பல முக்கியமான சட்டத்தை இயற்றி இருக்கிறோம். தீண்டாமைச் சட்டத்தை இயற்றியிருக்கிறோம். மதுவிலக்குச் சட்டத்தை கொண்டு வந்திருக்கிறோம். அதுபோல் ஜமீன்தார்களையும் ராஜாக்களையும் ஒழிப்பதற்கு ஒரு சட்டம் இயற்றினேம். பொதுமக்களின் நன்மைக்காக பல சட்டங்களையும் கொண்டுவருவதுதான் முக்கிய நோக்கம் நம் நாட்டிலே சோஷியல் பாட்டர்ன் ஆப் சொஸைடி ஏற்படுத்துவதற்குத்தான். அதே போல் இப்பொழுது இந்த விற்பனை வரி சட்டத்திலும் 25 ஆயிரம் ரூபாய் 30 ஆயிரம் ரூபாய் அழுகும் பொருள்களை வியாபாரம் செய்து, வருமான வரி கட்டுபவர்களுக்குத்தான் இந்த விற்பனை வரி சட்டத்தினுல் பாதிக்கப் படுவார்கள் மற்றவர்கள் அந்தத் தொகைக்கு பாதிக்கப்படமாட்டார்கள். அதற்கு காரணம் என்னவென்றுல் வியாபாரிகள் சொல்வது என்ன வென்றுல், தங்களுடைய கணக்கு வைப்பதில் கஷ்டம் இருக்கிறது. மேலும் அழுகும் பொருள்களை வியாபாரம் செய்வதில் நஷ்டம் ஏற்படுகிறது என்று சொல்லுகிருர்கள். இது தவிர அவர்கள் ஒன்றிரண்டு போராட்ட முயற்சியில் ஈடுபட்டிருக்கிருர்கள். அந்த சமயத்தில் இதர வியாபாரிகளும் அவர்களுக்கு அனுதாபம் தெரிவிக்கும் முறையில் கடை அடைப்பு செய்திருக்கிருர்கள். இது மக்களுக்கு எவ்வளவு கஷ்டத்தை விளைவிக்கிறது என்று அவர்கள் உணரவேண்டும். முதலில் வியாபாரிகள் அவர்களுடைய கஷ்டத்தைப் பார்க்கிருர்களே தவிர மற்றவர்களுடைய கஷ்டத்தைப் பற்றி அவர்கள் சிந்திப்பதில்லை. இப்படி இருக்கும்போது வெளியே அவர்கள் கூட்டம் போட்டு தங்களுடைய கோரிக்கையை வற்புறுத்துகிருர்கள். உதாரணமாக திருவல்லிக்கேணியிலே ஒரு கூட்டம் போட்டார்கள் அதிலே கலந்துகொள்ளாத கட்சியே ஒன்றும் இல்லை. வால் போஸ்டர் களில் அவர்களுடைய பேர்களும் போடப்பட்டது. உண்மையிலே இங்கு பேசிய அங்கத்தினர்கள் வியாபாரிகளை பெருச்சாளிகள் என்று சொன்னுர்கள். பெருச்சாளிகள் மீது ஏறி வாகனம் செய்யும் கணபதி போன்ற தொப்பைஉடையவர்கள் கூட வியாபாரிகள்தான். இல்லை என்று நான் சொல்லவில்லை. இத்தனை கட்சிகளும் நேற்று ஒன்றுபட்டதன் நோக்கம் என்ன என்று சிந்தித்துப்பார்க்கும்போது ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. வியாபாரிகளுடைய வருமானத்திற்கு உச்சவரம்பு பின்னர் வரப்போகிறது. அரசியல் பெஞ்சிக்கு வருவதற்கு முயற்சி மேற்கொள்வதற்கு இதுதான் தக்க சமயம் என்று அவர்கள் அவ்வாறு செய்தார்களோ என்ற சந்தேகம் ஏற்படுகிறது. அவர்கள் கூறும் முறைப்படி காரியங்கள் செய்தால் தக்க சோஷலிஸம் வருமா? இந்த வரியினுல் சிறு வியாபாரிகள் பாதிக்கக படுவது உண்மையானுலும் பெரிய வியாபாரிகள் உண்மையில் பாதிக்கப் படுகிருர்களா? இதற்கு இங்கே பதில் சொல்லியிருக்கிறோம். சமீபத்தில் மண்ணெண்ணெயின் விலை பல மடங்காக ஏறியது. அதை பல மடங்கு உயர்த்தி விற்றுர்கள் வியாபாரிகள். அப்போது எந்த சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் அதைக் கண்டித்தது என்று எனக்குத் தெரியவில்லை. வியாபாரிகள் தங்கள் வியாபாரத்தையும் லாபத்தையும் பெருக்கிக்கொண்டு மைலாப்பூரிலும், தியாகராயநகரிலும், உதகமண்டலத்திலும் மாளிகைகளைக் கட்டிக்கொள்கிருர்களே தவிர மக்கள் நலனை கவனிப்பதில்லை. பல வியாபாரிகளுக்கு அநியாயமான லாபம் வந்தால் அது அவர்களுக்கு வரக் கூடாது என்று சேம்பர்ஸ் ஆப் காமர்ஸ் சொல்கின்றனவா? வியாபாரிகள் இவ்வளவு லாபம்தான் சம்பாதிக்க வேண்டும் என்று தீர்மானம்

போடுகின்றனவா? இந்தப் போக்கில் உள்ள வியாபாரிகள் திருந்துவதாக இல்லை. இந்த நிலையில், சர்க்கார் மற்ற எல்லாத் துறைகளிலும் பிரவேசித்ததுபோல இந்தத் துறையிலும் பிரவேசித்து ஆவன செய்ய வேண்டியதுதான். சர்க்கார் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் மக்கள் நலனுக்காக நடவடிக்கையை எடுக்கவேண்டும். மிக உன்னதமான இந்த சர்க்கார் எதிர்க் கட்சிகளின் எதிர்ப்பு வாதங்களையும் மற்றவர்களின் எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாமல் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதில் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. மற்றவர்களுடைய வார்த்தைகளை நம்பி ஏமாறமாட்டார்கள் இந்த சர்க்கார். நாம் செய்யும் சட்ட திட்டங்களில் ஒரு குறைபாடு இல்லை, அவைகளை அமல் நடத்துவதில் தான் குறை இருக்கிறதென்று ஸ்ரீ வி. சுப்பையா சொன்னார். அதை நானும் ஒத்துக்கொள்கிறேன். அவைகளை இன்னும் கண்டிப்பாக அமல் நடத்த வேண்டும். அவைகளை அமல் நடத்தப்படும் விஷயத்தில் அதிகாரிகளிடம் தப்பு இருக்கிறது, பொதுமக்களிடமும் வியாபாரிகளிடமும் உள்ள ஊழல்களும் கொஞ்சநஞ்சமல்ல. ஆபீசர்களைப் பொறுத்தவரையில் கண்ட்ரோல் காலத்திலேயே நமக்கு நல்ல அனுபவம் ஏற்பட்டிருக்கிறது. பப்ளிக் ஸெர்வன்ட்ஸ் காண்டக்ட் ரூல்ஸ் தகுந்த முறையில் திருத்தி அமைக்க வேண்டும். குற்றம் புரிபவர்களுக்கு கோர்ட்டில் கடுமையான தண்டனைகள் அளிக்கப்படுவதற்கு உரிய முறையில் சட்டங்களை இயற்ற வேண்டும். வெள்ளையர் காலச் சட்டங்களையே வைத்துக்கொண்டிருந்தால் சர்க்கார் பல விஷயங்களில் மக்களை வலுக்கட்டாயப்படுவதாககூடச் சொல்ல முடியும். கோவிலில் ஹரிஜனங்களை விடுவது வலுக்கட்டாயம் முறை என்று சொல்லலாம். குற்றம் புரிந்த வியாபாரிகளுக்கும் அதிகாரிகளுக்கும் கடுமையான தண்டனைகளை அளித்திருந்தால் இம்மாதிரியான சட்டங்களை வலுக்கட்டாய நடவடிக்கைக்கு வகை செய்யும் சட்டங்கள் என்று சொல்லப்படக்கூடிய சட்டங்களை கொண்டுவர வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. பொது ஜனங்களும் மற்றவர்களும் இவைகளை சரிவரப் புரிந்துகொள்ளாமல் இவைகளுக்கு எதிர்ப்பு காட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது. நான் கனம் அமைச்சருக்கு யோசனை சொல்லக்கூடியவன் அல்ல. இருந்தாலும், இவைகள் கொஞ்சம் கடுமையாக இருக்க வேண்டுமென்று சொல்லிக்கொள்ளுகின்றேன். இல்லாவிட்டால் முன்பு கண்ட்ரோல் இருந்தபோது ஏற்பட்ட தொல்லைகள்தான் ஏற்படும். அவைகளைப் பற்றி கனம் அங்கத்தினர்கள் இங்கே அடிக்கடி பேசுவார்கள்.

(Mr. Speaker in the Chair.)

ஸ்டேட் ட்ரேடிங் ஸ்கீம் வருகிறது. உணவு ஆலோசனைக் கமிட்டி இல்லாமல் போய்விட்டாலும் வேறொரு கமிட்டியை நியமித்து அதில், பேதமின்றி எல்லாக் கட்சி எம். எல். ஏ-க்களையும் அங்கத்தினர்களாக நியமிக்க வேண்டும் என்று சொல்லிக்கொள்கிறேன். பத்தா கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும் அவர்களை அங்கத்தினர்களாக நியமிக்கவேண்டும். சர்க்கார் அவர்களுக்கு பத்தா கொடுக்கலாம். அது வியாபாரிகளைக் கூப்பிட்டுக் கூட்டம்போட்டு கலந்தாலோசிக்கலாம்.

பாலுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கோரப்பட்டது. ஆனால் அது அளிக்கப்படவில்லை. அதற்கு வரியிலிருந்து விலக்கு அளிக்காவிட்டாலும் பால் விற்பனை கூட்டுறவுச் சங்கங்களுக்கு சர்க்கார் வட்டியில்லாக் கடன்களாவது கொடுத்தால் நன்றாக இருக்கும். நானும் ஒரு பால் ஸொஸைடியின் தலைவனாக இருந்திருக்கிறேன். எனவே பால் ஸொஸைடிகளின் கஷ்டங்கள் எனக்கு நன்றாகத் தெரியும். அவைகளுக்கு வட்டியில்லாக் கடன்கள் கொடுக்கும் முயற்சியில் சர்க்கார் தீவிரமாக இறங்க வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன். இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

***SRI M. P. PERIASAMI** : கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மானிய கோரிக்கையை ஆதரித்து சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். உணவு தானிய விலைவாசி பல வருஷங்களாகவே திடீரென்று ஏறிக்கொண்டும் இறங்கிக்கொண்டும்தான் இருக்கிறது. சுமார் இரண்டு

மூன்று வருஷங்களுக்கு முன்பு உணவு தானியங்களின் விலைவாசி ரொம்ப இறங்கியது. அப்போது எதிர்க்கட்சி அங்கத்தினர்கள் உணவு தானியங்களின் விலைவாசி ரொம்ப இறங்கிவிட்டதால் அவைகளின் விலைவாசி இறக்கத்தைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவைகளின் விலை ரொம்ப இறங்கியிருப்பதால் ஏழை விவசாயிகள் ரொம்பவும் கஷ்டப்படுகிற காரணத்தால் அவைகளை வெளிநாடுகளுக்கு அனுப்பி அவைகளுடைய விலை ஏற அரசாங்கம் ஏற்படும் செய்ய வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள். இப்போது நமது மாநிலத்தில் பருவ மழை தவறி, எத்தனையோ இடங்களில் வெள்ளாமை குறைந்து போயிருக்கிறது. இதன் காரணமாக விலைவாசிகள் ஏறிவருகின்றன. மேலும் சில இடங்களில் நஞ்சையே பயிர் செய்துகொண்டிருந்த இடங்களில் வாழை, கரும்பு முதலியவைகளை பயிரிட ஆரம்பித்திருப்பதால் நெல் உற்பத்தி பாதிக்கப்பட்டிருக்கிறது. சர்க்கரை மில்களுக்காக கரும்பு பயிரிடப்படுகிறது. ஆக, பல காரணங்களால் இப்போது நெல் விலை ஏறிக்கொண்டிருக்கிறது. இப்போது எதிர்க்கட்சிக்காரர்கள், அரிசியின் விலை ஏறிக்கொண்டிருப்பதால் ஏழைப் பாட்டாளி மக்கள் கஷ்டப்படுகின்ற காரணத்தால், அதன் விலையைக் கட்டுப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கூறுகின்றனர். இதற்கு முன்பு, அதன் விலையை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், விலை குறைவால் விவசாயிகள் கஷ்டப்படுவதாகவும் சொன்னார்கள். இப்போது அதன் விலையைக் குறைக்க வேண்டுமென்றும் விலை உயர்வால் ஏழைப் பாட்டாளி மக்கள் கஷ்டப்படுவதாகவும் சொல்கிறார்கள். இவ்வாறு கனம் அங்கத்தினர்கள் ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு விதமாகச் சொன்னால், அரசாங்கத்திற்கு எவ்வளவு தொந்தரவுகள் இருக்கின்றன என்பதை உணர வேண்டும். விலைகள் மிகக் குறைவாகவோ மிக அதிகமாகவோ இல்லாதவாறு விலைகளை அரசாங்கம் ஓரளவு கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்தான். ஏழை ஜனங்களுக்காகத்தான் முன்பு கண்ட்ரோல் வந்தது. இப்போதும் தானியங்களுக்கு ஒரு விலையை நிர்ணயிக்க வேண்டியது அவசியம்தான். விவசாயம் செய்தவர்களுக்குத்தான் இதன் அருமை தெரியும். விவசாயம் செய்யாமல் பிறர் சொல்வதைக் கேட்டு விட்டு விவசாயத்தைப் பற்றிப் பேசுபவர்களுக்கு இதன் அருமை தெரியாது.

ஒரு ஏக்கருக்கு கொத்தி, உழுது, தழைபோட்டு, உரம் அடித்து ஆக எல்லாம் சேர்ந்து என்ன செலவாகும் என்று பார்த்தால் குறைந்தது ஏக்கர் ஒன்றுக்கு 300 ரூபாய்க்கு மேல் ஆகிறது. இப்பொழுது, விவசாயத்திற்கு வேண்டிய பொருள்களை மட்டும் கண்ட்ரோல் செய்கிறோமே தவிர மற்ற பொருள்களை நாம் அப்படி கண்ட்ரோல் செய்கிறோமா? என்று பார்க்க வேண்டும். இரும்பை கண்ட்ரோல் செய்கிறோமா? அதை கட்டுப்பாடு செய்யவில்லை. இப்பொழுது ஒரு மூட்டை புண்ணாக்கு, 125 ராத்தல் கொண்டது முன்பு 10, 12 ரூபாய் என்று விற்றது இப்பொழுது 23 ரூபாய்க்கு விற்கிறது. அது விவசாயத்திற்கு அவசியமாகயிருக்கிறது. அதற்கு கண்ட்ரோல் கொண்டுவந்தால் அது விவசாயியைத்தான் பாதிக்கும். இப்பொழுதும், புண்ணாக்கின் விலை ஏறிக்கொண்டேயிருக்கிறது. அதேபோல், அம்மோனியம் சல்பேட், சூப்பர் பாஸ்பேட் இவைகளின் விலைகளும் ஏறிக்கொண்டே போகிறது. அதன் விலைகளை ஒழுங்குபடுத்தி விவசாயிகளுக்கு சுலபமாக நாம் உதவி செய்கிறோமா என்பதை நாம் சிந்திக்க வேண்டும். என்ன வரி போட்டாலும் சரி, எதற்கு வரி போட்டாலும் சரி, அவைகளினால் விவசாயிகள்தான்- அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். விவசாயிகளைத் தவிர மற்றவர்கள் வேறு என்ன என்னவோ தொழில் செய்து கொண்டு வருகிறார்கள். எத்தனையோ பேர்கள் வட்டிக்கு பணம் கொடுத்து பணத்தை வாரி கொள்ளையடிக்கிறார்கள். அதேபோல் ஒரு ஊரில் பல வீடுகள் கட்டி வீட்டு வாடகையாக நிறைய பணம் சம்பாதிக்கிறார்கள். பஸ்கள் வைத்துக்கொண்டு தொழில் செய்பவர்கள் கோடிக்கணக்காக சம்பாதிக்கிறார்கள். அவர்கள் எல்லாம் ஓரளவுதான் பாதிக்கப்படுகிறார்கள். ஆனால் உலகத்திலுள்ள எல்லா ஜனங்களுக்கும் உணவு அளிக்கிற விவசாயிகளை எடுத்துக்கொண்டால் என்ன

நடவடிக்கை எடுத்தாலும் அது அவர்களைத்தான் பாதிக்கிறது. நில வரம்பை எடுத்துக்கொண்டு பார்த்தாலும் விவசாயிகள்தான் பாதிக்கப் படுகிறார்கள். எதை எடுத்துக்கொண்டாலும் முதலில் நிலம் வைத்திருப் பவர்களைத்தான் அது பாதிக்கிறது. ஆகவே, அரசாங்கம் விவசாயிகள் படும் கஷ்டத்தை ஆலோசித்துப் பார்த்து அவர்களுக்கு என்னென்ன முறை யில் உதவ வேண்டும், அவர்களுக்கு என்னென்ன சலுகைகள் அளிக்க வேண்டுமென்று ஆலோசித்துப் பார்த்து அவர்களுக்கு வேண்டிய உதவி களை அளிக்க வேண்டுமென்று நான் சர்க்காரை வேண்டிக்கொள்கிறேன். விலை கண்ட்ரோல் கொண்டு வருவது உசிதம்தான். ஆனால் இப்பொழுது உரங்களின் விலை மிகவும் அதிகமாக ஏறியிருப்பதால் அவைகளை போட்டு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஓரளவாவது லாபம் கிடைக்கும் விதத்தில் இன்னும் கொஞ்சம் அதிகமாக விலையை நிர்ணயம் செய்ய வேண்டும். விலை அப்படியே இருந்தால் அடுத்த வருடம் அதை கொஞ் சம் குறைக்கவேண்டும். அதில்லாமல் விலையை ஒரேயடியாக குறைத் தால் விவசாயம் செய்வதில் விவசாயிகளுக்கு அக்கரையில்லாமல் வேறு தொழிலில் ஈடுபடப் பார்ப்பார்கள். அப்படிச் செய்தால் உணவு உற்பத்தி யும் குறையும். விலை அதிகமாக இருக்கிறது என்று கண்டால் விவசாயம் செய்வதில் விவசாயிகளுக்கு உற்சாகம் பிறந்து உணவு உற்பத்தியும் பெருகும். அப்படி கூடுதல் உணவு உற்பத்தி பெருகும்போது, தானா கவே விலையும் குறைந்து விடும். உதாரணமாக மார்க்கெட்டில் சாமான் களைக் கொண்டு போய் விற்கும்போது நிறைய சாமான்கள் வரும்போது விலை குறைகிறது, ஆனால் சாமான்கள் குறைவாக இருக்கும்போது விலை கூடுகிறது. ஆகவே, விலை கூடுதல் கிடைக்கும் என்று இருந்தால் விவ சாயிகள் கூடுதல் உற்பத்தி செய்வார்கள். அப்பொழுது விலையும் குறைந்து விடும். இன்று மழை இல்லாததால், எங்கு பார்த்தாலும் கிணறு கள், ஏரிகள், குளங்கள் வற்றிவிட்டது. ஆகவே, உற்பத்தி குறைவு ஏற்பட்டு அதன் காரணமாக விலை வாசிகளும் ஏறிவிட்டது. அரசாங்கம் விலையைக் கட்டுப்படுத்தியதுபற்றி சந்தோஷந்தான். உடனடியாக விலை யைக் குறைக்காமல் படிப்படியாக விலையைக் குறைத்தால் விவசாயி களுக்கு தொல்லை இராது. அடுத்தபடியாக, இப்பொழுது கூட்டுறவு சங்கங்கள் மூலம் நெல்லை வாங்கி சிலர் ஸ்டோர் வைத்துக்கொள்கிறார்கள். அப்படி வாங்கி வைத்துக்கொண்டு நூற்றுக்கணக்கான மூட்டையை தேக்கி விடுகிறார்கள். அதையும் அரசாங்கம் கவனிக்க வேண்டும். நான் சொல் வது என்னவென்றால், பழையபடி அரசாங்கமே கொள்முதல் செய்து ஆங்காங்கு "பெயர் (Fair) ப்ரைஸ் ஷாப்ஸ்" வைத்து நடத்துவது அவசியம். இருந்தாலும் அதை ஜாக்கிரதையாக பார்த்துக்கொள்ள வேண்டும். எங் கள் பகுதியில் ஹோல் சேல் வியாபாரிகள் தங்கள் சொந்த நிலத் திலுள்ள கருக்காயையும் கலந்து விற்கிறார்கள். ஆகவே, மக்களுக்கு ஒருவித ஹிம்சையும் இல்லாத முறையில் கண்ட்ரோல் கொண்டு வந்து, கொள்முதல் செய்து மக்களுக்கு கஷ்டம் இல்லாத முறையில செய்ய வேண்டும். (பெல்)

அடுத்தபடியாக, அமெரிக்காவிலிருந்து நம் நாட்டிற்கு பால் பவுடர் அனுப்புகிறார்கள். அது இப்பொழுது டின் ஒன்றுக்கு எழு, பத்து ரூபாய் வரை விற்கப்படுகிறது. அந்த பால் பவுடர் யார் யாருக்கோ தின்பண்டங்கள் முதலியவை செய்வதற்காக போய்விடுகிறதே தவிர ஏழை மக்களுக்கு அந்த பால் பவுடர் கிடைப்பதில்லை. இதுபற்றி கலெக்டர் போன்றவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. பெட்டிஷன் மூலமாக அமைச்சர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே அமெரிக்காவிலிருந்து வரும் பால் பவுடர் ஜனங்களுக்கு, ஏழை மக்களுக்கு கிடைக்கவேண் டும், அது ப்ளாக் மார்க்கெட்டில் இப்பொழுது போவதை தடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொண்டு எனது வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

* **SRI V. K. KOTHANDARAMAN**: கனம் சபாநாயகர் அவர்களே, இந்த வெட்டுப்பிரேரணையை ஆதரித்து நான் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள், இப்போழுது உணவுப் பற்றாக்குறை இல்லை, ஆனால் விலை வாசிகள் உயர்ந்து விட்டது ;

28th March 1959] [Sri V. K. Kothandaraman]

அந்தக் காரணத்தால்தான் இப்போழுது உணவுத்தட்டுப்பாடு ஏற்படுகிறது, அதற்காக வேண்டித்தான் இரண்டு லட்சம் டன் உணவு தான்யம் கொள்முதல் செய்வதற்காகவேண்டி இப்பொழுது சர்க்காரே அந்த ஒரு வேலையை எடுத்துக்கொண்டிருக்கிறது என்று. அந்தக் காரணத்தால் தான் ஜில்லா கோவாப்பரேட்டீவ் சொஸைட்டிகளுக்கு கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் நமக்குத்தெரியும் இன்றைக்கு விலைவாசியைக் கட்டுப்படுத்தாதவரையில் கோவாப்பரேடீவ் சொஸைட்டிகளில் எந்த சொஸைட்டியை எடுத்துக் கொண்டாலும் இன்று ஊழல்கள் இல்லாத சொஸைட்டியே கிடையாது. அதிலும் குறிப்பாக தென் ஆற்காட்டில் நடந்ததைப்பற்றி போன மாதத்தில் பத்திரிகையில் பார்த்தோம், ஒரு லட்சம் ரூபாய் அளவில் அந்த சொஸைட்டியிலிருந்து களவு போய்விட்டது. அந்தளவிற்கு அங்கு ஊழல் நடந்திருக்கிறது. இந்த நிலைமையில் கொள்முதல் செய்யக்கூடிய அளவிற்கு விலைவாசியை கட்டுப்படுத்தாத அளவிற்கு ஏற்பாடு செய்தால் மேலும் ஊழல்கள் ஏற்படக்கூடிய விதத்தில்தான் நிலைமை ஏற்படும். ஆகவே, இந்த நேரத்தில் நான் எங்கள் அபிப்பிராயத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். விவசாயிகளிடத்தில் உணவுப்பொருள்களை வாங்கும் நேரத்தில் எந்த விலைக்கு வாங்கவேண்டும் என்றளவிற்கு விலை கட்டுபாடு இருக்கவேண்டும். அதேபோல் விவசாயிகளிடத்தில் எத்தனை சதவிகிதத்திற்கு மேல் கொடுத்து கொள்முதல் செய்யப்பட வேண்டுமென்றளவிற்கு இருக்கவேண்டும். அடுத்தபடியாக, இன்றைக்கு சர்க்கார் 2 லட்சம் டன் உணவுதான்யம் வாங்கப் போகிறது என்று சொன்னால் போதாது. இன்றையதினம் வருஷம் ஒன்றுக்கு, நம் ராஜ்யத்தில் இருக்கக்கூடிய மக்களுக்கு குறைந்த பட்சம் 50 லட்சம் டன் உணவுப்பொருள் தேவைப்படுகிறது. அப்படியிருக்கும்போது ஒரு மாதத் திற்கு தேவைப்படும் உணவைக் கூட கொள்முதல் செய்யாத ஒரு நிலைமைதான் இருக்கிறது. ஆகவே குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு தேவைப்படக்கூடிய உணவையாவது வாங்கி சேகரித்து வைத்தால்தான் திடீரென்று உணவுத்தட்டுப்பாடு ஏற்பட்டால் அதை சமாளிக்கக்கூடிய அளவிற்கு நிலைமை ஏற்படும். ஆகவே இன்றைக்கு விலைவாசி உயர்ந்து கொண்டே போகிறதே அதற்கு காரணம் என்ன என்பதையும் அமைச்சர் அவர்கள் தயவு செய்து சொல்லவேண்டுமென்று தாழ்மையாக கேட்டுக் கொள்கிறேன். மற்ற மற்ற அங்கத்தினர்கள் அபிப்பிராயங்கள் சொல்லக் கூடிய நேரத்தில் கேரளாவிலிருந்து அதிகப்படியான விலை கொடுத்து கொள்முதல் செய்வதின் காரணத்தால்தான் விலைவாசி உயருகிறது என்று அபிப்பிராயம் வருகிறது. ஆகவே இதற்கு உண்மையிலே என்ன காரணம் என்பதையும் நாம் பார்த்தாக வேண்டும். இன்றையதினம் கேரளா விலிருந்து அதிகமாக வாங்குவதால் விலை உயர்ந்து விட்டது என்று சொல்லுவது மக்களிடையே ஒரு தவறான எண்ணத்தை உண்டுபண்ணக் கூடிய நிலைமை ஏற்படும். இன்றைக்கு மட்டுமல்ல, நீண்ட நெடுங்காலமாக அவர்கள் வாங்குகிறார்கள். கேரளாவிலிருந்து வாங்கக்கூடியது குறுவை நெல், அரிசி. குறுவை என்று சொன்னால் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்யக்கூடிய நெல். இன்றைக்கு தஞ்சாவூர் ஜில்லாவில் உற்பத்தி செய்து அதை அதிகப்படியாக வாங்கக்கூடிய ஒரு தொழிலாக நீண்ட நெடுங்காலமாக இருந்துகொண்டு வருகிறது. ஆகவே இன்றைக்கு விவ சாயிகளிடத்திலே எந்த விலைக்கு வாங்கவேண்டுமென்று நிர்ணயம் செய்தால் அந்த அளவுக்கு உயரவே முடியாது. இன்றைக்கு பெரிய நிலப்பிரபுக்கள், பெரிய வியாபாரிகள் ஆயிரக்கணக்கான, லட்சக் கணக்கான மூட்டைகளை பதுக்கி வைக்கக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற் பட்டதின் விளைவாக, அதற்கு சாதகமாக சர்க்காரும் பாங்குகளிலிருந்து பணம் கொடுத்ததன் விளைவாக இந்த நெருக்கடி, விலைவாசி உயர்வதற் கான நிலைமை ஏற்பட்டது. பாங்குகளிலிருந்து பணம் கொடுப்பதை இப் பொழுது நிறுத்திவிட்டதாகக்கூட அமைச்சர் அவர்கள் சொல்லலாம். இன்றும் " கம்ப்ளீட்டாக " கொடுக்காமல் நிறுத்தவில்லை, ஓரளவுக்கு கொடுக்கத்தான் செய்கிறார்கள். அது மாத்திரமல்ல. ஆந்திராவிலிருந்து லட்சக்கணக்கான மூட்டைகள் உணவு தானியங்கள் இங்கே வந்து கொண்டி ருந்தன. அவைகள் இப்பொழுது இங்கு வருகின்றதா ? என் வரவில்லை?

11-30 a.m.

அப்படி இங்கே வருவதற்குப் பதிலாக அந்த உணவு தானியங்கள் எங்கோ போகின்றது. இதற்கு முன்னால் தெற்கு நோக்கி வந்துகொண்டிருந்தது. இப்பொழுது வடக்கு நோக்கி போய்க்கொண்டிருக்கிறது. வடக்கே இருக்கக்கூடிய சில மாகாணங்களில் பஞ்சம் ஏற்பட்டதன் காரணமாக அங்கே விலைவாசி அதிகமாக இருப்பதால், அந்தப் பக்கத்திற்கு உணவு தானியங்கள் போகக்கூடிய அளவுக்கு நிலைமை இருந்து கொண்டு வருகிறது. ஆகவேதான் ஆந்திராவில் கொள்முதல் செய்யக்கூடிய அளவுக்கு நிலைமை கிடையாது, விலைவாசிகளை இன்றைக்கு கட்டுப்படுத்தக்கூடிய நிலைமை கிடையாது. இதுபோன்று விட்டுக்கொண்டே போகக்கூடிய நிலைமை இருக்குமானால், தேசிய எண்ணத்தை பாழ்படுத்தக்கூடிய அளவுக்கு, ஜாதி எண்ணம் வரக்கூடிய அளவுக்கு, இனப்பாகுபாடு வரக்கூடிய அளவுக்கு, தேசிய மனோபாவம் அழிந்து, நமக்குள்ளேயே குழப்பம் ஏற்பட்டு, ஒன்றுபட்டு வாழ்வதற்குப் பதிலாக, ஒற்றுமை சீர்குலையக்கூடிய அளவுக்கு நிலைமை ஏற்படும் என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். விலைவாசியை கட்டுப்படுத்துவதோடு அல்லாமல், கள்ள மார்கெட்காரர்களையும், பதுக்கல்காரர்களையும் கண்டுபிடிப்பதற்கு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். 1945-ம் ஆண்டில் நேருஜி அவர்கள் ஜெயிலிலிருந்து வெளியே வந்தபிறகு மக்கள் மாண்டுமடியக்கூடிய நிலை ஏற்பட்டால் கள்ளமார்கெட்காரர்களை, தான் ஆட்சிபீடத்தில் இருந்தால் தூக்கிலிடுவேன் என்பதாகச் சொன்னார்கள். அம்மாதிரி மாண்டுமடியக் கூடிய நிலைமை இப்பொழுது இல்லை. ஆகையினால் அவர்களை தூக்கிலிடவேண்டிய அவசியம் இல்லை. வெள்ளம் வருவதற்கு முன் அணை கட்டிக் காக்கவேண்டும். மாண்டு மடியக்கூடிய நிலைமை வருவதற்கு முன்னால் கள்ளமார்கெட்காரர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். நேருஜி அவர்கள் சொன்ன மாதிரி தூக்கிலிடாவிட்டாலும், அவர்களை ஒரு மாதம் கம்பி எண்ணச் சொன்னாலே போதும். அந்த அளவுக்காவது நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்று பார்த்தல், இல்லை. கந்தசாமி முதலியார் அவர்கள் வேண்டுமானால் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்று சொல்லலாம். ஆனால் அம்மாதிரி ஒன்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக நான் புரிந்துகொள்ள முடியவில்லை. நேருஜி அவர்களே இப்பொழுதுதான் இதன் முக்கியத்துவத்தை உணர்ந்து கள்ளமார்கெட்காரர்கள்மீது தீவிரமான நடவடிக்கை எடுக்கப்போகிறோம் என்று பார்லிமெண்டில் சொல்லியிருக்கிறார்கள். சர்வ கட்சி கொண்ட ஒரு கமிட்டியை அமைத்து, ராஜ்யங்களிலும் அம்மாதிரி சர்வகட்சி கொண்ட கமிட்டியை அமைத்து, உணவுப் பற்றாக்குறையை போக்குவதற்காகவும், விலைவாசியை கட்டுப்படுத்துவதற்காகவும் முன் வருகிறோம் என்று இப்பொழுதுதான் நிலைமையை புரிந்துகொண்டு சொல்லியிருக்கிறார்.

அதுபோன்று பால்பண்ணை சென்னையில் மாத்திரம் இருந்தால் போதாது. ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு அமைக்கப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, உரம், அதாவது அமோனியம் சல்பேட் சொஸைடிகள் மூலம் கொடுக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். விவசாயிகளிடமிருந்து குறைந்த ரேட்டுக்கு வியாபாரிகள் உணவு தானியங்களை வாங்கி, அதை அவர்கள் பிரியம்போல் விற்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்கு கிடைக்கக்கூடிய உரம் போன்ற பலவிதமான பொருள்கள் குறைந்த விலைக்குக் கிடைப்பதில்லை. ஒரு மடங்கு, இரண்டு மடங்கு அதிக விலை கொடுத்து வாங்கக்கூடிய அளவுக்கு இருக்கிறது. கண்ட்ரோல் ரேட் 30 ரூ. ஆக இருந்தால், பிளாக்மார்கெட் ரேட் ரூ. 45, 50 ஆக இருக்கிறது. இங்கிருந்து சொஸைடிகளுக்குப் போனால், கந்தன், முருகன், கோபாலன் கோவிந்தன், மாரியப்பன், குப்புசுவாமி என்று பல பெயர்களில் பில் போட்டு விட்டு, மூட்டைகள் சொஸைடிக்கே போவது கிடையாது, லாரியோடு வேறு எங்கேயாவது போய்விடும். எந்தப் பக்கம் போகிறது என்று யாருக்கும் தெரியாது. அந்த நேரத்தில் 2, 3 நாட்களுக்கு சொஸைடியை திறக்கவேமாட்டார்கள். 3, 4, 5 நாட்கள்

28th March 1959] [Sri V. K. Kothandaraman]

கழித்து உரம் வேண்டுமென்று சொன்னால், காலியாகிவிட்டது, விநியோகம் பண்ணியாகிவிட்டது என்று ரசீது புத்தகத்தை எடுத்துக் காட்டக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது. ஆகவே, உண்மையிலேயே ஏழை விவசாயிகளுக்கு இந்த உரம் நல்ல முறையில் குறைந்த விலைக்கு விநியோகிக்கப்படவேண்டும். யாரையும் ஏமாற்றாமல் நல்ல முறையில் உண்மையிலேயே விவசாயிகளிடத்தில் கையெழுத்து வாங்கிக்கொண்டு அவர்களுக்கு குறைந்த விலையில் உரம் விநியோகம் செய்யவேண்டும். சொஸைடிகளில் நல்ல முறையில் உரம் விநியோகிக்கப்படுகிறதா, இல்லையா என்று கண்காணிக்கவேண்டும். ஏதாவது ரிபோர்ட்டு வந்தால், விசாரணை செய்து உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கவேண்டும். சொஸைடிகளில் எத்தனையோ ஊழல்கள் இருக்கின்றன. எத்தனையோ "கம்ப்ளேண்ட்ஸ்" செய்யப்பட்டபோதிலும், விசாரணையை வருஷக்கணக்கில் நீட்டிக் கொண்டிருப்பதின் காரணமாக, ஆறின கஞ்சி பழைய கஞ்சி என்பதுபோல், நாளடைவில் கள்ளமார்கெட்காரர்களை விட்டுவிடவேண்டுமென்பதற்காக விசாரணையை நீடித்துக்கொண்டே போகிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, நல்லமுறையில் பரிபூரணமாக விவசாயிகளுக்கு உரம் விநியோகம் செய்வதற்கு சர்க்கார் உடனடியாக வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

கடைசியாக, ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லி இரண்டு நிமிஷத்தில் முடித்துக்கொள்ளுகிறேன்.

Mr. SPEAKER : ஒரு நிமிஷத்திற்குள் முடித்துக்கொள்ளுங்கள்.

Sri V. K. KOTHANDARAMAN : சர்க்காருக்கு வருமானம் வருவதற்காகவேண்டி அவர்கள் ஒரு டிரேடை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று யோசனை சொல்ல ஆசைப்படுகிறேன். தேயிலைத் தோட்டம் சம்பந்தமாக 90 வருஷங்களுக்கு முன்னால் வெள்ளையர்களுடன் ஒரு அக்ரிமெண்டு செய்யப்பட்டது.

Mr. SPEAKER : அதற்கும், இதற்கும் என்ன சம்பந்தம்? இது தனிப்பட்டவர் நடத்தும் வியாபாரம் அல்ல. அரசாங்கம் நடத்தும் வியாபாரம்.

Sri V. K. KOTHANDARAMAN : அரசாங்கம் இந்த வியாபாரத்தை எடுத்து நடத்தினால் நல்ல வருமானம் வரும் என்பதற்காகத்தான் சொல்லுகிறேன். இந்த வருஷம் அந்த அக்ரிமெண்டு ரத்தாகிறது. அவர்கள் இந்தத் தொழிலில் கொள்ளைலாபம் சம்பாதிக்கிறார்கள். அந்தத் தேயிலைத் தோட்டம் சம்பந்தமாக மறுபடியும் வெள்ளையர்களே அக்ரிமெண்டு செய்து கொள்ளைலாபம் அடித்துக்கொண்டு போகாமல் இருக்கும்படி, அந்த லாபம் நம்முடைய ராஜ்ய மக்களுக்கே கிடைக்கும் வகையில் நமது சர்க்கார் 1,000 ஏக்கர் நிலத்தையும் எடுத்து தேயிலைத் தோட்டத்தை அபிவிருத்தி செய்தால் அதன் மூலம் கணிசமான வருமானம் எதிர்பார்க்கலாம் என்பதை தாழ்மையோடு சொல்லிக்கொண்டு, என்னுடைய பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

* **Sri M. R. KANDASWAMI MUDALIYAR** : **On a point of personal explanation. Sir.** நான் இப்பொழுது கள்ளமார்கெட்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னதாக கனம் அங்கத்தினர் அவர்கள் கூறினார்கள். நான் சொன்னது, நேருஜி ஐந்தாண்டு காலத்திற்கு முன்னால் சொன்னபோது, அந்தக் காலத்தில் கள்ளமார்கெட்காரர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் என்பதுதான். இப்பொழுது விலை கட்டுப்பாடு வந்தபிறபாடு கள்ளமார்கெட்காரர் யாரும் கண்டுபிடிக்கப்படவில்லை, நடவடிக்கை எடுக்காமலும் விட்டுவிடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

[28th March 1959

SRI T. M. NALLASWAMI : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய இந்த மான்யத்தை ஆதரித்து, அதே சமயத்தில் என்னுடைய சில கருத்துகளையும் இதிலே சொல்ல விரும்புகிறேன். நான் விவசாயத் தொழிலே மேற்கொண்டு இருக்கக்கூடியவன். என்னுடைய தொகுதியும் அநேகமாக விவசாயிகள் நிறைந்த தொகுதியாகும். இன்று சர்க்கார் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள் சம்பந்தமாக அங்கே ஏற்பட்டிருக்கிற விளைவுகள்பற்றி தொகுதியிலே உள்ளவர்கள் என்னிடத்திலே பேசும்போது பெரும்பாலும் தங்கள் வருத்தத்தையே தெரிவிக்கிறார்கள். நாட்டிலே விலைவாசி ஏற்றத்தினால் வாங்கி உண்பவர்களுக்கு கஷ்டம் ஏற்படுகிறது, அந்த நிலை தவிர்க்கப்பட வேண்டும் என்பதற்காக சர்க்கார் பல நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது அவசியம். அப்படி நடவடிக்கை எடுத்ததின் விளைவாக அங்கே என்ன விளைவு ஏற்பட்டிருக்கிறது என்றால் ஏழைகளாகிய விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யக்கூடிய தானியத்தை குறிப்பாக அரிசி, நெல்லை உடனடியாக விற்கவேண்டிய நிர்ப்பந்தமான சூழ்நிலையில் இருக்கிறார்கள். இப்பொழுது அவர்கள் உற்பத்தி செய்கின்ற நெல் வியாபாரிகளால் வாங்கப்படுகிறது. பொருளாதார வசதி உடைய விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்த நெல்லை விற்காமல் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். சர்க்கார் நிர்ணயம் செய்திருக்கக்கூடிய விலை போதியதாக இல்லை. அடுத்தபடியாக சர்க்கார் தலையிட்டு அந்த நெல்லை வாங்குவதற்கு "ப்ரொக்யூர்" பண்ணுவதற்கு தீவிரமான நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இந்த நிலை வருமானால் உண்மையாகவே அவர்கள் விவசாயத்தில் குறிப்பாக நெல் விவசாயத்தில் கவனம் குறையத்தான் செய்யும் அதே சமயத்தில் தான்யங்களை வாங்கி சாப்பிடுகின்றவர்களின் நிலையை எடுத்துக்கொண்டு பார்த்தால் நமது நாட்டில் சரியான புள்ளி விவரங்கள் இல்லாததினாலும், நமது நாட்டுக்கு எவ்வளவு தேவை என்கின்ற விவரம் நமக்கு சரியானபடி தெரியாத காரணத்தினாலும், எந்தெந்த பகுதிகள் ஸர்ப்ளஸ்-ஸாக இருக்கிறது, எந்தெந்த இடங்கள் பற்றாக்குறையாக இருக்கிறது என்கின்ற விவரங்கள் இல்லாத காரணத்தினால், ஒரு சில இடங்களில் மட்டும் சரியாக கட்டுப்படுத்தப்பட்டிருப்பதின் காரணமாக சர்க்கார் நிர்ணயித்துள்ள விலைக்குத் தான்யங்கள் கிடைத்து வருகின்றது, சில இடங்களில் கூடுதலான விலைக்கே வாங்க வேண்டிய நிலைமை இருந்து வருகின்றது. இந்த நிலைமை இருந்து வருவதை நாம் பார்க்கின்றோம். ஆகவே இந்த நிலைமையில் வாங்கி சாப்பிடுகின்றவர்களுக்கு ஓரளவு கஷ்டம்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கின்றோம். குறிப்பாக எங்கள் தாலூகாவின் அண்மையில் உள்ள கோயம்புத்தூர் பகுதியில், தாராபுரத்தில் அரிசி மூட்டை ஒன்று 60 ரூபாய் வரையிலும் விலை இருந்து வருவதாக கேள்விப்படுகிறேன். அதே சமயத்தில் நெல்லை அதிகவிலைக்கு விற்க முடியாமற்போவதினாலும் நிர்ப்பந்தமாக அங்குள்ள விவசாயிகளுக்கு, சர்க்கார் நிர்ணயித்திருக்கின்ற குறைந்த விலைக்கு விற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இந்த அளவில் பார்க்கின்றபொழுது, விவசாயிகளுக்கும் இதனால் நன்மையில்லை, வாங்கி சாப்படுகின்றவர்களுக்கும் நன்மையில்லை என்கின்ற நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் சொன்னது மாதிரி, ஆந்திராவிலிருந்து வரவேண்டிய நெல் வரவில்லை, அதே நேரத்தில் வழக்கமாக கேரளாவுக்கு போய்க் கொண்டிருக்கிற நெல் போய்க்கொண்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கின்றோம். இந்த மாதிரியான நிலை நீடித்துக்கொண்டிருந்தால் இப்போதிருக்கின்ற நிலைமையை விட மோசமான நிலைமை ஏற்பட்டு உணவு கட்டுப்பாடும், ரேஷனும் வரவேண்டிய நிலை ஏற்படும் என்றும் குறிப்பிட்டார்கள். அந்த மாதிரியான ஒரு நிலை வரக்கூடாது என்றுதான் நான் விரும்புகிறேன். ரேஷனைப்பற்றி நினைக்கும்போது மக்களுக்கு எல்லாம் பீதி ஏற்படுகிறது. நல்ல நெல்லை நல்ல முறையில் சாப்பிட முடியாமல், அரிசியை எல்லாம் நீண்ட நாள் தேக்கி வைத்திருப்பதின் காரணமாக ஏற்படுகின்ற நாற்றத்தோடு சேர்ந்த அரிசியைத்தான் சாப்பிட வேண்டிய நிலை ஏற்படும் என்பதை அமைச்சர் அவர்கள் உட்பட நாம் எல்லோரும் அறிவோம். அம்மாதிரியான ஒரு நிலை நமக்கு வந்து

28th March 1959] [Sri T. M. Nallaswami]

விடக்கூடாது என்றுதான் நான் குறிப்பிடவிரும்புகிறேன். இப்போது சர்க்கார் கொள்முதல் செய்வதை எடுத்துக்கொண்டால், சர்க்கார் கொள் முதல் செய்த நெல்லையெல்லாம் நீண்ட நாள் ஸ்டோர் செய்து வைப்பதற்கு தகுந்த வசதிவேண்டும். அதற்கு தகுந்த கோடவுன் வசதி வேண்டும். சாதாரணமாக விவசாயிகள் நெல்லை ஸ்டோர் செய்யும் போது நன்ருக வெயிலில் உலர வைத்து வைப்பது வழக்கம். ஆனுல் இன்றைக்கு நெல் கொள்முதல் செய்கின்ற கோவாப்பரேடிவ் ஸொஸைட்டிகளுக்கோ அல்லது மார்க்கட்டிங் ஸொஸைட்டிகளுக்கோ தகுந்த கோடவுன் வசதி கிடையாது, அதே போன்று தான் சர்க்கார் அமர்த்தியிருக்கும் வியா பாரிகள் கொள்முதல் செய்தாலும் சரியான விதத்தில் ஸ்டாக் வைக்க முடியாது, (Dump) ஈரமாக சேர்த்து வைத்திருப்பார்கள், இதன் காரண மாக நெல் கெட்டுவிடும். சாதாரணமான தமிழில் சொன்னுல் நெல் எல் லாம் அவிந்து போய் நாற்றம் எடுத்துவிடும். ஆகவே சர்க்கார் கொள் முதல் செய்கின்றது என்கின்ற நேரத்தில் கொள்முதல் செய்கின்ற நெல்லை யெல்லாம் பாதுகாத்து வைத்திருப்பதற்கு கோடவுன் கிடையாது என்பதையும் நாம் சிந்தித்துப்பார்க்கவேண்டும். இந்த முறையில் பார்க்கும் போது சர்க்கார் நிர்ணயித்திருக்கும் விலையில் நெல் கொடுப்பதால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பயனும் இல்லை, இப்போது நிர்ணயிக்கப் பட்டிருக்கும் விலை 56–57-ல் இருந்த நெல்விலையை அனுசரித்துத் தான் விலையை நிர்ணயித்திருக்கவேண்டும் என்று தோன்றுகிறது. ஆனுல் 56–57-ல் இருந்த நிலைமையையும் இப்போது இருக்கின்ற நிலைமையையும் நாம் எடுத்துப் பார்க்க வேண்டும். சாதாரணமாக விவசாயத்தில் ஈடுபட்டிருக்கின்ற தொழிலாளர்களுக்கு 1956–57-ல் 12 அணு ஒரு நேரத் திற்கு சம்பளம் கொடுத்தால் போதும். காலை 9 மணிக்கு வந்து 1 மணி வரையிலும் வேலை செய்து விட்டு போவதற்கு 12 அணு கூலி கொடுத் தால் போதும் என்ற நிலை இருந்தது. இப்போது ஒரு ரூபாய் ஒன்றேகால் ரூபாய் என்று கூலி கேட்கிருர்கள். அது மட்டுமல்ல விவசாயத்திற்கு வேண்டிய பொருட்களின் விலை யெல்லாம் ஏறிக்கொண் டிருக்கிறது. கவலை வைத்து தண்ணீர் இறைக்கவேண்டும் என்ருல் மாடு களின் விலை எல்லாம் அதிகமாக இருந்து கொண்டிருக்கிறது. சில இடங்களில் இன்ஜின் வைத்து தண்ணீர் இறைக்கலாம் என்ருல் இன்ஜின் பார்ட்ஸ் எல்லாம் விலை அதிகமாக இருக்கிறது. டீஸெல் ஆயிலை எடுத் துக்கொண்டால் இப்போது இரண்டு ஆண்டுகளுக்கு முன்னுல் இருந்ததை விட எவ்வளவோ விலையேறியிருக்கிறது. இவ்விடம் அதிக விலை கொடுத்து டீஸெல் ஆயிலை உபயோகித்து விவசாயம் செய்வதைவிட விவசாயத்தையே கைவிட்டு விடலாம் என்ற முடிவுக்கு பல விவசாயிகள் வந்திருக்கிருர்கள். சமீபத்தில் ஏற்பட்ட வரி உயர்வின் காரணமாக விவசாயிகளுக்கு ஏற்பட் டிருக்கின்ற கஷ்டங்களைப்பற்றி அமைச்சர் அவர்களிடம் தெருவிக்கப்பட்டிருக் கிறது. இந்த நிலைமையில் விவசாயம் செய்வது கட்டுப்படியாகாது என்கிற முறையில் இப்போது விவசாயிகள் இருந்து வருகிருர்கள். அதே போன்று தான் பிண்ணுக்கு, உரம், அமோனியம் சல்பேட் போன்றவைகளும் விலை அதிகமாகிக்கொண்டே போகிறது. இவ்விதம் செலவு செய்து விவசாயம் செய்து விட்டு, பின்னுல் கிடைக்கிற வருமானத்தைப் பார்த்தால் மிகவும் குறைந்தபட்சமாகவே இருப்பதைப் பார்த்து நிச்சயமாக அவர்களுக்கு விவசாயத்தில் இருக்கின்ற உற்சாகம் குறைந்துவிடும். பொதுவாக எல்லோரும் விவசாயத்தின் மூலமாக தங்களுக்கு நல்ல வருமானம் கிடைக்க வேண்டும் என்று எண்ணுவிட்டாலும் கூட தகுந்த அளவுக்காவது வரு மானம் வரவேண்டும் என்று தான் விரும்புவார்கள். இந்த நிலை யில் இருக்கின்ற விவசாயிகளுக்கு வருமானம் மிகவும் குறைவாக இருந் தால் நிச்சயமாக அவர்களது உற்சாகம் குன்றிவிடும். ஆகவே விவசாயி களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்திற்கு இருக்கிறது. ஆந்திராவை எடுத்துக்கொண்டால் சர்க்கார் அதிகமாக விலையை குறைக் கவில்லை, இதன் காரணமாக அங்குள்ள விவசாயிகளை சர்க்கார் பாதுகாக்கக் கூடிய நிலை இருந்து வருகிறது. குறிப்பிட்ட அளவுக்கு அதாவது 25 சத மானம் மட்டும் அரசாங்கத்திற்கு கொடுத்துவிட்டு மீதியை எந்த விலைக்கு வேண்டுமானுலும் விற்பதற்குத் தகுந்த முறையில் தான் ஆந்திராவில் நடவடிக்கை எடுத்து வருகிருர்கள். இந்தவிதமாக..............

[28th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஆந்திராவில் விலை அதிகமாக இருப்பதால் விவசாயிகளுக்கு எந்தவிதமான பலனும் கிடைத்து வருகிறது என்று சொல்லுவதற்கில்லை. இதனால் அதிகமான வியாபாரிகள் தான் பலன் அடைந்து வருகிறார்கள் என்பதை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

* **SRI T. M. NALLASWAMI:** அங்கு இப்போது இருக்கின்ற நிலையை எடுத்துக்கொண்டால் மூன்று ஏக்கர், நான்கு ஏக்கர், ஐந்து ஏக்கர் என்றெல்லாம் வைத்துக்கொண்டிருக்கின்றவர்களை விட்டுவிட்டு பெரிய விஸ்தீர்ணமுள்ள நிலங்களை வைத்திருப்பவர்கள் மட்டும் ஏக்கர் ஒன்றுக்கு இவ்வளவு நெல் கொடுத்துவிட வேண்டும் என்று தீர்மானித்திருக்கிறார்கள். இந்த முறையை நாம் முன்னாலேயே கொண்டு வந்திருக்கலாம், அதே போன்று தான் கேரளாவுக்குப் போகின்ற நெல்லையும் தடை செய்திருந்தால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது என்பது என்னுடைய அபிப்பிராயம். அமைச்சர் அவர்களுக்கு வேண்டுமானால் உயர்ந்த நிலையில் (லெவலில்) வேறுவிதமான கருத்துக்கள் தோன்றலாம். ஆனால் என் போன்றவர்களுக்கு தோன்றுவது இதுதான். இன்றைக்கு இந்த லெவி லிஸ்டத்தை நாம் கொண்டுவர முடியாது. ஏனென்றால் அனேகமாக விவசாயிகள் நெல்லை எல்லாம் விற்றாய்விட்டது. இனிமேல் தான் சாப்பாடுக்கு நெல் இல்லை என்கிற கூக்குரல் வரப்போகிறது. ஆகவே இந்த நிலை இனிமேல் ஏற்படாத வகையிலாவது குறைந்தது 25 சதமானம் மட்டும் கொடுக்க வேண்டும் என்ற முறையை கொண்டுவரலாம். இப்போது நெல் வாங்குவது எல்லாம் கூட்டுறவு ஸொஸைட்டிகள் மூலம் வாங்கிவருவதால் கிராமங்களிலிருந்து நெல்லை வாங்கி விற்கும் சிறு வியாபாரி, கமிஷன் வியாபாரிகள், போன்ற பல ஏஜென்ஸிகள் இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வேலையில்லாமல் கஷ்டப்படவேண்டிய நிலைமையும் ஏற்படுகிறது. இதை அரசாங்கம் முக்கியமாக சமாளித்தாக வேண்டும். இதை சரியானபடி சமாளிக்கமுடியவில்லை என்றால் மக்களின் பிரதிநிதிகளாக ஆளும் பொறுப்பை ஏற்றிருக்கக்கூடியவர்களில் ஒருவனாகிய என்போன்றவர்கள் தலைகுனிய வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது என்பதை தெரிவிக்க ஆசைப்படுகிறேன். அடுத்தபடியாக உரம் விநியோகம் சம்பந்தமாக, பல தவறுதல்கள் நடக்கின்றன, தவறுதல்கள் எல்லாம் நடைபெறாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றால் கண்ட்ரோல் ஏற்படுத்த வேண்டும். இவ்விதம் கண்ட்ரோல் ஏற்படுத்தி விலையை நிர்ணயம் செய்தவுடன் அளவில் குறைந்துவிடுகிறது. அதோடு கலப்படமும் சேர்ந்துவிடுகிறது. அமோனியம் உப்போடு வேறு பலவற்றையும் சேர்த்துவிடுகிறார்கள். அதையும் சர்க்கார் தடுக்க முயற்சி செய்யவேண்டும். அதே போன்று பால் சப்ளை செய்வதிலும் இப்போது சென்னை நகரத்தில் மட்டும் தான் இந்த முறையை நடத்தி வருகிறார்கள். இதே போன்று இந்த திட்டத்தை எல்லா முனிசிபல் நகரங்களுக்கும் விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கான திட்டவட்டமான ஒரு (ப்ளானை) கொள்கையை ஏற்படுத்தி திட்டங்களை வகுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். சென்னை நகரத்தைப் பொறுத்தவரை தண்ணீரில்தான் பாலை கலந்து விற்றுவருவதாக தெருகிறது. இதையும் அரசாங்கம் கவனித்து தக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

* **SRI V. SANKARAN:** கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் இன்றைக்கு தான்யங்கள் மீது இருக்கும் விலைவாசியை குறைப்பதற்காக பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்கள். இதில் நடவடிக்கை எடுப்பதற்கு கொஞ்சம் காலதாமதம் ஏற்பட்டதால் இதில் முழு வெற்றியடைந்திருக்கிறது என்று சொல்லமுடியாது. நடவடிக்கைகளை அறுவடை ஆரம்பத்திலே எடுத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும். அதோடு இந்த லெவி முறையையும் அப்போதே கொண்டு வந்திருக்க வேண்டும். அந்த சந்தர்ப்பத்திலேயே (Levy) லெவி முறையை கொண்டு வந்திருந்தால் இப்போது ஏற்பட்டிருக்கின்ற சிக்கல்கள் ஒன்றும் வந்திருக்காது. அதே போல் தான் கேரளாவுக்கு நெல் போவதையும் கொஞ்ச காலத்திற்கு முன்னதாகவே தடை செய்திருக்கலாம். இப்போது அரிசி போய்க்கொண்டிருக்கிறது. அதிலும் ஒரு

28th March 1959] [Sri V. Sankaran]

கஷ்டமான நிலை ஏற்படுவதற்கு முன்னாலேயே தடுப்பு நடவடிக்கை எடுத்தால் நல்ல முறையாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கி றேன்.

இதுபோன்று பல நடவடிக்கைகள் எடுக்க வேண்டியதை சீக்கிரமாக எடுக்காமல் தள்ளித் தள்ளிப் போடுவது, ஆங்கிலத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள் குதிரை போன பிறகு லாயத்தை மூடினார்கள் என்று, அந்த மாதிரி செய்யாமல், ஒரு காரியம் செய்யவேண்டியது என்று தோன்றினால், உடனடியாக நடவடிக்கைகள் எடுத்தால் நன்றாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 11-50 a.m.

எங்களுடைய ஊர் சம்பந்தமாக சில வார்த்தைகள் சொல்ல விரும்பு கிறேன். இது ஒரு விஷஸ் ஸர்க்கிள் போன்று போகிறது. பாடி மர்ச் செண்டஸ் என்று இருக்கிறார்கள், ரைஸ் மில் ஓனர்ஸ் இருக்கிறார்கள், மற்றும் அக்ரிகல்சரிஸ்ட்ஸ் இருக்கிறார்கள். இந்த மூன்று பேர்களேயும் எடுத்துக்கொண்டால் ஒருவரையொருவர் குற்றம் சொல்லுவதாக இருக் கிறது. பாடி மர்ச்சண்ட்சைக் கேட்டால் ரைஸ் மில்காரர்களைக் குறிப்பாக கண்காணிக்கவேண்டுமென்று சொல்லுகிறார்கள். ரைஸ் மில்காரர்களைக் கேட்டால் அவர்கள் பாடி மர்செண்ட்ஸைக் குறை சொல்லுகிறார்கள். இரண்டு பேர்களுமாகச் சேர்ந்துகொண்டு அக்ரிகல்சரிஸ்ட்ஸைக் குறை சொல் லுகிறார்கள். அக்ரிகல்சரிஸ்ட்ஸ்தான் நெல் பேட்டைக்கு, நெல்லைக் கொண் டுவந்து கொடுப்பது வழக்கம். விலை நிர்ணயம் செய்திருப்பதானது குறைவாக இருப்பதால் தான் அவர்கள் கொண்டுவந்து கொடுக்கமாட்டேன் என்று சொல்லுகிறார்கள் என்ற பாடி மர்செண்ட்ஸ் முறையிடுகிறார்கள். விவசாயிகளிடமிருந்தும், மிராசுதார்களிடமிருந்தும் நெல்லை வாங்கிக் கொடுக்க ஏற்பாடு செய்தால், நாங்கள் 50 சதவீதம் Procurement-க்கு விற்கிறோம் என்று சொல்லுகிறார்கள். நெல் வராத காரணத்தினால் இப்போது மதுரையிலுள்ள நெல் பேட்டைகளெல்லாம் மூடப்பட்டிருக்கின்றன. இதனால் 2,000 அல்லது 3,000 தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார் கள். இந்த வியாபாரமே ஸ்தம்பித்திருக்கிறது என்று சொல்லவேண்டும். இப்படிப்பட்ட நிலையில் யாரிடம் நெல் இருக்கிறது என்பதைச் சர்க்கார் கண்காணித்து உடனடியாக பாடி மர்ச்செண்ட்ஸ்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

நெல் வாங்குவதிலும், நூற்றுக்கணக்கான மூட்டைகளை வாங்கி ஸ்டோர் செய்ய, எலி, தண்ணீர், பூச்சி முதலியவைகளிலிருந்து பாதுகாப்பாக வைக்க இடத்தை முதலில் தயார் செய்துகொண்டு பிறகு வாங்குவது நல்லதாக இருக்கும். Godowns நல்ல முறையில் கெடாதவகையில் பாது காப்பு உள்ளதாக முன்னால் வைத்துக்கொண்டுதான் பின் Procure செய்ய முற்படலாம்.

கமிஷன் ஏஜெண்டாக வியாபாரம் செய்பவர்களுக்கு ஸ்டாக் செய்து வைக்க இடம் இல்லாமலும், சர்க்கார் ப்ரொக்யூர்மெண்டு செய்ய நாள் ஆகின்றதாலும், விலை கிடைப்பதில் தாமதம் ஆவதாலும், மிகவும் கஷ்டங் கள் படுவதாக சொல்லுகிறார்கள். அதுவும், இது 7, 8, 10 நாட்கள் தாமதப்படுவதால் ஆயிரக்கணக்கான மூட்டைகளை வைத்துக்கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். இதை அரசாங்கம் நன்கு கவனிக்கவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பற்றாக்குறைப் பிரதேசத்தில் இந்த ப்ரொக்யூர்மெண்ட் செய்வதை எடுத்து விட்டு சர்பளஸ் இடத்தில் மட்டும் வைத்துக் கொண்டால் இந்தப் பிரச்னை தீர்ந்து விடும். மதுரை, ராமநாதபுரம் பகுதிகளெல்லாம் பற்றாக்குறை பிரதேசங்கள் என்பது தெரிந்ததுதான். அரசாங்கம் ப்ரொக் யூர்மெண்ட் செய்வதை தஞ்சை போன்ற உபரி ஜில்லாக்களோடு நிறுத்திக் கொண்டால் கஷ்டம் இருக்காது. அதுவும் முடியாவிட்டால் பற்றாக்குறை பிரதேசத்தின்போது பிரக்யூர்மெண்டு இருக்காது. அதுவும் முடியாவிட்டால் பற்றாக்குறை பிரதேசத்தின் போது பிரக்யூர்மெண்டு 50 சதவீதம் என்பதை 25 சதவீதம் என்று வைத்தால் நல்லதாக இருக்கும்.

அதோடு கூட பழைய கடன் என்ற முறையில் 50 சதவீதம் போக பாக்கி 50 சதவீதத்தையும் கொடுத்து இருந்து ஈடுகட்டியாகவேண்டுமென்றும், கொடுக்காவிட்டால் அது பெரிய குற்றமாகக் கருதப்படும் என்றும் சொல்லப்படுகிறது. அது மிகவும் கஷ்டமாக இருப்பதால் பழைய கடனை வஜா செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

நான் ஏற்கெனவேயே கூறியது போல் கேரளத்திற்கு அரிசி போவதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கிராப் இன்ஷ்யூரன்ஸ் பற்றி பலர் சொல்லியிருக்கிறார்கள். அதை ஏற்று நடத்தினால் நன்றாக இருக்கும்.

மில்க் பாக்டரிக்கு 12 லட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகச் சொல்லி இருக்கிறார்கள். பம்பாயில் இருக்கிற ஆரே மில்க் காலனி மாதிரி இங்கே ஒரு காலனியை ஏற்படுத்த 1 கோடி ரூபாய்க்கு மத்திய சர்க்கார் ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டது. அதைப் பற்றி மேற்கொண்டு ஒன்றும் தெரியவில்லை. அதை அமைச்சர் விளக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கோடவுண் சம்பந்தப்பட்ட எல்லா வசதிகளையும் ஏற்பாடு செய்யாமல் ப்ரொக்யூர் செய்து விட்டால் தானியங்கள் கெட்டுவிடும். அரிசி பதமாக இல்லாமல் இருந்தால் வீணாகிவிடும். பச்சரிசி சிறிது காலத்திலேயே புழுத்துவிடும். புழுங்கல் அரிசி காய்ச்சல் இல்லாமலிருந்தால் சீக்கிரம் நாற்றம் ஏற்பட்டுவிடும்.

அதோடுகூட மிடில்மென்களைப் பூராவாக நிறுத்திவிட முடியாது. அவர்களுக்குத்தான் தொழில் நுணுக்கம் நன்றாகத் தெரியும். அப்போதைக்கப்போது விலைவாசிகள் தெரியும். சர்க்கார் எடுத்து நடத்துவதில் பல குறைகள் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டியதும் அவசியமாகிறது. திடீரென்று ஸ்டேட் டிரேடிங் ஆரம்பித்து, குடவுன் வசதிகளை ஏற்படுத்தாமலும் மற்ற குறைகளை கவனிக்காமலும் ப்ரொக்யூர்மெண்ட் செய்துவிட்டால் அதனால் பாதகம் ஏற்படும். கமிஷன் ஏஜெண்டுகள் மூட்டைக்கு 4 அணா அல்லது $4\frac{1}{2}$ அணாதான் தலைகளுக்கு கமிஷன் வாங்குகிறார்கள். நாடெங்கும் பல உணவுப் பொருள் இருக்கிற மிடில் மென்களை வியாபாரத்தால் அழித்துவிடுவது பொருந்தாது என்று சொல்லிக்கொண்டு அதையும் நன்கு கவனிக்கவேண்டுமென்று கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

***SRI K. SATTANATHA KARAYALAR:** கனம் சபாநாயகர் அவர்களே, இந்த மான்யக் கோரிக்கையின் மீது கொடுத்திருக்கக்கூடிய வெட்டுப் பிரேரணை ஆதரித்து ஒரு சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன்.

பொதுவிலே, கொள்கை அடிப்படையிலே, சர்க்கார் கையாளக் கூடிய (State Trading in foodgrains)-ல் கொள்கையை நான் ஆதரிக்கிறேன். ஆனால், கொள்கை அளவிலே இதை ஆதரிக்கும்போது அதிலே உள்ள ஒரு சில ஊழல்களையும், அதிலே வரவிருக்கும் அல்லது ஏற்படவிருக்கும் சில குறைகளையும் சுட்டிக்காட்ட அவாவுறுகிறேன். சர்க்காருடைய நோக்கம் ஸ்டேட் டிரேடிங் பொறுத்த வரையில், விலைவாசி அதிகம் போகாமல் தடுக்கவேண்டும் என்பது ஒன்று, உற்பத்தியாளர்களுக்கு ஒரு நியாயமான அதிக விலை கிடைக்கவேண்டும் என்பது இரண்டு. மார்க்கெட்டிங் சர்ப்ளஸை கவனித்து இருக்கக்கூடியதைக் கண்காணித்துக் கொள்வது என்பது மூன்று என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே, விலை அதிகமாகப் போவதைத் தடுக்க இது வரையில் கையாண்டிருக்கிற முயற்சிகளைப் பார்ப்போமானால் அது வெற்றிபெற்றதாகத் தெரியவில்லை. முன்பு பேசிய பல்வேறு அங்கத்தினர்களும் சபையிலே குறிப்பிட்டார்கள். இன்னும் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது என்று. இப்படி விலை ஏறிக்கொண்டே இருப்பதற்கு முக்கிய காரணம் இந்த சபையிலே ஒரு சிலர் குறிப்பிட்ட முக்கிய காரணம்—கேரளத்திற்கு நெல் அதிகமாகப் போகிறது என்பது. ஆனால், அதே முறையிலே கேரள

28th March 1959] [Sri K. Sattanatha Karayalar]

சட்ட சபையிலே எழக்கூடிய குரல், தமிழ்நாட்டுக்குத் தண்ணீரை கொடுக்கிறார்கள் என்பது. இதே போன்று அங்கே பல்வேறு கட்சிகளும் காங்கிரஸ் கட்சி உள்பட தமிழ்நாட்டுக்கு அதிகமான தண்ணீர் கொடுக்கிறார்கள்—கொடுத்து விடுவார்கள்—கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் அரசியல் செல்வாக்கை வளர்ப்பதற்காக கொடுக்கிறார்கள் என்று அந்த சபையிலே குறிப்பிடப்படுகிறது. நமது மாகாணத்தைப் பொறுத்த மட்டில், அது தற்போது இயங்கி வரும் ஸோனிலேயிருந்து தனியாகப் பிரிந்து, தனியாக இயங்கவேண்டும் என்ற ஒரு அபிப்பிராயம் நிலவி வருகிறது. சிலர் சபையில் அதை குறிப்பிட்டார்கள். ஓரளவுக்கு இந்த அபிப்பிராயத்திற்கு நமது மாகாணத்திலே ஆதரவு இருக்கிறது என்பது உண்மை. "தனக்குப் போகத்தான் தானம்" என்று சொல்வது போல நமக்கு இருப்பதை ஏன் விட்டு விட வேண்டும் என்ற அபிப்பிராயம் நிலவுவது நியாயம். அதே நேரத்தில் கேரளத்திலிருந்து தண்ணீர் வேண்டுமென்று கூறும்போது மாத்திரம் உபரியாக இருக்கக்கூடிய தண்ணீரை ஏன் தரக்கூடாது என்று இந்தச் சபையிலே கூறுகிறோம். திருநெல்வேலி, ராமநாதபுரம் வட்டாரத்தை......

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஸோன் என்று 4 ராஜ்யங்கள் இருப்பதற்குப் பதில் தனித்தனியாக இருப்பதால், நம்மிடம் இருக்கிற மிகுதியை கேரளத்திற்குக் கொடுக்கக் கூடாது என்பது அல்ல.

SRI K. SATTANATHA KARAYALAR: தனியாக இருக்க வேண்டுமென்று கூறும்போது, நான் மந்திரி அவர்களுடைய அபிப்பிராயத்தைப்பற்றிச் சொல்லவில்லை. பொதுவிலே இங்கிருக்கக்கூடிய உபரியை அனுப்பவேண்டும் என்று சொல்லுவதற்குப் பதிலாக இங்கிருந்து ஒன்றுமே போகக்கூடாது என்ற குரல் எழும்புகிறது. அதைத்தான் குறிப்பிடுகிறேன். ஸோன் என்று குறிப்பிடும்போது இங்கிருக்கக்கூடியதை நாமாகவே நேரடியாக ப்ரொக்யூர் செய்து ஸ்டேட் மூலமாக கொடுக்க வேண்டும் என்று மந்திரி அவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள் என்று தோன்றுகிறது. அதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே முறையிலே நமக்கும் இதர மாகாணங்களிலேயிருந்து கிடைக்கவேண்டியது, கிடைக்கவேண்டும். 12 noon. ஸதர்ன் ஸோன் என்று சொல்லியிருக்கக்கூடிய முறையிலே, முக்கியமாக இந்தத் துறையிலே ஒத்துழைப்பு குறைவாக இருப்பது ஆந்திராவில்தான். மிக உபரியாக இருக்கும் மாகாணம் ஆந்திர மாகாணம். ஆனால், ஆந்திர மாகாணத்திலேயிருந்து கிடைக்கக்கூடிய உபரி அரிசி, சென்னைக்கு வந்து கொண்டிருந்த நெல்லூர் அரிசி கூட சமீப காலங்களில் வருவது இல்லை என்று இந்தச் சபையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஏன் அந்த மாகாணத்தில் உபரியாக உள்ளது இங்கு வரவில்லை என்று பார்த்தால், முக்கியமான காரணம், அங்கிருக்கும் வியாபாரிகள் அதைப் பதுக்கி வைத்துக் கொண்டு, அதற்கு அதிகமான விலை கிடைக்கவேண்டும் என்ற ஒரே அவாவோடு இருக்கிறார்கள். நமது மாகாணத்தைப் பொறுத்த மட்டில், நமது மாகாணத்திலே இங்கு எந்த அளவு விலைவாசிக் கட்டுப்பாடு கொண்டு வந்திருக்கிறோமோ இதுபோல், அங்கு அவர்கள் கொண்டு வருவதற்குள்ள முயற்சி அங்கே சர்க்காரோ அங்குள்ள நிர்வாகமோ எடுப்பதாக இல்லை.

அதுபோல், கேரளத்தில் இந்த குறை இருக்கிறது. விலைவாசிக்கட்டுப்பாட்டை அவர்கள் அமுல் செய்யவில்லை என்ற குறைபாடு உண்டு. கேரளத்தைப் பொறுத்தமட்டில் அது மற்றொரு காரணத்திற்காக நேர் எதிரான காரணத்திற்காக என்று சொல்லலாம். கேரளாவிலே விலைவாசிக் கட்டுப்பாடு கொண்டு வந்தால், குறிப்பிட்ட விலைக்குத்தான் வாங்கவேண்டும் என்ற முறையில் கொண்டுவந்தால் என்ன ஆகும்? சென்னையில் அழுகும் பொருள்கள் கிடைப்பது இப்பொழுது அரிதாக இருக்கிறது. அதற்கு ஒரு விலைவாசிக் கட்டுப்பாடு என்று வைத்தால், குறிப்பாக உருளைக் கிழங்கின் விலை வீசை எட்டணா இருந்தால் அந்த எட்டணாவுக்கு மார்க்கெட்டில் கிடைக்காது. பத்தணா கொடுத்து வாங்குகிறவர்கள், வாங்குவார்கள். அதே போல், கேரளத்தைப் பொறுத்த வரையில், பெயரளவில் கட்டுப்பாடு இருந்தாலும் வாங்குபவர்களுடைய தேவை அதிகமாக இருப்பதால், அவர்களுக்குக

[Sri K. Sattanatha Karayalar] [28th March 1959

கிடைக்காததால் அவர்கள் அதிக விலை கொடுத்து வாங்கத் தயாராயிருக்கிறார்கள். அதுபோல் அல்ல ஆந்திரத்தைப் பொறுத்தவரையில். ஆந்திராவில் இருக்கும் ஸ்டாக்கைக் கொடுக்காமல் வைத்துக்கொண்டு அதிக விலை கிடைக்கும் என்ற ஒரே அவாவோடு உபரியாக இருக்கும் ஸ்டாக்கை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை ப்ரொக்யூர் செய்வதற்கு, வாங்குவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் அந்த சர்க்கார் எடுத்ததாகத் தெரியவில்லை. நாஷனல் டெவலப்மென்ட் கவுன்சிலில் என்ன அபிப்பிராயங்கள் வந்தன, எந்த அளவு நமது சர்க்கார் வலியுறுத்தியது என்று தெரிய அவாவுறுகிறேன். மத்திய அரசாங்கம் இந்த விஷயத்தில் கடுமையான நடவடிக்கை எடுத்தால் மாத்திரம்தான் இதைச் சமாளிக்க முடியும். அது இல்லாமல் நாம் தனித்தனியே மாகாணமாக இயங்கக்கூடிய நிலையில் ஒவ்வொருவரும் அவர்களுக்குத் தகுந்த முறையில் திட்டம் இடவேண்டுமானால் தனியாக நம்மைப் பிரித்துவிட்டுவிடவேண்டும். நமது ஸோனைப் பொறுத்தமட்டில், நமது மாகாணத்தைப் பொறுத்தமட்டில் நாம் தனியாக என்டயர் ப்ரொக்யூர்மெண்ட் செய்வதோ அல்லது உபரியை எடுக்கவோ நாம் செய்யலாம். கேரளாவுக்கு உபரியாகத் தேவைப்படுவதற்கு மத்திய சர்க்கார் பொறுப்பேற்றுக்கொண்டு, அவர்களுக்குக் கொடுக்கவேண்டிய அந்தப் பொறுப்பை அவர்கள் முழுவதும் ஏற்றுக்கொள்ளவேண்டும். இந்த அடிப்படையிலே ஒன்று அமையவேண்டும்.

இன்டர்னல் ஆக ப்ரொக்யூர்மெண்ட் செய்கின்ற முறை எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு சில வார்த்தைகள் சொல்ல அவாவுறுகிறேன். மார்க்கட்டபிள் சர்ப்ளஸ் ஆக இருக்கும் பத்து லட்சம் டன்னில் இரண்டு லட்சம் டன் இப்பொழுது எடுப்பதாக திட்டம். ஆனால், கிராமாந்திரங்களில் இருக்கும் நிலைமை, தேவைக்குத் தகுந்த அளவு குறைந்த விலைக்கு இன்று உணவு தானியங்கள் கிடைக்கவில்லை என்ற குரல் இருக்கிறது. ஆனால் இங்கு சிலர் விவசாயிகளைப்பற்றி சொல்வதாகச் சொல்கிறார்கள். அதாவது இதற்கும் குறைந்த விலைவாசிக்கு விற்க முடியாது. பல்வேறு நஷ்டங்கள் ஏற்படுகின்றன என்று சொல்கிறார்கள். அதன் உண்மை என்ன என்பதைப்பற்றி நான் கூறவில்லை. ஆனால் உற்பத்தியாளர்களைப் பொறுத்த மட்டில், அவர்களுக்கு ஒரு உறுதி இருக்கவேண்டும். விளைச்சல் இல்லை என்றால் நஷ்டம் ஏற்படக்கூடாது. ஸ்டேட் இன்ஷ்யூரன்ஸ் போன்ற க்ராப் இன்ஷ்யூரன்ஸ் அவர்களுக்கு இருப்பது மிக மிக அவசியம். உரம் முதலான பொருள்கள் மலிவான நியாயமான விலைக்கு, குறைந்த விலைக்கு, கட்டுப்பாடான விலைக்கு அவர்களுக்குக் கிடைக்க வேண்டும், இது ரொம்பவும் அவசியம். சர்க்கார் ஸ்டேட் ட்ரேடிங் மூலமாகச் செய்கின்றார்களே அதே போல அவர்களுக்கு இவைகள் கிடைப்பதற்கு நடைமுறையிலே கொண்டுவரவேண்டும்.

எடுக்கக்கூடிய நெல், இன்றிருக்கும் இரண்டுலட்சம் டன் போதாது என்பது என்னுடைய அபிப்பிராயம். இன்றைக்கு இருக்கும் டிமாண்டு, மலிவு தானியக் கடைகளின் தேவையைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு கிராமத்திலும் தேவைப்படுகிறது. கைத்தறி நெசவாளிகள் பெரிதாக வாழக்கூடிய இடங்களிலும் தொழிலாளர்கள் பெரும் எண்ணிக்கையில் வசிக்கக்கூடிய இடங்களில் எல்லாம் மலிவு தானியக்கடைகள் வைக்கப்படவேண்டும். அது மட்டுமல்ல, ஒவ்வொரு ஜில்லா ஹெட்க்வார்ட்டர்ஸில் இருக்கும் என்.ஜி.ஓக்களுக்கும் கிடைக்கும் முறையிலே, எண்ணெய், பருப்பு முதலிய பொருள்கள் எல்லாம் மலிவாகக் கொடுக்கவேண்டியதற்கு மார்க்கங்கள் செய்யவேண்டும். எடுக்கக்கூடிய பொருள்கள் நல்ல முறையில் பக்குவப்படுத்தி வைத்திருக்கவேண்டும். இதில் தான் மிகப் பெரிய குறை ஏற்படும். எடுத்த பொருளில் பெருவாரியாக நஷ்டம் ஏற்படக்கூடும். எலியினால் ஏற்படக்கூடிய சேதத்தைத் தவிர்ப்பதற்கு கிடங்குகள் (வேர் ஹவுஸ்) நல்ல முறையிலே பல இடங்களிலும் இருக்க வேண்டும். ஒரே இடத்தில் ஸ்டோர்ஸ் வைத்துக்கொண்டு அங்கிருந்து அனுப்பக்கூடிய முறை இருக்கக் கூடாது. ஒவ்வொரு ஜில்லா ஹெட்க்வார்ட்டர்ஸிலும் இருக்க வேண்டும். பல இடங்களில் மிக தேவைப்படும் இடத்தில் ஸ்டோர்ஸ் அமைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த முறையிலே வில்லேஜ் கோவாபரேடிவ்

28th March 1959] [Sri K. Sattanatha Karayalar]

மூலமாக நியாய தானியக் கடைகள் திறந்து எந்த அளவு தேவைப்படுமோ அந்த அளவு விரிவான முறையில் கொடுக்க வேண்டும். ப்ரொக்யூர் மெண்ட் முறையில் நெல் எடுப்பதில் சிக்கல் இருந்தால் விவசாய வருமான வரிச்சட்டம் கொண்டுவந்து நாம்—யாரெல்லாம் விவசாய வருமான வரி கட்டுகிறார்களோ அவர்களிடமிருந்தெல்லாம் உபரியாக உள்ள நெல்லை சர்க்கார் எடுக்கவேண்டும். ஒன்று சர்க்கார் நேரடியாக எடுக்கலாம். அல்லது லைசென்ஸ் பெற்ற வியாபாரிகள் மூலமாக எடுக்கலாம். ஸ்டேட் ட்ரேடிங் கார்ப்பரேஷன் முறையில் அவர்கள் கையில் ஒப்படைக்கலாம். இந்த முறையில் அமைந்தால் சீராக அமையும் என்று கூறிக்கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

SRI P. G. KARUTHIRUMAN : கனம் சபாநாயகர் அவர்களே, சர்க்கார் கொண்டுவந்திருக்கும் இந்த மான்யத்தை நான் ஆதரித்துச் சில வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். உணவு தானியத்தை ஸ்டேட் ட்ரேடிங் முறையிலே சர்க்காரே எடுத்து நடத்தும்படியான கொள்கையைப்பற்றி யெல்லாம் குறிப்பிடப்படுகிறது. பல சந்தர்ப்பங்களில் இதே சட்ட சபையில் விவசாயிகளின் நிலைமையைப்பற்றி பல காரணங்களோடு நாங்கள் வற்புறுத்திச் சொல்லியாய்விட்டது. இப்பொழுது பார்த்தால்—எந்த முறையிலே எடுக்கவேண்டுமென்றால், சர்க்கார் எடுத்து நடத்துவது என்பது ஒன்று. ஆனால், சர்க்கார் எடுத்து நடத்தாத சமயத்தில், வியாபாரிகளிடத்தில் சிக்கிக்கொண்டிருந்தது. ஆகையால், விவசாயிகளாக இருக்கும் நாங்கள் திரிசங்கு சொர்க்கம் மாதிரி வியாபாரிகளுக்கும் சர்க்காருக்கும் மத்தியில் 'புட்பால்' மாதிரி சிக்கிக்கொண்டு, கால் பந்து ஆடினால் எந்த முறையில் இருக்குமோ அப்படி நாங்கள் சிக்கிக்கொண்டு விழிக்கிறோம் என்று பணிவன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால், நான் ஒரு ஆலோசனை சொல்கிறேன். அதாவது, விவசாயிகளுடைய நலனுக்காக விவசாயிகளே சேர்ந்து கூட்டுறவாக வியாபாரத்தைச் செய்யவேண்டும். அந்த வியாபாரத்தை அவர்கள் கையிலேயே வைத்துக்கொள்ளவேண்டும். விவசாயிகள் கையிலே பொறுப்பு இருந்தால்தான் இது சிறந்த ஒரு வழியாக அமையமுடியுமே தவிர, பாக்கி எந்த வழியிலும் அமைய முடியாத நிலைமையில் இருக்கிறது. வியாபாரிகள், அவர்கள் லாபத்தைப் பெருக்குவதற்குப் பார்க்கிறார்கள். அரசியல் கட்சிகளோ 'விலை ஏறிவிட்டது ; உடனே விலை குறையவேண்டும்' என்று ஒரு பிரசாரத்திற்காக அவர்கள் பேசிக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் சிலர், பூமியைப்பற்றியோ, விவசாயம் செய்வதைப்பற்றியோ தெரியாதவர்கள், விவசாயத்தின் வரவு செலவுக் கணக்குத் தெரியாதவர்கள், 'பணக்காரர்களிடமிருந்து உடனே நெல்லை எடுத்துக் கொள்ளவேண்டும்' என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு நான் ஒன்று சொல்கிறேன்.

ஒரு கதை சொல்லி விளக்கலாமென்று நினைக்கிறேன். ஒரு ராஜா இஷ்டம் போல் எடுத்து தானம் செய்துகொண்டிருந்தானாம். பக்கத்திலிருந்த சகோதரி பார்த்து, வந்தவர்களுக்கெல்லாம் தானம் செய்து கொண்டிருக்கிறாரே என்று நினைத்து, அந்த ராஜாவினிடத்திலே சகோதரி, "ஒரு நாளைக்கு இந்த அரச பதவியை விட்டுவிட்டு வெளியே போய், மாறுவேடம் போட்டுக் கொண்டு, கூலி வேலை செய்துகொண்டு வந்து அதற்குப் பின்னால் இந்த ராஜ்ய பாரத்தை நடத்தினால் நன்றாக இருக்கும்" என்று சொன்னாள். அதன்படியே அந்த அரசன் மாறுவேடம் பூண்டுகொண்டு, வேலைக்குச் செல்லும்போது, எந்த வேலையும் கிடைக்கவில்லை. கடைசியில், கொல்லர் பட்டரையில் இரும்பு அடிக்கும்படியான வேலை கிடைத்தது. காலையிலிருந்து மாலை வரையில் சம்மட்டி கொண்டு காய்ச்சிய இரும்பை அடித்து வேலை செய்து, எட்டணா சம்பாதித்துக் கொண்டு வந்தான். அடுத்த நாள் ராஜசபையில் உட்கார்ந்தான். அன்றும் தானம் பெற்றுக்கொண்டுபோக வந்தார்கள். அவர்களுக்குத் தானம் கொடுப்பதற்கு அரசனுக்கு மனம் வரவில்லை. அப்பொழுதுதான் அவன் உணர்ந்தான். தானாகக் கஷ்டப் பட்டு, உடலை வருத்தியிருந்த காரணத்தால் தானம் கொடுப்பது குறைந்தது, உடனே புத்தி வந்தது என்று பழைய காலத்தில் கதை சொல்வார்கள். அதுமாதிரிதான் நண்பர்கள் எடுத்துச் சொன்னார்கள். பணக்காரர்களிடத்

தில் இருக்கிறதெல்லாவற்றையும் எடுத்துவிட வேண்டும், ரெக்விஸிஷன் செய்ய வேண்டும் என்று கதையில் வருகிற ராஜா மாதிரி தானம் தருமம் செய்யவேண்டும் என்று நண்பர்கள் சுலபமாகச் சொல்லிவிடலாம். சட்ட சபையில் இருந்து சுலபமாகப் பேசிவிடலாம். பணக்காரர்களிடம் நாம் எதை விட்டு வைத்திருக்கிறோம்? 60 : 40 சட்டம் கொண்டுவந்தோம். 60 சத விகிதம் குடியானவர்களுக்கும், 40 சத விகிதம் தான் பூமி இருக்கிறவர்களுக்கும் என்று சட்டம் செய்திருக்கிறோம். கிராமத்திலே போய் வாழ்க்கை நடத்திப் பார்த்தவர்களுக்குத் தெரியும். நாற்பது சதவிகிதம் பூமி வைத்திருக்கிறவர்களுக்கு என்று சொல்லியிருந்தாலும், அந்த 40 சத விகிதமும் அப்படியே அவர்களுக்கு வந்துவிடுவதில்லை. எப்படியென்றால் வரியை யெல்லாம் கட்டவேண்டியிருக்கிறது; அதுவுமல்லாமல், அவர்களுடைய அந்தஸ்தையும் காப்பாற்றிக் கொள்ளவேண்டியிருக்கிறது; எத்தனையோ வேலை ஆட்களை வைத்து, ஆடு மாடுகளை வைத்து வளர்த்துப் பார்த்தால் அதிலேயே 25 சத விகிதம் போய்விடும். இதெல்லாம் போக பத்து, பதினைந்து சதவிகிதம் கூட மிச்சம் இருக்காது. முன்னோர்கள் சம்பாதித்து வைத்ததில், கடன் இல்லாமல் இருக்குமானால், அவர்கள் விவசாயம் செய்து கொஞ்சம் மரியாதையாக இருக்கலாம். ஆனால், கடன் பட்டிருந்தால், 'கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்' என்ற நிலையில் அனேகர் வந்திருக்கிறார்கள். ஆகையால், விவசாயிகள் மானத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வெளியிலே வந்து தங்களுடைய குறைகளைச் சொல்லலாம என்றால், அதற்கென்று ஒரு சங்கம் அமைக்க முடியாத சூழ்நிலையில் இருக்கிறார்கள். காலையிலிருந்து இரவு வரையில் வேலை செய்யும் விவசாயிகள் எல்லோரும் சேர்ந்து கூக்குரல் இட்டு, சர்க்காருடைய காதுக்கு கேட்கவைக்கக் கூடிய நிலைமையில் அவர்கள் இல்லை. அப்படி தப்பித்தவறி யாராவது வந்திருக்கிறார்களா என்று பார்த்தால், உண்மையான விவசாயிகள் அதிகமாக வந்திருக்க முடியாது. என்னைப்போல் சில பேர் வந்திருக்கலாம். வந்தவுடன் 'பணக்காரன்' என்று சாதித்து விடுகிறார்கள உண்மையான விவசாயிகள் அதிகம் பேர் வந்திருக்க முடியாது. நண்பர்களைக் கேட்டுக்கொள்கிறேன்—'பதுக்கி வைத்து விட்டார்கள், பணக்காரர்களிடத்தில் போய் எடுத்துக்கொள்ளவேண்டும்' என்று நினைத்துப் பேசுகிறவர்களைப் பார்த்தால், அவர்களுக்கு பூமி இருக்குமா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. பூமி இல்லாவிட்டாலுங்கூட விவசாயமாவது செய்திருக்கிறார்களா என்றால், நிச்சயமாகச் செய்திருக்க முடியாது என்று நான் சொல்ல முடியும். கணக்குப் போட்டு. . . . . .

Sri S. M. ANNAMALAI: கனம் உறுப்பினர் அவர்கள், மற்ற சட்ட மன்ற உறுப்பினர்கள் விவசாயம் செய்திருப்பார்களோ அல்லவோ, என்று பேசுகின்றார். ஆனால், அவர்கள் சொல்கிற விவசாயி வேறு, நாங்கள் சொல்கிற விவசாயி வேறு. அவர் வரப்பின் மீது சுற்றி வருகின்ற விவசாயியைப் பற்றிச் சொல்கிறார். நாங்கள் உண்மையிலேயே நிலத்தில் இறங்கி உழுகின்ற விவசாயிகளைச் சொல்கிறோம்.

Mr. SPEAKER: இது என்ன பர்ஸனல் எக்ஸ்ப்ளனேஷனா?

Sri P. G. KARUTHIRUMAN: நண்பர் அவர்கள் 'நான் உண்மையாக விவசாயம் பண்ணுகிறவனா' என்ற கருத்தில் பேசுகிறார். நான் இன்று சவால் விடுகிறேன். நிலத்தில் இறங்கி நான் செய்கிற வேலை அளவுக்கு அவர் செய்தால். . . .

Mr. SPEAKER: சட்டசபையிலே ஒன்றும் சவால் விடவேண்டாம். தயவு செய்து பிரசங்கம் பண்ணுவதோடு இருக்கட்டும் (சிரிப்பு).

The Hon. Sri M. BHAKTAVATSALAM: ஹாஸ்டல் தினத்திலே சவால் விட்டுப் பார்க்கலாம். (சிரிப்பு)

28th March 1959]

Sri P. G. KARUTHIRUMAN : வியாபாரத்தை உண்மையிலேயே வியாபாரிகளுக்கு விடாமல் விவசாயிகளுக்கே விட்டால் நன்மையாக இருக்கும். மார்க்கெட்டிங் சொஸைட்டிகளை வைத்து வியாபாரத்தை நடத்துவது போல் விவசாயிகளைக் கொண்டு ஒரு கூட்டுறவு சொஸைட்டியை அமைத்து அவர்கள் மூலமாக தானியங்களை விற்பனைச் செய்யச் சொல்லவேண்டும். அந்த முறையில் விவசாயிகளுக்குக் கூட்டுறவு மனப்பான்மை வரவேண்டும். அப்படிச் செய்வது தான் சிறந்த முறை என்பது என்னுடைய அபிப்பிராயம். அதற்கு வேண்டிய திட்டத்தை வகுக்க வேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளுகிறேன். அதற்கு வேண்டிய உதவியை அரசாங்கம் அவர்களுக்குச் செய்து கொடுக்கவேண்டும்.

உணவு உற்பத்தியோடு நின்று விடாமல் அதைவிட சிறந்த உற்பத்தியாகிய பால் உற்பத்திக்கு சர்க்கார் நடவடிக்கை எடுத்துக்கொண்டிருப்பதைக் கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். பால் உற்பத்தியைச் செய்வது உணவு உற்பத்தி செய்வதை விட மிகச் சிறந்தது. அதற்கு பால் பண்ணையை வைத்து உற்பத்தி செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருப்பது பாராட்டத் தக்கது தான். குழந்தைகளுக்கு பால் ரொம்பவும் அவசியம் வேண்டியதாக இருக்கிறது. சத்துள்ள உணவுப் பொருள் குழந்தைகளுக்கு வேண்டியதாக இருக்கிறது. தானிய உற்பத்தியுடன் பால் உற்பத்தியும் அவசியமாக இருக்கிறது. எல்லாவற்றிற்கும் பால் வேண்டியதாக இருக்கிறது. பல துறைகளிலும் பால் உபயோகப்படுத்த வேண்டியதாக இருக்கிறது. அதற்காக சர்க்கார் இப்பொழுது பால் பண்ணையை வைத்து நடத்துவது ரொம்பவும் வரவேற்கத்தக்கது தான். அப்படி நடத்தி அதற்கு ஊக்கம், ஆக்கம், அளிப்பது நல்லது தான். இந்த திட்டத்தை நான் முழு மனதுடன் வரவேற்கிறேன். பழங்காலத்தில் கூட இதைத்தான் முக்கியமாக நடத்தி வந்திருக்கிறார்கள் என்பது தெரிய வரும். அதாவது திருப்பாவையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் அந்தக் காலத்தில் அதிகப்படியாக பசுக்களை வளர்த்து வந்ததாகவும் அதிகப்படியான பால் உற்பத்தி செய்து வந்ததாகவும் சொல்லப்படுகிறது. பசுக்களைப்பற்றி அங்கே சொல்லும் போது

" ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடுகயல்உகளப்
பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண்படுப்ப
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக்குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்."

என்று பாடியிருக்கிறார். உயர்ந்த சத்துள்ள பால் உற்பத்தி செய்ய வேண்டியது அவசியம். அப்படிப்பட்ட சத்துள்ள பால், பெருகுவதற்கு என்று சர்க்கார் திட்டம் போட்டிருப்பது ரொம்பவும் வரவேற்கக் கூடியதுதான்.

இப்பொழுது இருக்கும் நிலைமையில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் தானியங்களுக்கு விலை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். அப்படி நிர்ணயம் செய்ய வேண்டியதுதான். அவர்களுடைய செலவுக்குத் தக்கபடி அதை நிர்ணயம் செய்தால் ரொம்பவும் நன்றாக இருக்கும். விவசாய இலாகாவும் சரி கனம் அமைச்சர் அவர்களும் சரி அவர்களுடைய மனச்சாட்சியைத் தொட்டுப் பார்த்துக்கொண்டு சொல்லட்டும் இப்பொழுது கட்டுப்பாடு செய்திருப்பது அவர்களுக்கு கட்டுபடியாகுமா என்பதை கொஞ்சம் சிந்தித்துப் பார்க்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு கட்டுப்படியாகாது என்ற முடிவுக்குத்தான் அவர்கள் வருவார்கள். இது அவர்களுக்கே நன்றாகத் தெரியும். ஆகவே அவர்கள் திருப்தி அடையும் அளவில் கட்டுப்பாடு செய்ய முன் வர வேண்டும். கட்டுப்பாட்டை நான் வரவேற்றாலும் அவர்களுக்குக் கட்டுப்படியாகக் கூடிய அளவில் கட்டுப்பாடு செய்ய வேண்டும். உற்பத்தி செய்யக்கூடிய குடியானவர்களுக்குக் கிடைக்கக்கூடியவைகளும் கட்டுப்பாடு செய்யப்பட்ட விலையில் கிடைக்கும்படியாக

நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும். விவசாயிகள் கொள்முதல் செய்து கூட்டுறவு முறையில் அவர்கள் வியாபாரம் நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும். அந்த மனப்பான்மையை அவர்களுக்கு ஏற்படுத்த வேண்டும். மார்க்கெட்டிங் சொசைடி வைத்து வியாபாரம் செய்வது போன்று அவர்களே ஒரு கூட்டுறவு சொஸைட்டியை அமைத்து நடத்த வேண்டும். அதிலிருந்து வரக்கூடிய லாபத்தை அவர்களே எடுத்துக்கொள்ள வேண்டும். லாபத்தில் ஒவ்வொரு விவசாயிக்கும் பங்கு இருக்க வேண்டும். அந்த முறையில் அவர்களுக்கு கடன் உதவி செய்து அவர்களைக்கொண்டே ஒரு கூட்டுறவு சொசைட்டியை அமைத்துக்கொள்ள சர்க்கார் உதவமுன்வர வேண்டும். அதற்கு வேண்டிய ஆலோசனைகளை அதிகாரிகள் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்ற முறையில் என்னுடைய ஆலோசனையைத் தெரிவித்துக்கொண்டு என்னுடைய உரையை இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

SRI V. K. KOTHANDARAMAN : கனம் சபா நாயகர் அவர்களே கனம் அங்கத்தினர் பேசும்போது பழைய சரித்திரத்தையும் புராணத்தையும் எடுத்துச் சொன்னார். அவர் சரித்திரத்தையும் புராணத்தையும் ஆராய்ச்சி செய்யக்கூடியவர்தான். அவர் ஒரு மகாராஜாவைப்பற்றி குறிப்பிட்டு அவர் எட்டணாவுக்கு கூலி வேலை செய்தார் என்று சொன்னார். அந்த மகாராஜா யார் என்று சொல்லுவாரா ? அல்லது அது ஒரு கட்டுக் கதையா, அப்படி அது ஒரு கட்டுக்கதையாக இருந்தால் அவர்கள் சொன்னது எல்லாம் கட்டுக் கதைதானா ?

MR. SPEAKER : அந்த மகாராஜாவின் பெயரைச் சொல்ல முடியாது.

SRI P. G. KARUTHIRUMAN : கோதண்டம் என்று ஒரு மகாராஜா இருந்தார். அதுதான் அவருடைய பெயர்.

* **SRI V. K. RAMASWAMY MUDALIYAR** : Mr. Speaker, Sir, I support the Cut Motion that is before the House. Sir, we were having control when there was scarcity in the State and we are now also proposing to have controls when there is surplus. I am afraid something radically is wrong somewhere so far as the policy of the Government is concerned.

When he made a speech at the beginning in the morning, the Hon. Minister was saying something about the policy, that is, a reasonable price between the producer and the consumer will have to be fixed and it should be acceptable to both the parties. This has been hanging fire for a very long time. As soon as this scheme was started, the Government must have come forward immediately and fixed up the so-called reasonable price acceptable to both. It is being delayed till today. What exactly is the reasonable price for the producer and also for the consumer? Will the Government come forward to work out in detail the production cost and then fix a very reasonable price? Of course, I do not mean to say that it should be fixed at a very extraordinary rate; but it should be no doubt reasonable. So many hon. Members of this House have also been talking in this strain (i.e.), that it should be reasonable and every one of us feel that it should be reasonable on both sides. When exactly the Government would fix up a reasonable price must be made known to the public and it should be done as early as possible.

28th March 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

The Hon. Minister was also telling that there is going to be a strict watch over this State Trading and that every State must be independent. That means, they must have an independent zone and so far as imports are concerned, Central aid must be sought and so on. I quite appreciate the statement of the Hon. Minister. But now what is happening? I happened to go through the Hindu a couple of days back and I found from a statement or news published there that the Andhras are not sending paddy to us and they are not sticking up to their agreements and conditions therein; eventhough they are in the Zone, their paddy is being sent outside in large quantities. Sir, I want to know whether any protest has been made by our Government and whether steps have been taken to prevent paddy or rice going to Kerala inasmuch as Andhra State has not honoured the pledge.

Sir, I want to know the real policy of the Government and a categorical statement should be made as early as possible before the position gets worse. Therefore, something must be done at the Central Government level and we must immediately get out of the Zone if the Government thinks that we are self-sufficient in food and we must make our own arrangements to see that supply is equally done throughout the State. I am very sorry to state that everything is done at the National Development Council level and they do not understand our difficulties, that is about the maldistribution that is going on in our State. So, before the next meeting of the Council, I want the Hon. Minister to take up this question in all seriousness and see that something is done immediately. If the Government takes up State Trading, who is to criticise their policy if something goes wrong? So, they must have very close and strict watch over this State Trading and see that no loophole is created and distributed equally and fair price is maintained at every level. The Minister has been telling that there has been hoarding and so on. I want to know how many cases of hoarding have been detected. If the genuine cultivators have stored the grain and kept it for sale either to the Government or to a private party at the price fixed by the Government, do the Government consider this as hoarding? The ryots are in very bad need of money, especially when the kist collection is going on now. So many ryots are very anxious to find a market for their paddy. My submission is that the price should be fixed immediately and the Government should see that they get as much paddy as possible to keep a buffer stock. The Minister was telling this morning that consumers' co-operative societies would be started everywhere and so on, in each and every district. We are having on an average about 2,000 villages in each district. Do the Government propose to have these societies in each and every village, or do they propose to store paddy only at select places and distribute the grain through those places? If this is so, will it work successfully? There is no point in entrusting this work to the wholesale co-operative stores at the district level. The distribution is not done equally and fairly so as to reach the remotest villages. Of course, the State Food Committee, which is going to

[Sri V. K. Ramaswamy Mudaliyar] [28th March 1959

meet very shortly is going to consider the price, etc. I am sure the Government will very soon finalize the cost price, taking into consideration the State Seed Farms and other factors, and come to a very definite and early understanding about the fixation of the price. I have already said, and even now I wish to reiterate the fact that it would not be too late even now if a levy of two or three bags per acre is made on the owners of lands owning above 3 or 4 acres. This will go a long way to speed up procurement. This suggestion also should be considered in all earnestness so that the heavy establishment and administrative machinery can be avoided. I am very anxious to know from the Hon. Minister how the cost of establishment is going to be calculated, and whether the establishment charges also will be collected from the consumers. If not, the State alone will have to bear the establishment charges (i.e.), the charges of the establishment maintained for procurement. If the State is to bear the establishment charges, I want to know how much will be the rise in cost. Is there any need to continue this establishment without imposing any levy? All these factors should be taken into consideration. Of course, we have lost heavily during ration days to the tune of so many crores of rupees. Now even though this work is to be entrusted to the wholesale stores, we have given a guarantee to the State Bank, and if something goes wrong with the wholesale stores, we have to reimburse the loss. So the Government must be very careful and have a very rigid watch over the affairs of the Stores. So my submission is that if the Government are very anxious to have State control, they must have no doubt the right to licence and also inspect the places as and when they want to. They must also have a small buffer stock of about one-tenth of the requirements, say, not less than 2 lakhs tons to be released during the lean months and then replenished in the second harvest. But the question of imposing a levy should be considered in all earnestness.

Next with regard to distribution of iron, I am very sorry to say that not a bit of iron is available for the smallest cultivators They are put to a lot of hardship, and they have to pay very prohibitive prices if they want to get iron (i.e.), even for small ploughshares. That is the state of affairs today. The Government must see that large quantities of iron are got from the Central Government and distributed through Demonstrators with a view to mitigating the hardships.

With regard to the distribution of sulphate of ammonia, I had recently visited the villages in the interior. In my tours, some of the villagers complained to me that each bag costs Rs. 70. Even at this price, the manure is not available from certain quarters. This is the state of affairs. Everywhere we do not find this manure with the result some of the ryots, who are anxious to step up production, have to purchase it only in blackmarket. That is the position, Sir. This is how our wholesale trade is functioning in our State.

28th March 1959] [Sri V. K. Ramaswamy Mudaliyar]

In regard to the milk colony, Sir, it is no doubt very good that the New Zealand Government have come to our aid, and they are giving us a very substantial amount. I put forth a suggestion that the pasteurisation plant should be located in Teynampet. The Minister was telling us that that suggestion was considered, and it was going to be located in Madhavaram. My request is that they should see that it comes up very quickly and also see that good milk is supplied. 12-30 p.m.

With regard to the colonization scheme, of course an ambitious scheme has been put up. I am sure it will work successfully, and the sooner they take it up, the better it will be.

Lastly my submission is that the Government should as early as possible fix the prices, and there is no point in their saying that a reasonable price will be fixed very soon. Unless price is fixed very soon, nothing will happen. The Minister was telling something about merchants. He said that they were indulging in adulteration. I want to know what the Police Department are doing? Such merchants should be booked and as far as possible punished. If Government find that everything is not going on well with the merchants, they should see that some deterrent punishment is awarded to those who are guilty of adulteration of foodgrains.

I am sure the Government will not commit any blunder in State-trading and they will see that something is done to help the people. I agree with the Minister when he says that we must get out of the zone, and that our State should stand independently without depending on any other State. We must see that food is supplied equitably to all villages in the interior. This is all my submision, Sir.

* THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபா நாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் கலந்து கொண்ட கனம் அங்கத்தினர்கள் விலை வாசி நிர்ணயத்தைப் பற்றியும், விலைவாசி கண்ட்ரோலைப் பற்றியும், இப்பொழுது கட்டுப்பாடு எந்த முறையிலே நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதைப் பற்றியும் குறிப்பிட்டார்கள். ஆனால் இதிலே கலந்து கொண்ட எந்த அங்கத்தினரும் " இப்பொழுது அரசாங்கம் ஒன்றும் செய்ய வேண்டாம். தானாகவே சரியாகப் போய்விடும் " என்று கூறவில்லை. கூற யாருக்கும் தோன்றாது. ஆனால் இந்த வெட்டுப் பிரேரேபணையைப் பிரேரேபித்த கனம் அங்கத்தினர் அவர்கள் " இந்த விலைக்கட்டுப்பாட்டை முன்பே கொண்டு வந்திருக்கலாம் ; முன்பே கொண்டு வந்து அரிசி வாங்க முற்பட்டிருக்கலாம் ; அதில் அரசாங்கம் தவறிவிட்டது " என்று குற்றம் சாட்டுவதாகச் சொன்னார்கள். ஆனால் வேறு சில அங்கத்தினர்கள் சொன்னது போல் முன்பே கட்டுப்பாடெல்லாம் ரத்து செய்யப்பட்டது. அதை மக்கள் எல்லோரும் வரவேற்றார்கள். இந்த மன்றமும் வரவேற்றது. கூடியவரை கட்டுப்பாடு இல்லாமல் நிலைமையை அப்போதைக்கப்போது சமாளித்துக்கொள்ளலாம் என்றால் கட்டுப்பாடு விதிப்பதைத் தவிர்க்க வேண்டுமென்பதுதான் அரசாங்கத்தின் அபிப்பிராயம். தவிர்க்க முடியாத நிலைமை ஏற்பட்டாலொழிய கட்டுப்பாடு செய்வது கூடாது என்பது அரசாங்கத்தின் கொள்கை. ஆகவே அவசரப்பட்டு விலைக்கட்டுப்பாடு, விலை நிர்ணயம் இவைகளைக் கொண்டுவர இந்த அரசாங்கம் விரும்பவில்லை.

கடைசியாகப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் " ஸ்டேட் டிரேடிங் எடுத்துக்கொள்ளுவதென்றால் எத்தனையோ கஷ்டங்கள் இருக்கின்றன. சரியாகச் சமாளிக்க வேண்டும். பாதகமும் ஏற்படலாம் "
12-30 p.m. என்று எச்சரிக்கை விடுத்தார்கள். இதையெல்லாம் அரசாங்கம் கருதாமல் இல்லை. இதிலே இருக்கிற சங்கடங்களை அரசாங்கம் உணர்ந்திருக்கிறது.

(Sri V. K. Kothandaraman in the Chair.)

ஆகையால் தவிர்க்கக் கூடும் என்றால் இந்த மாதிரி இதில் தலையிடாமல் இப்போது இருக்கிறபடியே விட்டுவிட்டால்—சில வியாபாரிகள் விரும்புவது போல அவர்களிடத்திலேயே விட்டுவிட்டால் நிலைமை சரியாகப் போய்விடும் என்றால்—அப்படி விட்டு விடத்தான் அரசாங்கமும் விரும்பியது. இது வரையில் பொறுத்துப் பார்த்தோம். அப்படிப் பார்த்துக் கொண்டே இருந்து பயன் இல்லை. விலைவாசியைக் கட்டுப் படுத்த முடியாது என்பது தான் எங்கள் அநுபவம். ஏறினவிலை இறங்கவில்லை. அந்த விலை அதிகமாக உயர்ந்தது என்றும் சொல்வதற்கில்லை. கேரள நாட்டுக்கு ஏராளமாகப் போவது தடை பட்டால் விலை குறையாதா என்று பார்த்தோம். விலை அப்படியே இருக்கிறது. இதில் கண்காணிப்போடுதான் இருக்கிறோம். குறுவை சாகுபடியின் போதே ஏன் விலை நிர்ணயித்து கொள்முதல் செய்யக் கூடாது என்று கேட்டார்கள். குறுவை அறுவடையின்போது விலை இறங்கலாம் என்று எதிர்பார்த்தோம். விலை இறங்கியிருந்தால் அப்படியே விட்டு விடலாம் என்பது தான் அரசாங்கத்தின் நோக்கம். முன்பு ஏறிய அதிக விலை அப்படியேதான் இருந்தது. சம்பா சாகுபடி நெருங்கின சமயத்திலாவது விலை குறைந்தால் அப்படியே விட்டு விடலாம் என்று தான் எதிர்பார்த்தோம். அப்படிக் குறைவதாக இல்லை. இது இந்த ராஜ்யத்தில் மட்டும் அல்ல. மற்ற ராஜ்யங்களிலும் இந்த நிலைமைதான் இருந்தது. அதன்பேரில் தான் மத்திய அரசாங்க மந்திரிகளும், ராஜ்ய முதல் அமைச்சர்களும் சேர்ந்த நாஷனல் டெவெலெப்மெண்டு கவுன்ஸிலில் இதைப் பற்றி விவாதிக்கப்பட்டது. " விலை இப்படி ஏறிக்கொண்டே போவதைப் பார்த்துக் கொண்டிருந்தால் ஐந்தாண்டுத் திட்டத்தை சரியாக நிறைவேற்ற முடியாது. விலையைக் கட்டுப் படுத்த சில திட்டவட்டமான நடவடிக்கைகளை மேற்கொண்டாக வேண்டும். அந்த முறையில் ராஜ்ய அரசாங்கங்கள் தங்கள் தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டும் " என்றார்கள். அந்த முறையில் ராஜ்ய அரசாங்கங்கள் ஸ்டேட் டிரேடிங் சம்பந்தமாக தங்கள் அபிப்பிராயங்களைத் தெரிவித்திருக்கின்றன. அவற்றை ஆராய்ந்து வருகிற மாதம் நாஷனல் டெவெலெப்மெண்டு கவுன்ஸில் முடிவு செய்யக் கூடும்.

(Mr. Speaker in the Chair.)

கனம் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டார்கள், " எல்லாவற்றையும் நாஷனல் டெவெலப்மெண்டு கவுன்ஸிலிடமே விட்டு விட்டு அவர்கள் செய்யட்டும் என்று எதிர்ப்பார்த்துக் கொண்டிருப்பதில் பயன் இல்லை," என்று. அப்படி இல்லை. உணவு நிலைமையைப் பற்றி நாம் ஏதோ நமக்குள் முடிவு செய்து கொள்கிறோம் என்றால் பயன் இல்லை. குறிப்பாக நம் ராஜ்யத்தில் விலையைக் கட்டுப்படுத்தி, பக்கத்து ராஜ்யத்தில் சில நாட்கள் விலை கட்டுப்படுத்தப்படாமல் இருந்தபோதே இங்கு நம்மால் சரியாக கட்டுப்படுத்த முடியவில்லை. ஆகையால் இதைப் பொதுவாக எல்லா ராஜ்யங்களுமாகச் சேர்ந்து பொதுப் பிரச்னையாகக் கருதி ஒரு நல்ல முடிவுக்கு வந்தால் சரியான முறையில் கட்டுப்பாடு செய்ய முடியும். நாஷனல் டெவெலப்மெண்டு கவுன்ஸிலில் ராஜ்ய முதல் அமைச்சர்கள் தான் இருக்கிறார்கள், மத்திய அரசாங்க அமைச்சர்களும் இருக்கிறார்கள். இவர்கள் எல்லோரும் சேர்ந்தது தான் திட்டக் குழு. எல்லோரும் கலந்து பேசினால் ஒரு நல்ல முடிவுக்கு வரலாம். ஸ்டேட் டிரேடிங் முறையைக் கொண்டு வர வேண்டும் என்பது எல்லோராலும் பொதுவாக ஒப்புக்கொள்ளப்பட்டது. அந்த வகையில் தான் இப்போது ஆலோசனை செய்யப்படுகிறது. அதற்கு முதற்படியாகத்தான் விலை இப்போது எல்லா ராஜ்யங்களிலும் நிர்ணயிக்கப்படுகிறது. இந்த நடவடிக்கையை முன்னாலேயே

28th March 1959] [Sri M. Bhaktavatsalam]

எடுத்திருக்கலாமே என்று சொன்னதற்குத்தான் நான் பதில் சொன்னேன். அரசாங்கம் அதை ஏன் எடுத்துக் கொள்ளவில்லையென்றால் அவசரப்பட்டு ஒன்றும் முடிவு செய்யவேண்டாம் என்று தான் இருந்தார்கள். இப்போது எடுத்துக் கொண்டிருப்பதில் தவறு ஒன்றும் இல்லை. இந்த மாதிரியாக ஸ்டேட் அளவில் ப்ரொக்யூர்மெண்டு செய்வது நல்லது என்பதும் பொதுப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. நான் முன்பும் வற்புறுத்தினேன். விலை நிர்ணயிப்பது என்றால் தென் மண்டல ராஜ்யங்களைப் பொறுத்த மட்டில் விலை ஒரே மாதிரியாக நிர்ணயிக்கப்பட வேண்டும் விலை நிர்ணயம் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும், என்பதை மத்திய சர்க்காரிடத்தில் வற்புறுத்தினேன். மற்ற ராஜ்யப் பிரதிநிதிகளும் ஒத்துக்கொண்டார்கள். இன்று எல்லா ராஜ்யங்களிலும் ப்ரைஸ் கண்டிரோல் இருக்கிறது. இங்கே விலை குறைவாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அந்த அந்த ராஜ்யங்களைக் கலந்து கொண்டு மத்திய அரசாங்கம்தான் விலையை நிர்ணயித்துப் பிரகடனம் செய்கிறது. கேரள ராஜ்யத்தில் கூட கொஞ்சம் தாமதமானதற்குக் காரணம் அவர்களைக் கலந்துகொள்வதில் ஏற்பட்ட தாமதம் தான். இந்த விலைகள் ஏறக்குறைய ஒரே மாதிரியாகத்தான் நிர்ணயம் செய்யப்படுகிறது. கூடக் குறைவு ஒன்றும் இல்லை. இங்கே என்ன கட்டுப்பாடோ அதே மாதிரி தான் ஆந்திராவில். மைசூரிலும் அப்படித்தான். ஆந்திராவின் மீது யாரும் வலுக்கட்டாயமாகச் சுமத்தவில்லை. அவர்களே தான் ஒப்புக்கொண்டார்கள். (ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை : அப்படியானால் அங்கிருந்து கட்டுப்படுத்தப்பட்ட விலைக்கு நெல் ப்ரொக்யூர்மெண்டு செய்து இங்கே ஏன் கொண்டுவர மத்திய அரசாங்கம் முயற்சிக்கவில்லை.) அப்படி நான் சொல்லமாட்டேன். வேறு ஒரு ராஜ்யத்தில் என்ன நடக்கிறது என்று நான் சொல்லமுடியாது. நம் விலைக்கு அங்கிருந்து வரவில்லை. அங்கே என்ன நடக்கிறது என்பது எனக்குத் தெரிந்தாலும்கூட இங்கே அதைச் சொல்வது முறை அல்ல. எனக்குத் தெரியவும் தெரியாது. மத்திய அரசாங்கம் ராஜ்ய அரசாங்கங்களுடைய விஷயத்தில் ஓரளவு தான் தலையிடலாம். அதிகமாகத் தலையிடுவதை நாமே ஒத்துக்கொள்ள மாட்டோம். அதை யாரும் ஒத்துக்கொள்ளமாட்டார்கள்.

பொதுவாக நம் ராஜ்யத்தில் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை விவசாயிகளுக்குப் போதவில்லை என்று சில அங்கத்தினர்கள் குறிப்பிட்டார்கள். ஒன்று கவனிக்கவேண்டும். சில்லரை விலை ஏழை மக்களின் வாங்கும் சக்திக்கேற்ற அளவு குறைய வேண்டும். ஒரு படி அரிசி ஒரு ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது சரியென்று அங்கத்தினர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள் என்று நான் நினைக்கவில்லை. விவசாயிகளுக்கு 2 ரூபாய் வருவதாக இருந்தாலும் அதை நாங்கள் எதிர்க்கவில்லை. ஆனால் எந்த உறுப்பினரும் மட்ட ரக அரிசி படி ஒரு ரூபாய் என்று நிர்ணயிக்கலாம் என்று சொல்லமாட்டார்கள். ஒரு ரூபாய் என்று மட்டரக அரிசி விற்றால் நிச்சயமாக விவசாயிகளும் பாதிக்கப்படுவார்கள் என்று மீண்டும் வற்புறுத்திக்கூற விரும்புகிறேன். இப்போது அதிகமாக ப்ரொக்யூர்மெண்டு ஆகவில்லை என்று கூறினார்கள். அது ஓரளவு ஆகியிருக்கிறது. உடனடியாக எல்லாவற்றையும் வாங்கிவிடவேண்டும் என்ற கவலை இல்லை. ஏதோ 30 ஆயிரம் டன்னுக்கு ஆகியிருக்கிறது. மொத்தத்தில் இன்று அல்லது நாளைக்குள் 2 லட்சம் டன் அரிசியையும் வாங்கிவிடவேண்டும் என்பது இல்லை. தமிழ் நாட்டில் தானியம் வியாபாரிகளிடத்தில் இருக்கிறது. கணிசமான அளவுக்கு ப்ரொக்யூர்மெண்டு செய்ய முடியும் என்ற நம்பிக்கை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதைப்பற்றி அரசாங்கத்திற்கு கவலை இல்லை. கனம் அங்கத்தினர்களும் கவலைப்படவேண்டாம் என்று சொல்வேன். (ஸ்ரீ எஸ். எம். அண்ணாமலை : மார்க்கெட்டில் அரிசி கிடைப்பது தான் லாட்ரியாக இருக்கிறது.) அதுதான் தப்பு. நேற்று மாலை ராமநாதபுரம் கலெக்டரோடும், மதுரை கலெக்டரோடும் பேசிக்கொண்டிருந்தேன். அங்குள்ளவர்கள் வேலை இல்லை, பஞ்ச நிலைமை என்று வெளியே போய்க்கொண்டிருந்தாலும் கூட அந்த மாவட்டங்களில் அரிசி இல்லை யென்ற குறையே இல்லை. தொழிலாளர்களால் உயர்ந்த ரக அரிசி வாங்க முடியாது. தொழிலாளர்கள் வாங்கக் கூடிய மட்டரக அரிசி விலை ஏறி

விடக்கூடாது. அதைப் பற்றித்தான் ராமநாதபுரத்திலும் விசாரித்தேன். மதுரையிலும் விசாரித்தேன். சென்னையிலும் அடிக்கடி விசாரித்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே கனம் அங்கத்தினர் பேசுகின்ற பாஷையில் சொன்னால் மார்க்கெட்டில் அரிசி "லாட்ரி" இல்லை. இப்போது கண்ட்ரோல் வந்த பிறகு பொதுவாக இரண்டணு குறைந்து தான் இருக்கிறது. ஒரு ரூபாயாக இருந்தது 14 அணுவுக்கு வந்திருக்கிறது. குறிப்பாக என்.ஜி.ஓ-க்கள் பச்சை அரிசிதான் வாங்கிச் சாப்பிடுவார்கள். அதுவும் கூட ரூ. 1-4-0 விற்றது ரூ. 1-1-0 ஆகக் குறைந்துதான் இருக்கிறது. வியாபாரம் ஸ்தம்பித்துவிட்டது என்று சொன்னார். அப்படியொன்றும் ஸ்தம்பிக்கவில்லை. சிலர் அப்படி ஸ்தம்பிக்க வேண்டும் என்றே சில காரியங்களைச் செய்கிறார்கள். வியாபாரிகளுக்கு உண்மையான கஷ்ட நஷ்டங்கள் இருந்தால் சர்க்கார் அதைக் கவனித்து ஆவன செய்யும். திரு. சங்கரன் கூட கவலையோடு பேசினார்கள். வியாபாரிகளிடத்தில் சில விஷயங்களைச் சொன்னவுடன் திருப்தியோடு சென்றார்கள்.

ஆந்திராவிலிருந்து அரிசி வாங்குகிறவர்களுக்கு சில வசதிகள் வேண்டுமென்று கேட்டார்கள். அவர்கள் சொல்லுவதை நாங்கள் ஆராய்ந்து கூடியதைச் செய்கிறோம். பற்றுக்குறை பற்றி எல்லோருக்கும் தெரியும். அங்கே இருக்கும் தான்யங்கள் கள்ளமார்க்கட்டுக்கு அதிக விலைக்கு நமக்குத் தெரியாமல் கணக்கு இல்லாமல் போய்விடக்கூடாது என்பதற்காகத்தான் கொள்முதல் செய்கிறோம். விவசாயிகளைப் பொறுத்த வரையில் குறிப்பிட்ட தான்யத்தின் விலை குறைவாக இருப்பதை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்கும் போது கவனிக்கிறோம். அவ்வப்போது மாற்றிக் கொண்டே வருகிறோம். வியாபாரிகளுக்கு சில கஷ்டங்கள் இருக்கின்றன. ப்ரொக்யூர்மெண்டில் உண்மையான கஷ்டம் இருக்கிறதா என்பதைப்பற்றி கவனிக்கிறோம். கவனித்து வேண்டிய பரிகாரத்தை அளிக்கிறோம். ஆகவே அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் அதையெல்லாம் கவனிக்கும்.

தோட்டத் தொழிலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் தந்தி கொடுத்திருக்கிறார்கள். நீங்கள் ஒரு சலுகை கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இந்தச் சலுகைகளை வாங்கிக் கொண்டு மறுபடியும் தந்தி கொடுக்கிறார்கள். கொஞ்ச நாள் சென்று வியாபாரிகள் தந்தி கொடுக்கிறார்கள். ஆனால், இப்பொழுது இருக்கும் நிலைமையிலே எதுவும் கவலைக்கு இடம் இல்லை. அரிசி இல்லாத குறை எங்கும் இல்லை. விலை ஓரளவு குறைந்திருக்கிறது. அதனால் திருப்தி அடையவில்லை. நிரந்தரமாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்ற முறையிலேதான் இப்பொழுது ப்ரொக்யூர்மெண்ட் இரண்டு லட்சம் டன் செய்வது என்று தீர்மானித்திருக்கிறோம். லெவி செய்யலாம் என்று கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். லெவி முறையிலே வாங்குவதென்றால் என்ன அர்த்தம்? பிச்சை வாங்குவதாக ஆகிவிடும். இதனால் பழைய ஞாபகம் எல்லாம் வந்துவிடும். விவசாயிகளுக்கு தொல்லை வரும். வாங்கிய தான்யத்தை குறைந்த விலைக்கு நியாய விலை கடைகள் மூலமாக ஓரளவு விற்கலாம். கூட்டுறவு ஸ்தாபனங்கள் கேட்கிறார்கள். ஹாஸ்டல் போன்ற ஸ்தாபனங்கள் கேட்கிறார்கள். அவர்களுக்குக் குறைந்த விலைக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு வாங்கி விற்று அவர்களுக்குச் சப்ளை செய்ய ஏற்பாடு செய்யலாம்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : காஸ்ட் ஆப் எஸ்டாபிளிஷ்மெண்ட் லட்சக்கணக்காகப் போய் அதை டாக்ஸ் பேயர் தலையிலேயே வைப்பதைவிட லெவி முறையை வைத்தால் இரண்டு லட்சம் டன்களுக்கு மேல் சர்க்கார் விவசாயிகளிடமிருந்து எதிர்ப்பார்க்க முடியும் என்பதைத்தான் நான் குறிப்பிடவிரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : இப்பொழுது இருக்கும் ஏற்பாட்டின்படி தான்யம் வாங்கும் ஆபீசர் சில பேர்தான் இருக்கிறார்கள். கூட்டுறவு சங்கங்கள்தான் கொள்முதல் செய்கிறார்கள். அவர்களுடைய சிப்பந்தி செலவு இந்த மார்ஜினிலே போகும். ஸ்டேட் டிரேடிங்

28th March 1959] [Sri M. Bhaktavatsalam]

கார்ப்பொரேஷனை வைத்து அவர்கள் மூலமாக செய்யலாம். கூட்டுறவு மூலமாக இருந்தால் சிப்பந்திகளுக்கு என்று அதிக செலவு ஏற்படாது. என்.ஜி.ஓ.க்களுக்கெல்லாம் மலிவாக கொடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அதை நான் வற்புறுத்திக் கொண்டு வருகிறேன். இந்தச் சென்னை ராஜ்யத்தை பொறுத்தவரை என்.ஜி. ஓக்கள் தங்களுக்குள்ளேயே கூட்டுறவு சங்கங்களை அமைத்துக்கொண்டால் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கும் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யலாம். பல தொழிலாளர் கூட்டுறவு சங்கங்கள் மற்ற கூட்டுறவு சங்கங்கள் செய்வது போல் அதையும் செய்யலாம்.

SRI S. M. ANNAMALAI : ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் மூலமாகத்தானே வினியோகிக்கப்போகிறீர்கள்.

*THE HON. SRI M. BHAKTAVATSALAM: முழு ஸ்டேட் டிரேடிங் வந்த பிறகுதான் அதை ஏற்றுக்கொள்ள முடியும். ஆகவே பற்றுக் குறை பிராந்தியம், உபரி பிராந்தியம் என்று பார்க்கவில்லை. இருப்பதை வாங்கி பற்றுக்குறை பிராந்தியத்திற்கு அனுப்பி விலை ஏறாமல் பார்க்க வேண்டியிருக்கிறது. உபரியாக இருக்கும் இடத்தில் விலை ஏறாமல் இருக்கலாம் ப்ரொக்யூர்மெண்ட் வேண்டாம் என்று சொல்வது வியாபாரிகள் தான். விவசாயிகள் இதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம். ப்ரொக்யூர்மெண்ட் முறையில் வாங்கி விலையைக் கண்ட்ரோல் செய்வதுதான் அடிப்படையான நோக்கம்.

*SRI S. M. ANNAMALAI : மத்திய அரசாங்க அமைச்சர்தான் ஏற்றுக் கொள்ளவில்லையே ?

*THE HON. SRI M. BHAKTAVATSALAM : பின்னால் ஸ்டேட் டிரேடிங் என்று வரும்போது பார்த்துக்கொள்ளலாம். கனம் அங்கத்தினர் ஆதித்தன் அவர்கள் அடிக்கடி வற்புறுத்திக் கொண்டிருப்பது கேரளாவிற்கு போவதை நிறுத்திவிட வேண்டும் என்பது. கேரளாவிற்குப் போவதை நிறுத்திவிடுகிறோம் என்றால், அவைகளை நாமே விற்கவேண்டும். கேரள ராஜ்யத்திலே பற்றுக்குறை இருக்கும்போதுகூட பாலகாட்டிலிருந்து கோயம்புத்தூருக்கு அரிசி வருகிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படி விற்பது சகஜம். பாலகாட்டிலிருந்து கோயம்புத்தூருக்கு அரிசி வந்து விற்கப்படுவதற்கு தடை இருக்கக்கூடாது. நடமாட்டம் ரொம்ப நல்லது. அது அவசியமும் கூட. விவசாயிகளுடைய நன்மைக்கே இது நல்லது. ஆந்திராவிலே 5 லட்சம் டன் அரிசி உபரியாகி இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆனால் அங்கு விலை குறைந்திருக்கிறதா அல்லது நம்மைவிட அங்கு விலை அதிகமாக இருக்கிறதா என்று பார்த்தால் அங்கு ஓரளவிற்கு விலை அதிகமாக இருக்கிறது என்று சொல்கிறார்கள். ஆகவே அரிசி போவதை தடை செய்து விட்டால் மாத்திரம் விலை குறைந்து விடாது. வியாபாரிகள் ஸ்பெகுலேஷன் செய்தால் அப்பொழுதுதான் கோளாறு ஏற்படுகிறதென்று சொல்லிக்கொண்டு வருகிறோம். அதற்காகத்தான் மற்ற ராஜ்யங்களிலே இது சீராக அமுல் நடத்தப்படவேண்டும். ஆனால் தென் மண்டலம் அமைப்பதிலே பலன் இல்லாமல் இல்லை. பெரிய பலன் என்னவென்றால் தென் மண்டல ராஜ்யங்களை விட்டு அரிசி வெளியே போவதில்லை. மத்திய அரசாங்கம் பர்மிட்டோடுதான் போக வேண்டும். இல்லா விட்டால் போகமுடியாது என்ற நிலைமை இருப்பது ஒரு பெரிய அனுகூலம். இதுவரை மண்டல அமைப்பு இருந்ததால் ஏமாறிவிட்டோம் என்று எண்ணவேண்டாம். இது ஒரு பெரிய அனுகூலம். கண்ட்ரோல் அமுலுக்கு கொண்டுவருவது என்றால் எல்லா ராஜ்யங்களும் முடிவு செய்து அந்த முறையை மண்டலத்தில் உள்ள எல்லா ராஜ்யங்களும் மேற்கொள்ள வேண்டும். ஏதோ ஒரு ராஜ்யம் மட்டும் மேற்கொண்டு மற்ற ராஜ்யங்கள் மேற்கொள்ளாவிட்டால் சரியாக நடக்காது. இது நம்முடைய அபிப்பிராயத்தை மட்டும் பொறுத்தது அல்ல. ஆந்திர ராஜ்யம், கேரள ராஜ்யம் எல்லா ராஜ்யங்களும் ஏற்றுக்

[Sri M. Bhaktavatsalam] [28th March 1959

கொள்ள வேண்டும். கேரளா ராஜ்யம் ஸ்டேட் டிரேடிங் முறையை வர வேற்கிறது. கேரள ராஜ்ய முதல் மந்திரியுடன் நான் பேசிக் கொண்டிருந்தேன். ஸ்டேட் டிரேடிங் பற்றி இன்னும் முடிவாகவில்லை. நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே முடிவாக வேண்டியது. ஸ்டேட் டிரேடிங் எந்த பாட்டர்னில் அமையவேண்டும் என்பதுபற்றி இன்னும் முடிவாகவில்லை. நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலிலே முடிவாக வேண்டியது. ஸ்டேட் டிரேடிங் எந்த பேட்டனில் அமைய வேண்டும் என்பதுபற்றி இந்த ராஜ்யத்தினுடைய அபிப்பிராயத்தை கனம் அங்கத்தினர்களுக்கு தெரிவிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு நான் தெரிவித்தேன். ஸ்டேட் டிரேடிங் சீராக நடைபெற வேண்டும். இது தனி சோன் ஆக இருக்க வேண்டும். ஆந்திரா அரசாங்கத்தின் அப்பிராயமும் இதுதான். எனக்கு தெரிந்தவரையில் மற்ற முதல் அமைச்சர்களெல்லாம் சேர்ந்து நேஷனல் டெவலப்மெண்ட் கவுன்சிலில் ஸ்டேட் டிரேடிங் எந்த பேட்டனில் அமைப்பது என்பது இனி முடிவு செய்யவேண்டிய விஷயம். கேரளாவிற்கு அரிசி போவதை நிறுத்திவிட்டால் போதும் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்வதற்கில்லை. இப்பொழுது நெல் போவதைத் தடுத்துவிட்டால் போதுமா ? அரிசி போய்க் கொண்டிருக்கிறதே என்று சொன்னார்கள். அரிசி ஓரளவு போகலாம். போவதற்குத் தடை இல்லை. நெல் போவதற்கும் தடை இல்லாமல் இருப்பதால் எவ்வளவு நெல் போகிறது என்று கூட தெரிவதில்லை. வியாபாரிகளிடத்திலிருந்து நேரடியாக வாங்கிக்கொள்ளுகிறார்கள் என்று தகவல் வந்தது. உற்பத்தியாளர் ஒருவர் கேரள வியாபாரியோடு தொடர்பு கொண்டு அவர்கள் கணக்கில் தானியமும் சேமித்து வைத்திருப்பதாகக்கூட தகவல் கிடைத்தது. எவ்வளவு போகிறது என்ற கணக்குத் தெரியாமல் இருந்தது. நெல் போவதைத் தடுக்க வேண்டும். கேரளாவில் அதிகமாக மில்கள் இல்லை. முறைப்படி கேட்டால் பர்மிட் கொடுக்கிறோம். இது விஷயமாக கேரள அரசாங்கம் இந்த அரசாங்கத்தோடுகடிதப் போக்குவரத்து நடத்திக்கொண்டிருக்கிறது. ஆகையால் இங்கிருந்து நெல் வெளியே . போகக்கூடாது என்றால், நெல் வெளியே செல்வதை நாமே தடுப்பதற்கில்லை. இந்த விஷயத்தை மத்திய அரசாங்கத்தாரிடம் தெரிவித்தோம். அவர்களும் மனமுவந்து அதற்கான தடையை விதித்தார்கள். எனவே நமது ராஜ்யத்திலிருந்து அங்கே அரிசி போகிறது என்றால் அது நமக்குத் தெரிந்து தான் போகிறது. கேரள ராஜ்யத்திலுள்ளவர்கள் நமது ராஜ்யத்திலிருந்து அரிசியை அதிக விலை கொடுத்து வாங்குகிறார்கள். அதனால் தான் தென் மண்டலம் சரியாக நடக்க வில்லை என்று சொன்னேன். அந்த ராஜ்யத்திற்கு இங்கிருந்து எவ்வளவு அரிசி போகிறது என்பதை நாம் சரியாக மதிப்பிட்டு விடமுடியும். இருந்தாலும், நாம் இங்கே வேண்டியது ப்ரொக்யூர் செய்ய முடியும். நெல் வரையில் தடை விதிக்க வேண்டும் என்று நாங்கள் மத்திய அரசாங்கத்திடம் சொன்னோம். அதுவும் நெல் வரையில் தடை விதித்திருக்கிறது.

ஸ்டேட் ட்ரேடிங் சம்பந்தமாக இந்த அரசாங்கம் எவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கிறது என்றும் அதை எந்த வகையில் உருவாக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருக்கிறது என்றும் நான் சொன்னேன். மற்ற ராஜ்ய அரசாங்கங்களுடன் கலந்தாலோசிக்க விரும்புகிறோம். மற்ற ராஜ்ய அரசாங்கங்களுடன் கலந்தாலோசித்த பிறகு சரியான திட்டம் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கிறோம். எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் மத்திய அரசாங்கமும் இதற்கெல்லாம் ஸ்டேட் டிரேடிங் ஒன்று தான் வழி என்பதை ஒப்புக்கொண்டிருக்கின்றன. இப்போதிருக்கும் நிலைமையில் ஸ்டேட் டிரேடிங் அவசியம். அதில்லாமல் வேறு வகையில் இதைச் செய்யலாம் என்றால் அதற்கான உருப்படியான யோசனைகளை கனம் அங்கத்தினர்கள் சொன்னால் அவைகளை நாங்கள் கவனிக்கலாம். ஆனால் வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. எனக்குத் தெரிந்த வரையில், ஸ்டேட் ட்ரேடிங்கை எதிர்ப்பதற்கில்லை. விலைகளை அதிகப்படுத்தியிருக்கலாம் என்று சொல்கிறார்கள். விவசாயிக்கு விவசாயம் செய்வதற்கு அதிகமாகச் செலவாகிறது என்பது உண்மைதான். ஆனால் நான் முன்பு குறிப்பிட்டதுபோல, வாங்கிச் சாப்பிடும் ஏழை மக்களின்

28th March 1959] [Sri M. Bhaktavatsalam]

நிலைமையயும் கவனிக்க வேண்டியிருக்கிறது. அவர்களுடைய சக்திக்கு எட்டாதபடி விலையை உயர்த்துவது சரியல்ல. விவசாயிகள் தானியத்தை விற்காமல் வைத்துக்கொண்டிருந்தால் தகுந்த விலையைக் கொடுத்து அதை வாங்குவதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது என்று ஸ்ரீ கோதண்டராமன் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். இம்மாதிரி யாக வாங்குகிறார்களே என்று பின்னால் இருக்கும் கனம் அங்கத்தினர் சொன்னார். புகார்களை அரசாங்கம் கவனிக்கும். விஷயங்கள் என் கவனத்திற்கு வந்தாலும் சரி, அதிகாரிகளின் கவனத்திற்கு வந்தாலும் சரி, அவை கவனிக்கப்படும். ஆனால் தானியங்களை வைத்துக்கொண்டி ருப்பவர்கள் அதிகமான விலைக்கு இவைகளை விற்கலாம் என்ற எண்ணத் தில் வைத்துக்கொண்டிருந்தால், அப்போது " ரிக்விஸிஷன் " செய்ய வேண்டியது தான் என்று தீர்மானித்திருக்கிறோம்.

ஸ்டேட் டிரேடிங் திட்டத்தில் அரசாங்கம் நியமித்திருக்கும் ஏஜென்ஸி ஒருநியாயமான விலையில், ரொம்பக் குறைவான விலையில் தானியங்களை வாங்குகிறது. இது பன்முறை தெரிவிக்கப்பட்டிருக்கிறது. விவசாயிகள் தங்கள் தானியங்கள் விற்பனையாகவில்லையானால் கூட்டுறவு ஸ்தாபனங் கள், க்ரெயின் பர்சேஸிங் ஆபீசர்ஸ், கலெக்டர் ஆகியவர்களை அணுகினால் அவர்கள் அவைகளை வாங்கிக்கொள்வதற்கு ஏற்பாடு செய்வார்கள். கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு தானியங்களைக் கொடுக்கவில்லை என்றால் கலெக்டர்களை அணுகினால் ஆவன செய்யப்படும். கூட்டுறவு ஸ்தா பனங்களை ஆங்காங்கு அரிசி கிடைக்கக்கூடிய இடங்களில் இணைத்து அவை களுக்கு நியாயமான விலைக்கு கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டி ருக்கிறது. எல்லாவற்றையும் அரசாங்கம் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறது. எல்லா விஷயங்களிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது.

ஸ்டேட் ட்ரேடிங்கை சிறிது விவரிக்க விரும்புகிறேன். முதலில் ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் ; இரண்டாவது ஜில்லா கோவாப்ரேட்டிவ் சொஸைட்டீஸ் ; அதற்குப் பிறகு கிராம கூட்டுறவு சொஸைட்டிகள் மூல மாகவும் வேறு ரிடெயில் டீலர்ஸ் மூலமாகவும் கிராமங்களில் விநியோ கிப்பது. இது தான் ஸ்டேட் ட்ரேடிங்-ன் விரிவான அமைப்பு என்று சொன் னேன். இன்று முக்கியமாக கிராம கூட்டுறவு ஸ்தாபனங்கள் விஸ்தரிக் கப்பட வேண்டும். கிராமங்களில் பல்நோக்கு கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்படவேண்டும். இப்போது நமது ராஜ்யத்தில் 15,862 கிராமங் கள் இருக்கின்றன என்று நினைக்கிறேன். இப்போதே 12,000 கிராமங் களில் 12,000 கிராம கூட்டுறவு ஸ்தாபனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற இடங்களிலும் பல்நோக்கு கூட்டுறவு ஸ்தாபனங்களை அமைக்க ஏற்பாடு செய்து வருகிறோம். இதை சீக்கிரம் செய்ய வேண்டுமென்பது தான் என் எண்ணம்.

உரம் சம்பந்தமாக பேசப்பட்டது. அது சம்பந்தமாக புகார்கள் வந்து கொண்டிருக்கின்றன. கூட்டுறவு ஸ்தாபனங்களின் மூலம் இதைச் செய் வதை விட இதற்கு தனி நபர்களை எடுத்துக்கொண்டால் இது சரியாக நடக்கும் என்று சில கனம் அங்கத்தினர்கள் சொன்னார்கள். அதிகமான கூட்டுறவு ஸ்தாபனங்களிடம் இப்பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. கூட்டுறவு ஸ்தாபனங்களைப் பற்றி புகார்கள் வருகின்றன. அவை கவனிக் கவும் படுகின்றன. இதில் முக்கியமான குறை, பற்றுக்குறை. அரசாங்கம் இதை வெளியிலிருந்து வாங்கிக் கொடுக்கிறது. வெளியிலிருந்து வர வழைத்து கொடுக்கும் நிலையில் அரசாங்கம் அதிக விலைக்கு வெளி யிலிருந்து வாங்க வேண்டிவந்தால் கஷ்டம் எற்படுகிறது. இருந்தாலும் அரசாங்கம் கூடிய வரையில் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு இதை குறைந்த விலைக்கே விற்று வருகிறது. மேலும் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கு வரும் நஷ்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்கிறது. இத்துடன் என் வார்த்தையை முடித்துக்கொள்கிறேன்.

SRI J. MATHA GOWDER : Sir, on a point of information.

MR. SPEAKER : No, I am sorry I cannot allow as it is 1 p.m. The rest of the Demands have to be guillotined. I shall now put the cut motion moved by Sri S. M. Annamalai to vote. The question is :

"That the allotment of Rs. 5,59,20,000 under Demand XLIII—Capital Outlay on Schemes of Government Trading—be reduced by Rs. 100."

The cut motion was put and lost.

7 p.m. MR. SPEAKER : I shall now put the Demand to vote. The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 5,59,20,000 under Demand XLIII—Capital Outlay on Schemes of Government Trading."

The Demand was put and carried and the Grant was made

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 10,000 under Demand XLIII—Capital Outlay on Schemes of Government Trading."

The Demand was put and carried and the Grant was made.

OTHER DEMANDS

DEMAND V—REGISTRATION DEPARTMENT.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 38,82,000 under Demand V—Registration Department.

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a sum not exceeding Rs. 2,50,000 under Demand V—Registration Department."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND VI—MOTOR VEHICLES ACTS ADMINISTRATION.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 13,24,800 under Demand VI—Motor Vehicles Act Administration."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

"That the Government be granted a further sum not exceeding Rs. 10,000 under Demand VI—Motor Vehicles Acts Administration."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND VII—GENERAL SALES TAX AND OTHER TAXES AND DUTIES ADMINISTRATION.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,81,85,300 under Demand VII—General Sales Tax and other Taxes and Duties Administration."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 2,00,000 under Demand VII—General Sales Tax and Other Taxes and Duties Administration."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND X—STATE LEGISLATURE.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 11,71,100 under Demand X—State Legislature."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 10,000 under Demand X—State Legislature."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIII— ADMINISTRATION OF JUSTICE.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,11,80,500 under Demand XIII—Administration of Justice."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 4,20,000 under Demand XIII—Administration of Justice."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XIV—JAILS.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,04,03,100 under Demand XIV—Jails."

The Demand was put and carried and the Grant was made.

[28th March 1959

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 1,20,000 under Demand XIV—Jails."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXVIII—FAMINE.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 3,99,600 under Demand XXVIII—Famine."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXIX—PENSIONS.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,57,35,000 under Demand XXIX—Pensions."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXX—STATIONERY AND PRINTING.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 1,11,34,600 under Demand XXX—Stationery and Printing."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 2,40,000 under Demand XXX—Stationery and Printing."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XXXI—MISCELLANEOUS.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 98,63,400 under Demand XXXI—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a further sum not exceeding Rs. 30,00,000 under Demand XXXI—Miscellaneous."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLII—COMMUTED VALUE OF PENSIONS.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 12,00,000 under Demand XLII—Commuted Value of Pensions."

The Demand was put and carried and the Grant was made.

DEMAND XLIV—LOANS AND ADVANCES BY THE STATE GOVERNMENT.

MR. SPEAKER : The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 18,04,63,000 under Demand XLIV—Loans and Advances by the State Government."

The Demand was put and carried and the Grant was made.

II.—ANNOUNCEMENTS—*cont.*

(4) MESSAGE FROM THE GOVERNOR.

MR. SPEAKER : I have to announce that the Governor has recommended the introduction and consideration of the Madras Appropriation (No. 2) Bill, 1959, in the Madras Legislative Assembly.

V.—GOVERNMENT BILL.

THE MADRAS APPROPRIATION (NO. 2) BILL, 1959.

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I move—

" That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 2) Bill, 1959."

MR. SPEAKER : The question is—

" That leave be granted for the introduction of the Madras Appropriation (No. 2) Bill, 1959."

The motion was put and carried and leave was granted.

THE HON. SRI C. SUBRAMANIAM : I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

I adjourn the House to meet again at 8–30 a.m. on Monday, the 30th March 1959.

The House then adjourned.

VI.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

B.—Reports, Notification and other papers.

50. *Speech of the Hon'ble Minister for Local Administration on Demand XXVII—Civil Works—Grants-in-Aid.*